மொழிபெயர்ப்பு நிகரன்கள்

முனைவர் இரா. சு. முருகன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

UG 7209

மொழிபெயர்ப்பு நிகரன்கள்

முனைவர் இரா.சு. முருகன்
உதவிப்பேராசிரியர்
மொழிபெயர்ப்புத் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-432-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 389

நூல்	:	மொழிபெயர்ப்பு நிகரன்கள்
ஆசிரியர்	:	முனைவர் இரா.சு. முருகன்
பதிப்பு	:	திருவள்ளுவராண்டு 2043, புரட்டாசி முதற்பதிப்பு - செப்டம்பர் 2012
பக்கம்	:	136 + 8
அளவு	:	டெம்மி 1/8
தாள்	:	டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ
படிகள்	:	1200
விலை	:	உரூ. 105.00
ஒளியச்சு	:	முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர்.
அச்சு	:	தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்.

முனைவர் ம. திருமலை
துணைவேந்தர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010
17.09.2012

உலகச் சுழற்சியைக் காலச்சக்கரம் என்றும் காலச்சக்கரம் என்பது மாறிக்கொண்டே இருக்கும் என்றும் சொல்வார்கள். காலம் மாற மாற மனித மனமும் தேவைகளும் மாறிக்கொண்டு தான் இருக்கும். மனிதத் தேவையை ஈடுசெய்வதில் மொழி பெரும்பங்கு வகிக்கிறது. எனவே, மொழியும் காலத்திற்கேற்ப மாற்றம் அடைகிறது. மாற்றம் என்பது வளர்ச்சிக்கு அறிகுறி. எல்லாமும் என் மொழியில் இருக்கிறது; இதில் இல்லாததே இல்லை என்பது தற்புகழ்ச்சிக் கூற்றாகவே அமையும். இல்லாதது எது என்பதைக் கண்டு, அதை அந்த மொழியில் கொண்டு வந்து சேர்ப்பதுதான் அறிவுடைமையாகும். அப்போதுதான் காலத்தின் தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மொழி வளம் பெறும். வளம் பெறும் மொழியே வாழும் மொழியாக — மக்களை வளப் படுத்தும் மொழியாகத் திகழும். இது அறிவியல் யுகம். அடுப்பங் கரையிலிருந்து அண்டவெளி வரை அனைத்தையும் அறிவியல் - தொழில்நுட்பம் ஆக்கிரமித்திருக்கிறது. எனவே, இக்காலத்திலும் இனி எக்காலத்திலும் இதைப் புறந்தள்ளிவிட்டு எம்மொழியும் வாழ இயலாது; வளர முடியாது. அதனால்தான் தமிழ்மொழி வளர்ச்சிக்கு வழிகாட்டிய பாரதியார்,

புத்தம் புதிய கலைகள் - பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

என்று உண்மையை ஒத்துக்கொண்டதோடு

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்

என்று அக்குறையைப் போக்க வழியும் கூறினார்.

உலகெங்கும் உள்ள அறிவியல், தொழில்நுட்பக் கருத்து களை - கண்டுபிடிப்புகளை - படைப்புகளை - பயன்களைத் தமிழ் மொழியின்கண் கொண்டுவந்து சேர்க்க வேண்டியது நம் கடமை யாகும். இதற்கு மொழிபெயர்ப்புக் கலைதான் பெரிதும் கைகொடுக்கும். மொழிபெயர்ப்பு என்பது ஓர் எளிய செயலன்று; அஃது ஓர் அரிய கலை; மொழிபெயர்ப்பாளர் மூல மொழியையும் பெயர்ப்பு மொழியையும் நன்கு அறிந்தவராக இருத்தல் வேண் டும். அதுமட்டும் போதாது; மூலமொழி சார்ந்த மரபுகளை, மக்க ளின் பண்பாட்டுக் கூறுகளை, சொற்கள் - தொடர்கள் உணர்த்தும் குறிப்புப் பொருள்போன்றவற்றையெல்லாம் அறிந்தவராக இருத் தல் வேண்டும். இவ்வளவிற்குப் பிறகும் எந்த வகையில் மொழி பெயர்த்தால் மொழிபெயர்ப்பைப் படிப்போர் மனதில் இதமாய் - முழுமையாய் மூலப்படைப்பு சென்றுசேரும் என்பதையெல்லாம் திட்டமிட்டு மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொள்ள வேண் டும். சுருங்கச் சொல்வதானால் ஒரு மொழிபெயர்ப்பைப் படிக்கும் போது இது மொழிபெயர்க்கப்பட்ட பகுதி எனும் நினைவே எழா மல் மூலநூலைப் படிப்பது போன்ற உணர்வும் இன்பமும் நிறை வும் ஏற்பட வேண்டும். வாசகருக்கு இது ஏற்பட்டுவிட்டால் மொழிபெயர்ப்பாளர் வெற்றி பெற்றுவிட்டார் எனக் கொள்ள லாம். இதற்கெல்லாம் வழிகாட்டுவதாக 'மொழிபெயர்ப்பு நிகரன் கள்' எனும் இந்நூல் அமைந்துள்ளது. மொழிபெயர்ப்பாளர் தகுதி கள், மொழிபெயர்ப்பு வகைகள், மொழிபெயர்ப்பு உத்திகள், மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், மொழி பெயர்ப்பு நிகரன்களின் (நிகரன் = Equivalence) சிக்கல்கள், அவற் றிற்கான காரணங்கள், அணுகுமுறை முதலிய பல்வேறு செய்திகள் பற்றி அழகாகவும் நுணுக்கமாகவும் நூலாசிரியர் விளக்கியுள்ளார். சான்றுக்கு ஒன்று காட்டுதல் பொருந்தும்.

''தமிழிலக்கியம் காட்டும் குறிஞ்சித்திணையைச் சார்ந்த 'குறத்தி'யை (Kuratti) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும்போது

'Gypsy' என மொழிபெயர்க்கின்றனர். ஆங்கில மொழியில் வழங்கும் 'gypsy' ஒரு நாடோடி. ஆனால் தமிழில் குறத்திக்கெனத் தனி நிலம் உண்டு. அவள் நாடோடியில்லை; gypsy, குறத்தி இருவரின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் வெவ்வேறாக இருக்க gypsyயைக் குறத்திக்கு நிகரனாக அமைப்பது சொல்லளவில் சரியாக இருப்பது போலத் தோன்றும் எனினும் கருத்தளவில் gypsy என்னும் நிகரன் மூலநூற் கருத்தினைப் புலப்படுத்தும் நெருங்கிய நிகரனாக அமையவில்லை. தமிழிலக்கியக் கருத்தினின்று விலகி மாறுபட்ட கருத்தை மொழிபெயர்ப்பு நிகரன் புலப்படுத்துகிறது. நிலம் சார்ந்த பெயரை, இனம் சார்ந்த பெயராக மொழிபெயர்ப்பதால் இங்கே கருத்து விலகல் ஏற்பட்டுள்ளது.''

மேற்காணும் பகுதி ஆசிரியர் ஒவ்வொரு செய்தியையும் எவ்வளவு கவனமாகவும் நுணுக்கமாகவும் ஆய்ந்து தந்துள்ளார் என்பதை மெய்ப்பிக்கிறது. நல்லதொரு நூல் தந்துள்ள நூலாசிரியர் என் மாணவர் முனைவர் இரா.சு. முருகன் அவர்களை மனமாரப் பாராட்டி மகிழ்கிறேன். மொழிபெயர்ப்பாளர்கள், அறிஞர்கள், இலக்கியவாதிகள், ஆய்வாளர்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படும் என நம்புகிறேன்.

நன்றியுரை

மொழிபெயர்ப்பு நிகரன்கள் என்ற குறுங்காலத் திட்டம் மேற்கொள்வதற்கு ஆணை வழங்கிய தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் அவர்களுக்கு என்றென்றும் என் நன்றியை உரித்தாக்குவேன். களப்பணிக்கு அனுமதி வழங்கிய பதிவாளர் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மொழிபெயர்ப்பு பற்றிய செய்திகளையும், மொழி பெயர்ப்பு செய்யும்போது ஏற்படும் ஐயங்களையும் தெளிவுபடுத்தி எனக்கு அறிவுரையும் வழங்கிய மொழிபெயர்ப்புத் துறைப் பேரா சிரியர் மற்றும் துறைத்தலைவர், வளர்தமிழ்ப் புலத் தலைவர் முனைவர் ச. இராதாகிருட்டிணன் அவர்களுக்கும், இந்நூல் தொடர்பான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட இலக்கியத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தா. ஈசுவர பிள்ளை அவர்களுக்கும் எங்கள் துறையில் பணியாற்றும் பேராசிரியர் சு.ம. பெருமாள் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர ஆவன செய்த தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தரும் என் ஆசிரியப் பெருந்தகையுமான முனைவர் ம. திருமலை அவர்களுக்கு என்றென்றும் நன்றிக்கடன் பட்டவனாவேன்.

இந்நூலை அழகுற அச்சிட்டு உதவிய தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத்துறை இயக்குநர் திரு வை. கண்ணபுரக்கண்ணன் அவர்கள் உள்ளிட்ட பணியாளர்கள் அனைனவருக்கும், கணிப்பொறியில் வடிவமைப்பு செய்து வழங்கிய தஞ்சாவூர், முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ் திரு வை. இராமமூர்த்தி அவர்களுக்கும் பாங்குடன் என் நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

- முனைவர் இரா.சு. முருகன்

பொருளடக்கம்

	முன்னுரை	*1*
1.	மொழிபெயர்ப்பின் வரலாறு	*5*
2.	மொழிபெயர்ப்பு நிகரன்கள், மொழிபெயர்ப்புக் கொள்கைகள்	*23*
3.	மொழிபெயர்ப்பின் குறைகள், நிறைகள்	*69*
4.	மொழிபெயர்ப்பு நிகரன்களின் சிக்கல்களும், அவற்றிற்கான தீர்வுகளும்	*95*
	முடிவுரை	*129*
	துணைநூற்பட்டியல்	*133*

முன்னுரை
(Preface)

மொழிபெயர்ப்பு இன்று தனிக்கலையாக வளர்ந்து வருகின்றது. பிற மொழிகளில் உள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழன்னைக்குப் படைக்கவும், தமிழ்மொழிக்குப் பெருமை சேர்க்கும் படைப்புகளைப் பிறமொழிகளில் உருவாக்கவும் 'மொழிபெயர்ப்பு நிகரன்கள்' உதவுகின்றது.

இந்தியாபோன்ற வளரும் நாடுகளில் மொழிபெயர்ப்பின் பணி மிகவும் அவசியமானதொன்றாகும். நாளும் வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்ப அறிவை இந்திய மக்கள் யாவரும் அறிந்து வளமடைய வேண்டுமென்றால் அக்கருத்துக்கள் அவரவர்கள் தாய்மொழியில் மக்களைச் சென்று சேரவேண்டும். அதற்கு மொழிபெயர்ப்பு இன்றியமையாததாகிறது.

உலகமெங்கும் ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுவது மனித குலத்திற்கேயுரிய மாண்பு. அதுவே முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக மாறுமானால், சமூக வளர்ச்சியில் தடையேற்படும். ஒரு மொழி பேசுபவர்கள் இன்னொரு மொழி பேசுகிறவர்களைப் புரிந்து கொள்ளும்போதுதான் கொடுக்கல் வாங்கல் நடைபெறும்; நாகரீகம், பண்பாடு வீச்சாகப் பற்றிப் படரும் வேற்றுமைக்குள் ஒற்றுமையை உருவாக்கிட 'மொழிபெயர்ப்பு நிகரன்கள்' அருமையான துணையாகிறது.

இதோடு மட்டுமல்லாமல் நமது இலக்கிய, இலக்கண, அறிவியல், தொழில்நுட்ப பாரம்பரியத்தையும் வளர்ச்சியையும் மேலைநாட்டினர் அறிய வேண்டுமென்றால் நமது படைப்புக்களின் அனைத்து மொழிபெயர்ப்பும் அவர்களுக்குச் சென்று சேரவேண்டும். இதுபோன்ற 'மொழிபெயர்ப்பு நிகன்கள்' தமிழ்கூற நல்லுலகிற்கு அறிமுகப்படுத்தும் விதத்தில் இவை உருவானது.

இக்கொள்கைகளை ஆராய்ந்து அவற்றில் ஏற்படும் சிக்கல்களை ஆதாரங்களுடன் விவாதிப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

0.2. ஆய்வின் கருதுகோள் (Research Hypothesis)

தமிழகத்தில் பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மொழிபெயர்ப்பு நூல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. நவீன் மொழிபெயர்ப்பு நிகரனின் நுட்பங்களைப் பயன்படுத்துவதின் மூலம் 'மொழிபெயர்ப்பு' பற்றிய கருதுகோளை முன்வைத்து இவ்வாய்வு தொடங்கப்பெறுகிறது.

0.3. ஆய்வு முன்னோடிகள் (Pioneers of Research)

இராஜேஸ்வரி தொகுத்த 'மொழிபெயர்ப்பியல் ஆய்வு' (கட்டுரைத் தொகுதி) இடம் பெற்றுள்ளது.

சேதுமணி மணியன் தொகுத்த 'மொழிபெயர்ப்பியல்' (கோட்பாடுகளும் உத்திகளும்), வளர்மதி எழுதிய 'மொழிபெயர்ப்புக்கலை', சிவசண்முகம், தயாளன் எழுதிய 'மொழிபெயர்ப்பியல்', ந.அருணமுறுவல், அமரந்த்தா எழுதிய 'மொழிபெயர்ப்புக் கலை இன்று', இரா.சு. முருகன் எழுதிய 'நாளிதழில் மொழிபெயர்ப்பு', மதிவாணன் ஒப்பில்லா, தொழில்நுட்பக் கலைச்சொற்கள், மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும் எனும் பொருளில் அமைந்த கருத்தரங்கக் கட்டுரைகளும், நூல்களும் இடம்பெற்றுள்ளன.

0.4. ஆய்வின் அமைப்பு (Structure of the Research)

இவ்வாய்வு குறுங்கால ஆய்வு. இது முன்னுரை, முடிவுரை நீங்கலாக,

அ. மொழிபெயர்ப்பின் வரலாறு

ஆ. மொழிபெயர்ப்பு நிகரன்கள், மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

இ. புதுமையாக்கம் - மொழிபெயர்ப்பின் குறைகள், நிறைகள்

ஈ. மொழிபெயர்ப்பின் சிக்கல்களும் அவற்றிற்கான காரணங்களும் எனும் நான்கு இயல்களைக் கொண் டுள்ளது.

மொழிபெயர்ப்பு வரலாறு எனும் பகுதியில் மொழி பெயர்ப்பின் தோற்ற, வளர்ச்சி நிலைகள் விரிவாக ஆராயப் பெறும்.

மொழிபெயர்ப்பு நிகரன்கள், கொள்கைகள் எனும் பகுதி யில் விளக்குவதுடன் அவற்றிற்கான சான்றுகள் கொடுக்கப்படு கின்றன.

மொழிபெயர்ப்பின் குறைகள், நிறைகள் எனும் பகுதியில் இவற்றின் நிலைகள் ஆராயப்பெறும்.

மொழிபெயர்ப்பின் சிக்கல்கள் எனும் பகுதியில் மொழி பெயர்ப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல்களும் அவற்றிற்கான காரணங் களும் பகுத்தாராயப்பெறும்.

0.5. ஆய்வின் பயன் (Benefit of the Research)

சங்ககாலம் தொட்டுத் தொடர்ந்து மொழிபெயர்ப்புகள் செய்தாலும் மற்ற பாடங்களுக்கு உள்ளது போன்று மொழிபெயர்ப் புக்கு என அதிக அளவில் 'தமிழ்வழி' நூல்கள் இல்லை என்பதும், இது போன்ற நூல் வடிவங்கள் தொடர்ந்து வெளிவருவதின் மூலம் மொழிபெயர்ப்பு பொதுமக்கள், மாணவர்களின் மத்தியில் வரலாற்றை நிலை நிறுத்தப்படும்.

இக்கொள்கைகளை ஆராய்ந்து அவற்றில் ஏற்படும் சிக்கல்களை ஆதாரங்களுடன் விவாதிப்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

0.2. ஆய்வின் காரணம் (Research Hypothesis)

[illegible] பயன்படக்கூடிய வகையில் விரல்விட்டு எண்ணக்கூடிய சில மொழிபெயர்ப்பு நூல்கள் மட்டுமே வெளிவந்துள்ளன. நவீன [illegible] இவ்வாய்வு தொடங்கப்பெறுகிறது.

0.3. ஆய்வின் முன்னோடிகள் (Pioneers of Research)

[illegible] 'மொழிபெயர்ப்பியல் ஆய்வுகள்' (கட்டுரைத் தொகுதி) இடம் பெற்றுள்ளது.

[illegible] 'மொழிபெயர்ப்பியல்' (கோட்பாடுகளும் உத்திகளும்), வளர்மதி எழுதிய 'மொழிபெயர்ப்புக் கலை', [illegible] இரா.க. முருகன் [illegible] 'மொழிபெயர்ப்பு', மதிவாணன் ஒப்பிலா, தொழில்நுட்பக் கலைச்சொற்கள், மொழிபெயர்ப்பும் மொழியாக்கமும் [illegible] பொருளில் அமைந்த கருத்தரங்கக் கட்டுரைகளும், நூல்களும் [illegible]

0.4. ஆய்வின் அமைப்பு (Structure of the Research)

இவ்வாய்வு [illegible] முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அ. மொழிபெயர்ப்பின் வரலாறு

ஆ. மொழிபெயர்ப்பு நிகரன்கள், மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

இயல் ஒன்று

மொழிபெயர்ப்பின் வரலாறு

(History of Translation)

மனித குல வரலாற்றில் சைகை மொழியே முதலாவதாகத் தோன்றியது. பின்னர்ப் பேச்சுமொழி தோன்றி, அதன் பிறகே எழுத்து மொழி தோன்றியது. இம்முறையில் எழுத்து மொழி ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகால வரலாற்றைக் கொண்டிருக்கிறது எனலாம். அங்ஙனமாயின் மொழிபெயர்ப்பும் அதே கால அளவைக் கொண்டது என்ற கருதுகோளை நான் முன்வைக்க முடியும். எனினும் அதற்கான ஆதாரங்களை முன்வைப்பது கடினமான பணியாகவே அமையும்.

ஓர் அரசு மற்றொரு அரசை வெற்றி கொண்டபோது மொழிபெயர்ப்பின் பயன் உணரப்பட்டிருக்க வேண்டும். தொலை தூரங்களுக்குச் சென்ற மக்கள் அவ்விடங்களில் இருந்த மக்கள் வேறுமொழி பேசியது கண்டு முதலில் மலைத்தும் பின்னர் அதிசயித்தும், அதன் பிறகு அதைப் புரிந்து கொள்ளவும் முயன்றிருக்க வேண்டும். தொல்பொருளாளர் எதிர்பாராத விதமாக எதையேனும் அகழ்ந்தெடுத்து இதை மெய்ப்பித்தால் ஒழிய நிரூபிப்பது என்பது கடினமாகும்.

பண்டைத் தமிழ்வேந்தர்கள் இமயத்தையும், கங்கையையும் கடாரத்தையும் வென்றதாகப் படிக்கிறோம். மொழியறிவின்றி அவற்றை அவர்கள் எப்படி சாதித்திருக்க முடியும். ஆறுகள், மலைகள், கடல்கள் போன்ற பெரும் புவியியல் எல்லைகளைத் தாண்டிச்

சென்று ஸ்பானிசும், ஆங்கிலமும், பிரெஞ்சும் பரவின. வெற்றி கொண்ட மக்கள் வெல்லப்பட்ட மக்களது மொழிகளைப் புரிந்து தான் இருக்க வேண்டும். இங்ஙனம் மொழிபெயர்ப்பின் தொடக்கம் காலத்தால் முந்தியது எனலாம்.

கிரேக்க அடிமை லிவியஸ் ஆந்த்ரோனிகஸ் கி.மு. 240-ல் 'ஒடிஸி' என்ற காப்பியத்தை லத்தினில் கவிதை வடிவில் மொழி பெயர்த்ததாக அறிகிறோம். எனவே மொழிபெயர்ப்பு கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பே உயர்ந்த நிலையில் இருந்தது தெரிகிறது.

தொல்காப்பியம் மொழிபெயர்ப்புப் பற்றிப் பேசுகிறது,

''தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட்ட யாத்தலொடு அனை மரபினவே''
(பொருள். மரபியல்)

இளம்பூரணர் 'வடமொழி' என்றும், பேராசிரியர் 'பிற பாடை' என்றும் கூறுவதனால் முதலில் வடமொழியிலிருந்தும் பின்னர் வேறு பிற மொழிகளிலிருந்தும் மொழிபெயர்ப்புப் பணி நீண்ட காலமாகவே நடைபெற்று வந்திருத்தல் வேண்டும். தமிழில் மொழிபெயர்ப்பு என்பது இந்திய மொழிகளில் காலத்தால் முற்பட்டது என்பதனைத் தெளிதல் வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் சொற்கள், அவை வழங்கும் முறைபற்றி இயற்சொல், திரிசொல் என்ற இரண்டொடு திசைச்சொல், வடசொல் என்ற வேறு இரு வகைகளும் இருந்தன. அவற்றையும் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

செந்தமிழ்ச் சொல்லாய்த் திரிபு இல்லாமல் கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் எளிதில் பொருள் விளங்கும் சொற்கள் இயற்சொற்கள். ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களாகவும், பல பொருள் உணர்த்தும் ஒரு சொல்லாகவும் அமைத்துக் கற்றவர்கள் மட்டுமே அரிதில் பொருள் உணரக்கூடிய சொற்கள் திரிசொற்கள்.

சமஸ்கிருத மொழிச்சொற்கள் தமிழில் வந்து தமிழின் இயல்புக்கு ஏற்ப வழங்கினால் அவை வடசொல் எனப்படும். அவற்றைத் தற்சமவடசொல், தற்பவவடசொல் என இரண்டாகப்

பிரித்திருந்தனர். மொழிபெயர்ப்பில் பிறமொழிச் சொற்களை ஒலி பெயர்க்கும் பிரச்சினை எழுவதால், இவற்றையும் கருத்தில் கொள்ளல் நன்று. தமிழிலும் சமஸ்கிருதத்திலும் பொதுவாக உள்ள எழுத்துகளாலான சமஸ்கிருதச் சொல் தமிழில் வந்து வழங்கும் போது எத்தகைய மாற்றமுமின்றி இயல்பாய் வழங்கும். இது தற்சமயம் எனப்படும் (தத்+சமம்-தற்சமம், அதற்குச் சமமானது என்று பொருள்படும்).

சான்றாக: கமலம், காரணம், குங்குமம்

சமஸ்கிருதத்துக்கே உரிய ஜ, ஸ, ஹ, க்ஷ என்பன போன்ற எழுத்துக்கள் கலந்து வரும் சமஸ்கிருதச் சொல் தமிழில் வந்து வழங்கும்போது தமிழ் இயல்புக்கு ஏற்ப மாறி வழங்கும். அது தற்பவம் எனப்பட்டது (தத்+பவம்-தற்பவம். அதினின்றும் பிறந்தது எனப் பொருள்படும்).

சான்று:

விஷம்	-	விடம்,
விஜயன்	-	விசயன்,
கிருஷ்ணன்	-	கிருட்டிணன்

அடுத்து வருவது திசைச்சொல். தமிழ், சமஸ்கிருதம் அல்லாத பிறமொழிச் சொற்கள் தமிழ் மொழியில் வந்து அவ்வப் பொருள்களிலேயே வழங்குமானால் அவை திசைச்சொற்கள். ஆகும். இன்றைய மொழி வளர்ச்சிக்குத் திசைச்சொற்களே மிக்பெரும் காரணிகளாக அமைந்திருக்கின்றன. இது குறித்து கூடுதல் அக்கறை செலுத்தினால் அது மொழிபெயர்ப்புப் பணிக்கும் மிகுந்த உறுதுணையாக இருக்கும்.

சான்று:

அச்சன்	மலையாளம்
செப்பு	தெலுங்கு
சிக்கி	கன்னடம்
சாவி, அலமாரி	போர்த்துகீசியம்
கார்டு, கவர்	ஆங்கிலம்

சிப்பந்தி, சிபாரிசு — பாரசீகம்
ஆசாமி, அனாமத்து — அராபி

இந்தச் சொற்கள் பற்றிய விவரங்களைத் தொல்காப்பியம் வழி அறிய முடிவதால் கி.பி.முதல் நூற்றாண்டுகளிலேயே தமிழில் பிறமொழிக் கலப்பும் மொழிபெயர்ப்பும் குறிப்பிடத்தக்க நிலையில் இருந்ததைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இது குறித்து மேல்விவரங்களை அறுபதுகளில் பதிப்பிக்கப்பட்ட நமது கலைக்களஞ்சியத்தில் தேடினால் ஏமாற்றமே அடைவோம். ஏனெனில் இது பற்றிய ஒரு சிறு குறிப்பு கூட அதில் காணப்படவில்லை.

மொழிபெயர்ப்பிலக்கியம் பற்றிய செய்தி ''மகாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும் என்னும் சின்ன மனூர்ச் செப்பேட்டில்தான் சுட்டப்படுகிறது'' என டாக்டர் ச.வே. சுப்பிரமணியம் குறிப்பிடுகிறார்.

அடுத்து இது குறித்து நிறையத் தகவல்கள் தருவதாகக் கம்ப இராமாயணம் அமைகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பனது இராமாயணம் ஒரு மொழிபெயர்ப்பு என்று கே.எஸ். ஸ்ரீனிவாசன் பல்விதச் சான்றுகளோடு நிறுவுகிறார்.

''வடமொழியிலுள்ள புராணக் கதைகளும் கருத்துகளும் கம்பனுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் வெகுவாகத் தமிழ் நாட்டிலேயே பரவியிருந்தன என்பது நாம் அறிந்த செய்தி. ஆனால் கம்பன் தோன்றும் வரை தமிழ் இலக்கியத்தில் நெடுங்கவிதை (அ) காவியம் என்று சொல்லும்படி வடமொழியைச் சார்ந்து அமைந்த நூல் எதுவுமில்லை. இதிகாசப் புராணங்கள் மேன்மேலும் மக்களிடை பரவிவந்த காலம் கம்பன் இராமாயணம் இயற்றிய காலம். சோழ மன்னர்கள் இலங்கை மீது போர் செய்து வெற்றி கண்ட காலம். அதுவே ஆதிகவியாகிய வால்மீகியின் இராமாயணம் கம்பனை ஈர்த்தது விந்தையன்று.

சேந்தன் திவாகரம் என்ற அகராதி நூலில் (8ஆம் நூற்றாண்டு) குறுநில வேந்தனுக்குப் புகழ் சூட்டும்புலவர், சேந்தனை

''வடநூற்கரசன் தென்மொழிக் கவிஞன்'' என்று பாடுகிறார். ஒரு சிறு வேந்தனுக்கே, நாற்பதுகளின் கடைசியிலும், ஐம்பதுகளின் ஆரம்பத்திலும் எழுத்தாளர்களது கவனம் சோவியத் இலக்கியத் திற்பாற் சென்றது. அந்தன் சேகவ், அலெக்ஸேய் தல்ஸ்தோய், அலெக்ஸாண்டர் குப்ரின், அலெக்சாண்டர் பூ கின், இவான் துர்க னேவ், லியோ தல்ஸ்தோய், நிக்கோலாய் கோகோல், மாக்ஸிம் கார்க்கி, மிகயில் ஷோலகவ் போன்ற எண்ணற்ற ருஷ்ய எழுத் தாளரது படைப்புகளை ஆர்வத்தோடு மொழிபெயர்க்கலாயினர். அவர்களில் ரகுநாதன், த. கோவேந்தன், பூ. சோமசுந்தரம், வி. சந்தானம், தா. பாண்டியன், ரா. கிருஷ்ணையா, வி. ராதாகிருஷ் ணன், எஸ். ராமகிருஷ்ணன், நா. வானமாமலை, கு. அழகிரிசாமி, ஆர்.கே.கண்ணன், மாஜினி, என். பாஸ்கரன், எம். ராஜமாணிக்கம் போன்றார் குறிப்பிடத்தக்கவர். இவை தவிர ஆப்பிரிக்கா, சீனா, இத்தாலி, பல்கேரியா போன்ற நாடுகளைச் சேர்ந்த இலக்கியங் களைத் தமிழாக்குவதில் மிகச்சிலரே ஆர்வம் காட்டி வந்ததையும் காணமுடிகிறது. இவர்களில் சி. சீனிவாசன் (ஆப்பிரிக்கா, மெக்ஸின்), ஆர். ஆறுமுகம் (இத்தாலி), எம். ராஜமாணிக்கம் (பல் கேரியா), எஸ். சிவசேகரம் (சீனா), த.நா. குமாரஸ்வாமி(சீனா), க.வ. முத்தையா (ஸ்பெயின்), நா. தர்மராஜன், (ஆப்பிரிக்கா, இத்தாலி), ஆர்.எஸ்.கிருஷ்ணசுவாமி (இத்தாலி), தம்பி சீனிவாசன் (யூகோஸ்லாவியன்), எஸ்.ஆர். ராமச்சந்திரன் (இத்தாலி) போன் றோரைச் சொல்லலாம்.

ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் நோபல் பரிசு பெறுகிறார்கள். ஆனால், தமிழில் போதிய ஆப்பிரிக்க இலக்கியங்கள் வரவில்லை. இலத்தீன் அமெரிக்காவையும் இந்த வகையில் சேர்க்கலாம் எனினும் பண்பாட்டிலும், கலாச்சாரத்திலும் பலவகையில் நெருக்கமான வரலாற்றுத் தொடர்பு கொண்ட கீழையநாட்டு இலக்கியங்களை மறந்து விட்டதாகவே தெரிகிறது. மேலைநாட்டு இலக்கிய மரபிலும் ஆய்விலும் ஊறிப்போன நாம் கீழைத்தேய இலக்கியங்களை அலட்சியம் செய்து வருவது வருந்துதற்குரியது.

அண்மைக்காலம் வரை தமிழில் மட்டும் அன்றி அநேக மாகப் பிற எல்லா உலக மொழிகளிலும் இலக்கியம் சார்ந்த நூல் களே மொழிபெயர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் தான் பல்வேறு துறைகளிலும் மொழிபெயர்ப்புகள்

செய்யப்பட்டுள்ளன. அறிவியல், தொழில் நுட்பம் தொடர்பான சமீப காலத்திய முன்னேற்றங்களே இதற்குக் காரணமாகும்.

இந்தி மொழியில் ஆண்டுக்கு ஓரிரு நூல்களே மொழி பெயர்க்கப்பட்டு வந்தன. ஆனால், தொலைக்காட்சியின் வருகையால் ஏராளமான இந்தி மொழிப் படைப்புகள் தமிழாக்கப்பட்டு விட்டன. எதிர்பாராத இந்தத் திருப்பத்தால் இந்தியில் போதிய ஆற்றல் பெற்றவர்கள் பெரும் பயனடைந்து வருவதைக் காண முடிகிறது. இதுவும் வரலாற்றில் வரையப்படவேண்டிய நிகழ்ச்சியாக மாறியுள்ளது.

1.1. மொழிபெயர்ப்பின் வகைகள் (Types of Translation)

மொழிபெயர்ப்பின் வகைகள் பல. எனினும் பெருவழக்காக ஐந்து சுட்டிக்காட்டப்படுகின்றன. அவை literal, faithful, idiomatic, loose, free எனப்படும். ஒவ்வொன்றைப் பற்றியும் காணலாம்.

1.1.1. நேர்ச் சரியான / நேருக்கு நேர் (Literal)

இதனைச் சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பென்றும் நேரடிமொழிபெயர்ப்பு என்றும் கூறுவர். மூலத்தினின்றும் சிறிதும் மாற்றம் கொள்ளாது அதனை அவ்வாறே மொழி மாற்றம் செய்தல். இங்கு மொழிபெயர்ப்புத் தவிர மொழிபெயர்ப்பாளருக்கு வேறு வேலை இல்லை என்பார் டாக்டர் சிவகாமி. இத்தகைய மொழி பெயர்ப்புச் சிறந்ததாகாது என்று கூறுவர். அதற்கான காரணத்தை மணவை முஸ்தபா இவ்வாறு கூறுகிறார்.[2]

மூலநூல் ஆசிரியர் உணர்த்த வந்த கருத்து தனித்தனிச் சொற்களில் மட்டும் வாழ்வதில்லை. அது தொடர் வாக்கியத்தில் உயிரோட்டமாக அமைந்திருப்பதாகும். சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதால் கருத்தோட்டம் சிதைவதோடு மூல ஆசிரியரின் வழியினின்றும் மொழிபெயர்ப்பாளன் தடம் புரளவும் நேரிடுகிறது.

ஐ.வி. கோருநேட்ஸ் கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாக அமைகிறது.

1.1.2. நம்பிக்கைக்குரிய / நம்பத்தக்க (Faithful)

வார்த்தைகளில் மட்டும் ஆசிரியன் கருத்து வாழ்வதில்லை என்ற கருத்தை மனத்திற் கொண்டு கருத்தும் பொருளும் சிதையாமல் மொழிபெயர்த்தல். முன்னைய முறையை விட இம்முறை மேலானது என்பது சிலரது கருத்து. எனினும் Faithful என்பதை true எனக் கூறும் மணவை முஸ்தபா அறிவியல் மொழிபெயர்ப் புக்கு இம்முறை சிறந்தது என்கிறார்.

1.1.3. மொழிவழக்குக்கு ஒத்த (Idiomatic)

இந்த வகையான மொழிபெயர்ப்பை ஆர். பார்த்தசாரதி இவ்வாறு விளக்குகிறார்.

''தரு மொழியின் (Source language) மரபுச் சொற்கள் வரு மொழியின் (Target language) மரபுச் சொற்களாக அமையும். ஒரு சமுதாயத்தில் பழக்கம் வழக்கமாகி, வழக்கம் மரபாக அமைகிறது. இது அச்சமுதாயத்தில் வழங்கும் மொழிக்கும் பொருந்தும். Make hay while the Sun shines என்ற ஆங்கிலப் பழமொழியைச் 'சூரியன் காயும்போதே வைக்கோல் செய்' என்று நேராக மொழிபெயர்ப்பது எளிது. ஆனால் 'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்' என்பதுதான் சரியானது.

1.1.4. சரிநுட்பம் இல்லாத / நெறி தவறிய (Loose)

சொல்லமைப்பு முறைகளுக்கு ஏற்ப வாக்கியங்களை அமைக்காது விருப்பம் போல் மொழிபெயர்ப்பது இந்த வகையில் அடங்கும். ''கட்டற்று (Kattatru) எழுவாய் பயனிலை செயப்படு பொருள் முறைமாறிச் சொற்கள் தலைதடுமாறி இருப்பது. மூலநூலில் உள்ள நீண்ட பெரிய வாக்கியத்தை ஒரே வாக்கியமாகத் தமிழில் மொழிபெயர்க்க முயலும்போது இப்பிழை நேரும்'' என ஆர். பார்த்தசாரதி விளக்குகிறார்.

1.1.5. தன்னுரிமையுடைய / புறச்சார்பற்ற (Free)

இந்த வகையான மொழிபெயர்ப்பு குறித்து எல்லோரும் விரிவாகவே பேசுகின்றனர். இதனை ஆர். பார்த்தசாரதி idea மொழிபெயர்ப்பு என்கிறார். ஏனெனில் எழுத்துக்கு எழுத்து,

வரிக்கு வரி, வாக்கியத்துக்கு வாக்கியம், பத்திக்குப் பத்தி என்றில்லாமல் கடினமான பகுதியை நன்கு விளக்குவதற்காக மொழிபெயர்ப்பாளர் சுதந்திரமாக மொழிபெயர்த்தலே இதற்குக் காரணமாகும்.

இலக்கியம் போன்ற படைப்புகளை இந்த முறையில் அதாவது வரையறையற்ற மொழிபெயர்ப்பு (unlimited translation) முறையைப் பின்பற்றி மொழிபெயர்ப்பதே பொருத்தமுடையதாக இருக்கும் எனக்கூறும் மணவை முஸ்தபா அதை இவ்வாறு விளக்குகிறார். படிப்போர் தெளிவு பெற வேண்டி, படைப்பின் மூலக்கரு சிதையா வண்ணம், மரபுச்சொற்கள், பழமொழிகள், சொல்லும் முறை இவற்றில் நம்மொழி மரபுக்கேற்றத் தேவையான மாற்றங்களைச் செய்து கொண்டு, மொழி மாற்றம் செய்து கொள்ளலாம். இதன் மூலம் மொழிபெயர்ப்பு என்ற உணர்வுக்கு மாறாக மூலமொழி நூலே என்ற மனப்பிரமையை உருவாக்க இயலும்.

மேற்குறித்த முறைகள் தவிர்த்து வேறு இருமுறைகளையும் மணவை முஸ்தபா கூறுகிறார்.

1.2.1.பொதுமக்கள் ஆர்வ மொழிபெயர்ப்பு (Popular Translation) (Potumakkal aarva mozhipeyarppu)

இது செய்தி இதழ்களுக்குத் தேவையான மொழிபெயர்ப்பு முறையாகும். நேர அருமை கருதியும் சாதாரணப் படிப்பறிவுடையோரும் தெளிவாகச் செய்தியறிய வேண்டி செய்திகளை விரித்தும் சுருக்கியும் செய்யப்படுவது. இதில் மூலச் செய்திக் கருவைத் தவிர உருவம், உத்தி, நடை எல்லாமே மொழிபெயர்ப்பாளனுடையதாக அமையும்.

1.2.2. தழுவல் (Adaptation) (taluval)

தழுவல்களை மொழிபெயர்ப்பாகக் கொள்ள முடியாது எனினும் டாக்டர் சிவகாமி இந்த வகையினையும் கணக்கில் எடுத்துக் கொள்கிறார். முற்றிலும் மூலத்தினின்றும் மாறுபட்டு அமைவன தழுவல்களாகும். மூலநூலின் கருவினை மட்டும்

அதனின்றும் பெற்றுக்கொண்டு ஏனைய நிகழ்வுகள், பாத்திரங்கள், நிகழ்ச்சி மாற்றங்கள் போன்ற அனைத்தினையும் தம் விருப்பம் போலப் படைத்துக் கொள்ளுதல் இதன் பாற்படும். இவை தவிர, மொழி பெயர்ப்பினை மேற்கொள்ளும் நான்கு முறைகள் குறித்துப் பேராசிரியர் கா.செ. செல்லமுத்து குறிப்பிடுவது கவனிக்கத்தக்க தாக அமைகிறது.

அ. முற்றிலும் மாந்தர் முயற்சியால் மேற்கொள்ளப் படும் மொழிபெயர்ப்பு
(Human Translation)

ஆ. மாந்தர் ஒத்துழைப்புடன் கணிப்பொறி வழி நிகழும் மொழிபெயர்ப்பு
(Human Assisted Machine Translation)

இ. கணிப்பொறி உதவியுடன் மொழிபெயர்ப்பாளர் மேற்கொள்ளும் மொழிபெயர்ப்பு
(Computer Assisted Human Translation)

ஈ. முற்றிலும் கணிப்பொறி வழி அமைந்த மொழி பெயர்ப்பு (Pure Machine Translation)

மேற்கண்ட நான்கில் முதலாவது முறை குறித்தே இந்நூல் வழி விரிவாகக் காண்கிறோம். ஏனையவை குறித்துப் பேராசிரியர் கா.செ. செல்லமுத்து விரிவாகக் குறிப்பிடவும் செய்கிறார்.

இரண்டாவது முறையில் கணிப்பொறியானது ஒரு மொழி யிலிருந்து மற்றொரு மொழிக்கு மொழிபெயர்ப்பினை மேற் கொள்ளும்போது சிற்சில இடங்களில் மனித உதவியை எதிர் நோக்கி நிற்கிறது. இம்முறையானது பற்பல வெளிநாட்டு மொழி களிலுள்ள அறிவியற் கருத்துக்களை மொழிபெயர்க்கவும் தொழிற் பெருக்கம் காரணமாகப் பெருமளவில் தேவைப்படும் கருவிப் பயன்முறைக் கையேடுகளை (Equipment manual) வெளிநாட்டு மொழிகளில் பெயர்க்கவும் பெரிதும் உதவுகிறது.

மூன்றாவது முறை பற்றிப் பேராசிரியர் செல்லமுத்து இவ்வாறு குறிப்பிடுகிறார்.

''அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறைகளுக்கான கலைச்சொற்களைக் (Technical Terms) கணிப்பொறி தன்னகத்தே தாங்கி மொழிபெயர்ப்பாளருக்குத் தேவையான சொற்களையும் அதற்குரிய இலக்குமொழிச்(Target language) சொற்களையும் உரிய நேரத்தில் கொடுத்து உதவுகிறது. நமக்குத் தேவைப்படும் கணிப் பொறி மொழிபெயர்ப்புக் குறித்துப் பேராசிரியர் செல்லமுத்து மேலும் கூறுகையில் அதன் இருபெரும் பிரிவுகளைப் பற்றி முதலில் குறிப்பிடுகிறார்.

அ. இருதொடர்புடைய மொழிகளுக்கிடையே அமைந்த கணிப்பொறி மொழிபெயர்ப்பு (Inter lingua method of machine translation). இலக்கண அமைப்பு மற்றும் பொருள் அடிப்படையில் மிகவும் தொடர்பும் நெருக்கமும் உடைய இரு மொழிகளுக் கிடையே உருவாக்கப்படும் கணிப்பொறி மொழிபெயர்ப்பு இவ் வகையைச் சார்ந்ததாகும்.

ஆ. இடைநிலை மொழி அடிப்படையிலமைந்த கணிப் பொறி மொழிபெயர்ப்பு (Intermediate Language based machine translation). இலக்கணம் மற்றும் மொழியமைப்பில் முற்றிலும் வேறுபட்ட இரு மொழிகளுக்கிடையே கணிப்பொறி மொழி பெயர்ப்பை உருவாக்க இம்முறை உதவுகிறது. இம்முறையில் மூல மொழியிலுள்ள (Source Language) சொற்றொடர்கள் கணிப் பொறி மூலம் மொழிபெயர்க்கப்படுவதற்கு முன்பாக இடைநிலை மொழிக்கு மாற்றம் செய்யப்படுகிறது. இடைநிலை மொழியி லமைந்த சொற்றொடர் பின்னர் இலக்கு மொழிக்கு மாற்றம் செய்யப்பெறுகிறது.

இதனடிப்படையிலேயே தமிழ்ப் பல்கலைக்கழகக் கணிப்பொறி மையத்தில் சோதனை அடிப்படையில் கணிப்பொறி வழி உருசிய மொழியிலிருந்து தமிழ் மொழிக்கு அறிவியல் உரை களைப் பெயர்ப்பதற்கான ஓர் அமைப்பு ஆய்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

1.3. மொழிபெயர்ப்பாளர் தகுதி

(Qualification of the Translation)

குறிப்பிட்ட ஒரு வேலையைச் செய்ய இன்றைய நாளில் ஒரு குறிப்பிட்ட கல்வித் தகுதி எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் அத்துறையில் முன் அனுபவம் இருந்தால் சிறப்புத் தகுதியாகக் கொள்ளப்படுகிறது. அந்த வகையில் மொழிபெயர்க்கத் தகுதி ஏதும் இருக்கிறதா? இதுநாள் வரையிலும் தமிழிலும் சரி, பிற மொழியிலும் சரி, மொழிபெயர்த்தவர்கள் அத்துறையில் எந்தப் பட்டமோ சான்றிதழ்களோ பெற்றவர்கள் அல்லர். அதனால் இது தகுதி இல்லாதவர்களால் செய்யப்பட்டு வருகிறது என்பது பொருளன்று. ஆர்வம், அக்கறை, ஈடுபாடு, சமூகசேவை போன்ற மகத்தான தகுதியைப் பெற்றவர்களே இத்துறையில் ஈடுபாடு காட்டி வந்திருக்கின்றனர். அண்மைக் காலங்களில் குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்காகத் தொழில் முறை மொழிப்பெயர்ப்பாளர்களால் ஓரளவு நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. இவை தவிர ஆயிரக்கணக்கான பிற நூல்கள், அந்த மொழிபெயர்ப்பாளரின் சொந்த ஆசை காரணமாகவே, மூலநூலில் கண்ட இன்பத்தைப் பலரறியச் செய்ய வேண்டும் என்ற ஒப்பற்ற தியாக உணர்வு காரணமாகவே மொழிபெயர்க்கப்பட்டன. இவற்றிற்கு முன்னர் தகுதி என்பது தகுதியற்றதாகிவிடுகிறது.

எனினும் இவ்வாறு முழுத்தகுதி படைத்தவர்களே மொழிபெயர்ப்பில் ஈடுபட்டனர் என்று சொல்லிவிட முடியாது. ஆர்வம் மட்டுமே முழுத்தகுதியாகி விடாது. 'கிணற்றுத்தவளை'க்கு (Kinarttutavalai) எவ்வளவு தான் ஆர்வமிருந்தாலும் அதன் சுற்றுவட்டம் அந்தக் கிணற்றின் சுற்றளவாகவே இருக்க முடியும். எனவே, தகுதி பற்றியும் பார்க்க வேண்டியிருக்கிறது.

எழுத்தாற்றல் வேண்டும் என்ற தலையாயத் தகுதி பற்றிக் குறிப்பிட வேண்டியதில்லை. முதலில் முக்கியமானது எழுத்தாற்றல் தகுதிதான். இது தவிர வேறு பிற தகுதிகளும் தவிர்க்க முடியாதனவாக இருக்கின்றன என்பது இத்துறையில் ஈடுபாடு கொண்டவர்களது கருத்து.

உலகில் அதிகமான மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவை மார்க்சிய நூல்கள். ஆரம்பக்காலத்தில் அவை ஜெர்மன் மொழியிலிருந்தே ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டன. அப்போது சந்தித்த கடும் பிரச்சினைகளையும், சிரமங்களையும் எங்கெல்ஸ் ஒரு கட்டுரையில் விளக்கினார். How not to translate Marx என்பது அதன் தலைப்பு. Das Capital நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க முற்படுகின்றவர்களுக்கு இருக்க வேண்டிய தகுதிகளை அவர் விளக்கினார்.

ஜெர்மனும் ஆங்கிலமும் தெரிந்திருந்தால் போதாது. இரு மொழிகளிலும் மெய்யாகவே ஆழ்ந்த புலமையுடையவராக இருத்தல் வேண்டும். இலக்கிய மொழி மட்டுமின்றிப் பேச்சு மொழியும், வட்டார வழக்குகளும் நன்கு அறிந்திருக்க வேண்டும். மேலும் உலக இலக்கியங்களில் அறிமுகமுடையவராகவும், பல்வேறு விஞ்ஞானங்கள் பற்றிய விவரமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

ஜெர்மன் மொழி குறித்து எங்கெல்ஸ் கூறிய கருத்துக்களை நாம் தேவைப்படும் மொழிகளோடு பொருத்திக் காணலாம். இதன்படி சராசரி நபர்கள் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடுதல் கூடாது என்பது தெளிவாகிறது.

''பொருளாதார நூல் ஒன்றை மொழிபெயர்ப்பவர் ஓரளவேனும் பொருளாதாரம் பயின்று இத்துறையில் விசயம் அறிந்தவராக இருத்தல் வேண்டும். இல்லையேல், மூலத்தின் வாசகங்களை நன்கு புரிந்து கொண்டு உள்ளது உள்ளபடி தமிழாக்க இயலாது. செய்கின்ற தமிழ் மொழிபெயர்ப்பு குழப்பமோ தடுமாற்றமோ இல்லாத தெளிந்த நடையில் அமையாது .

மொழிபெயர்ப்புத்துறையில் நீண்ட காலம் ஈடுபட்டு வரும், மாநில (சட்டத்துறை) ஆட்சிமொழி ஆணையத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்தவருமான நீதிபதி எஸ். மகாராஜன் "Translation of Shakespeare into Tamil Some Problems" என்னும் தலைப்பில் சுவராஜ்யா இதழில்(1976) தொடர்கட்டுரைகள் எழுதினார். அதில் மொழிபெயர்ப்பாளருக்கு வேண்டிய மூன்று தகுதிகளைக் குறிப்பிட்டார்.

முதலாவதாக மொழிபெயர்ப்பவர் தமிழ் இலக்கியத்தி லுள்ள அருமைகளையெல்லாம் தன்னை மறந்து அனுபவித்திருக்க வேண்டும். தமிழ் மரபும் தெரிந்திருக்கவேண்டும்.

இரண்டாவதாக சேக்ஸ்பியருடைய கவிநயத்திலும் ஆங்கில இலக்கியத்திலும் ஊடாடித் திளைத்திருக்க வேண்டும்.

மூன்றாவதாக, சேக்ஸ்பியருடைய இதயத்தோடு ஒட்டி, அவரோடு அவருடைய பாத்திரங்களுக்குள் புகுந்து 'நான் என்ற அத்வைத நிலையை அடையவேண்டும். அப்படிக் கலந்துவிட் டால் போதும். அதற்கு மேல் செய்யவேண்டியது ஒன்றுமில்லை.

ஏறத்தாழ நாற்பத்தியிரண்டு மொழிகளிலிருந்து இதுநாள் வரை செய்யுள் இலக்கியம், புதினம், சிறுகதை, நாடகம், இலக் கியம், வாழ்க்கை வரலாறு, சமயம், தத்துவம், அறிவியல், மருத்து வம், உளவியல், தர்க்கம், வரலாறு, அரசியல், சட்டம், பொரு ளியல், தொழில், விவசாயம், புவியியல், சமூகவியல், கல்வி, கூட் டுறவு, கலைகள், சோதிடம், யோகம், விளையாட்டு போன்ற பல் வேறு துறை சார்ந்த நாலாயிரத்து ஐந்நூறு நூல்கள் தமிழாக்கப் பட்டிருக்கின்றன. மொழிகளின் எண்ணிக்கை கூடுதலாக இருந் தாலும் பெரும்பாலானவை ஆங்கிலத்தின் வாயிலாகச் செய்யப் பட்டவை. இதில் ஆங்கில இலக்கியத்திலிருந்து தமிழக்கு வந் தவை சுமார் ஆயிரத்து ஐந்நூறு. சேக்ஸ்பியரது நூல்கள் மட்டுமே நூற்றுக்கு மேற்பட்டவை. சேக்ஸ்பியரை மொழிபெயர்க்கும் ஆர்வம் அதிகம் காணப்பட்டதால் எஸ். மகாராஜன் சுட்டிக் காட்டியது பொருத்தமானதுதான்.

ஆகவே, சேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பவர்கள் அவர் கையாண்ட சொற்களின் உண்மையான பொருளை அறிந்து எழுத வேண்டும் என்பது ஒரு தகுதியாகிறது. எடுத்துக்காட்டாக admitted என்பதை included என்ற பொருளிலும், conversations என்பதை habits என்ற பொருளிலும் சேக்ஸ்பியர் பயன்படுத்தி இருக்கிறார். இவைபோன்று நூற்றுக்கணக்கான சொற்கள் இருக்கின்றன. அவற்றை அறியாமல் சேக்ஸ்பியரை மொழிபெயர்ப்பது எங்ஙனம்?

மொழிபெயர்ப்பாளருக்கு அடுத்து வேண்டிய தகுதி தன் வயப்படுத்தும் ஆற்றல். சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும் திகழ்ந்த ஜீவா இது குறித்துக் குறிப்பிட்டது நினைவு கொள் ளத்தக்கது. 'ஜேம்ஸ் ஆலன்' எழுதிய இரண்டு நூல்களை 'மனம் போல வாழ்வு', (manam poola vaazhvu) 'அகமே புறம்' (akame puram) என்ற தலைப்புகளில் வ.உ.சி. தமிழ்ப்படுத்தி இருக்கிறார். ஆங்கில நூல்களின் கருத்துக்களைத் தன்வயப்படுத்தித் தமிழ் மண் மணக்க எவ்வாறு தமிழாக்கம் செய்ய வேண்டும் என்பதை இந் நூல்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

மொழிபெயர்ப்பு நூல் ஒன்றினுக்கு எழுதிய அணிந்துரை யில் ''சொந்தமாக எழுதினால் அந்த நடையில் ஓட்டம் இருக்கும். மொழிபெயர்ப்பிலே அதே ஓட்டம் இருக்க வேண்டுமானால் நூலின் சொல்லும் பொருளிலும் ஆழ்ந்து (முழு ஈடுபாடு வேண் டும்) கரைந்து விடவேண்டும்'' என கி.வா.ஜகந்நாதன் குறிப் பிட்டது நினைவு கூறத்தக்கது.

ஒரு படைப்பாளரே மொழிபெயர்க்கின்ற பணியைச் செய் தல் வேண்டும் என்ற தகுதியை நா. பார்த்தசாரதியும் முன்வைக் கின்றார். லலிதாம்பிகை அந்தர்ஜனம் எழுதிய மனுஷ்யபுத்ரி என்ற மலையாளச் சிறுகதையை ர. கிருட்டிணன் தமிழில் மொழி பெயர்ப்பு இலக்கிய வகைகள் போன்ற வகைகள் அவர்க்கு வளம் சேர்ப்பதாக அம்மொழிபெயர்ப்பு அமைந்திருக்கிறது.

மொழிபெயர்ப்பு குறித்து ஆர். பார்த்தசாரதி எழுதிய கட்டுரைகள் தகுதிகள் குறித்து பல்வேறு விசயங்களைப் பற்றி பேசப்படுகின்றன.

''மொழிபெயர்ப்பாளர்கள் தமிழ் இலக்கண இலக்கியம் கற்க வேண்டும். தமிழ்மொழிச் சிறப்பறிய வேண்டும். இதனை மிகை எனக்கொள்ளும் மொழிபெயர்ப்பாளர்கள் குறைந்தது திருக் குறளையும் திருக்குறள் பரிமேலழகர் உரையையும், கம்ப ராமா யணத்தில் ஒரு சில படலங்களையும், பாரதி, பாரதிதாசன், கவி மணி ஆகியோர் பாடல்களையும் பயிலுதல் இன்றியமையாதது. திரைப்பட உலகில் புகழ்பெற்றோங்கிய கண்ணதாசன், பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் ஆகியோர் பாடல்களையும் எடுத்துக்

காட்டுகளாக கொள்ளலாம். ஏனெனில் இவர்களது பாடல்களில் மொழிபெயர்ப்பாளர்கள் எடுத்தாளத் தகுந்த சொற்களும், தொடர்களும் நிரம்ப உண்டு''.

இலக்கணத்தையும் கவிதைகளையும் மொழிபெயர்ப் பாளர்கள் கற்க வேண்டும் எனக்கூறிய ஆர். பார்த்தசாரதி வேறு சிலவற்றையும் வலியுறுத்துகிறார்.

இது உரைநடைக் காலம். எனவே மொழிபெயர்ப்பாளர் கள் உரைநடையாசிரியர்கள் என்னும் தகுதி பெறுகின்றனர். இதனை உளங்கொண்டு, மொழிபெயர்ப்பாளர்கள் நல்ல தமிழ் நடை நூல்களைப் படித்துச் சொல் வளம் சேர்த்து நடையை வளர்த் துக் கொள்ளுதல் நன்று. திரு.வி.க. கல்யாணசுந்தரனால் நூல் களைப் பலகால் பயில்வதால் நல்ல எளிய தரமான நடை எழுதக் கற்கலாம். நல்ல மொழிபெயர்ப்புக்குப் பண்டிதமணி கதிரேசன் செட்டியாரது சுக்கிரநீதி, கௌடிலீயம், பொருணூல் ஆகியவற்றை எடுத்துக்காட்டுகளாகக் கொள்ளலாம்.

மொழிபெயர்ப்பின் தரம் பற்றிப் பேசுகின்றபோது பேரா சிரியர் கா.செ.செல்லமுத்து இவ்வாறு குறிப்பிடுவார். ''மொழி பெயர்க்கப்படும்போது உரையானது ஒரு மொழிபெயர்ப்பாளரின் மொழிப்புலமை, உரை வழங்கும் குறிப்பிட்ட துறை பற்றிய அறிவு, மொழிபெயர்ப்பின் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் திறன், உள்ளத்தின் கற்பனை வளம் முதலியவற்றைப் பெரிதும் சார்ந்து அமைகிறது.

1.4. மொழிபெயர்ப்புக்காக நடத்தப்படும் பயிற்சிகள் (Trainings for Translation)

மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்குகின்ற சிறந்த பணியை ஜெனிவாவில் உள்ள The School of Interpreters செய்து வருகிறது. அதற்கு இணையான பயிற்சியோ, பள்ளியோ நம் நாட்டில் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். சோவியத் யூனி யனில் மொழிபெயர்ப்புத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக் கப்படுகிறது. ஏனெனில் உலகம் முழுவதுமாக நாற்பத்தி ஆறு அயல் மொழிகளில் ஆண்டொன்றுக்கு சுமார் *1400* நூல்கள் வெளி

யிடப்படுகின்றன. தமிழில் மட்டுமே சுமார் முப்பது தலைப்பு களில் நூல்கள் வெளியிடப்படுகின்றன. இதன் வாயிலாக அந்நாட்டில் மொழிபெயர்ப்புக்குக் காட்டப்படும் முக்கியத்துவத்தை உணரலாம்.

புதுதில்லியில் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு பகுதி யாகச் செயல்படும் The School of Foreign Languagesஇல் பதினெட்டு மாதப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. இது முழுக்க Interpreter களுக்கானது. ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முதுநிலை வரை மொழிபெயர்ப்பு முக்கியப் பாடமாக உள்ளது. தமிழகத் தைப் பொறுத்தவரை தலைமைச் செயலகத்திலும், உலகத் தமி ழாராய்ச்சி நிறுவனத்திலும் ஆட்சிமொழி ஆணையத்திலும் மொழி பெயர்ப்புத் துறைகள் உள்ளன.

தமிழகத்தில் அதிகமான அளவு மொழிபெயர்ப்பு நூல் களை வெளியிட்டு வரும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் 1985இன் ஆரம்பத்தில் மொழிபெயர்ப்பாளர் பட்டறை ஒன்றை நடத்தியது. இது அத்துறையில் ஈடுபட்டிருப்பவர்களை ஊக்குவிப்பதாகவும் வழிநடத்துவதாகவும் அமைந்தது.

இதே போன்று சாகித்ய அகாடமி 1986இன் இறுதியில் புது தில்லியில் இலக்கிய மொழிபெயர்ப்பு குறித்து ஐந்து வார காலப் பயிற்சி வகுப்பு ஒன்றை நடத்தியது. இதில் இலக்கிய மொழி பெயர்ப்புப் பற்றிய பல்வேறு அம்சங்கள் விளக்கப்பட்டன. இத் தகைய பயிற்சி வகுப்புகளை ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் நடத்தி சிறந்த மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்க முயலலாம்.

இன்னொன்றையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்த மானது. An other important factor affecting the process and result of translation is the personality of translator himself as one of the participants in the interlingual communicative act. அனைத்துத் தகுதிகளிலும் மொழிபெயர்ப்பாளரின் ஆளுமையே முக்கியமானது என்பதை மனங்கொள்ளவேண்டும். All translation is a compromise-the effect to be literal and the effort to be idiomatic ''என்ற பெஞ்சமின் ஜோவிட் கூற்றும் சிந்திக்கத்தக்கது. சுருங்கக் கூறின், தனது பணியைத்

தொடங்கும்முன் மூலநூல் குறித்து மொழிபெயர்ப்பாளர் மூன்று வினாக்களை எழுப்பிக் கொள்ளுதல் வேண்டும்

அ. ஆசிரியர் என்ன சொல்கிறார்?
ஆ. அவர் என்ன கருதுகிறார்?
இ. அவர் அதை எங்ஙனம் கூறுகிறார்?

1.5. அடிக்குறிப்புகள் (Foot notes)

1. கிருஷ்ணையா, ரா., நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் நடத்திய மொழிபெயர்ப்பாளர் பட்டறைக்குத் தயாரித்த குறிப்பு, *1985.*
2. மேலது.
3. ஜீவானந்தம், ப., கலையும் இலக்கியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், இரண்டாம் பதிப்பு, *1975*, ப.8.
4. கி.வா. ஜகந்நாதன், நல்ல நிலம் *(1956)* என்ற நூலுக்கு எழுதிய மதிப்புரையில்.
5. நா. பார்த்தசாரதி, தீபம், ஜனவரி *1981.*
6. ஆர். பார்த்தசாரதி, மார்க்சிய லெனினிய சமூகவியல் நூல் மொழிபெயர்ப்பு, தாமரை, பிப்ரவரி *1986.*
7. மேலது.
8. கா.செ. செல்லமுத்து, கணிப்பொறி வழி மொழிபெயர்ப்பு, பக்.*28-20*
9. Alexander Shveitser, Translation: Problems and Perspectives, Cial Science 1/85, p.d147.

தேவையில்லை. தமிழில் மட்டுமே [illegible] [illegible] மொழிபெயர்ப்புக்குக் கிடைப்பது [illegible] உணரலாம்.

புதுதில்லியில் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஒரு பகுதியாகச் செயல்படும் The School of Foreign Languages இல் [illegible] பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. [illegible] Interpreter [illegible]

[illegible] தில் மொழிபெயர்ப்புத் துறைகள் உள்ளன.

[illegible] தில் மொழிபெயர்ப்பாளர் பட்ட [illegible] இது அத்துறையில் [illegible]

இதே போன்று [illegible] 1986இல் [illegible]

[illegible] தகைய பயிற்சி வகுப்புகளை [illegible] நடத்தி சிறந்த மொழிபெயர்ப்பாளர்களை உருவாக்க முயலலாம்.

இன்னொன்றையும் இங்கு சுட்டிக்காட்டுதல் பொருத்தமானது. An other important factor affecting the process and result of translation is the personality of translator himself as one of the participants in the interlingual communicative act. அனைத்துத் தகுதிகளையும் மொழிபெயர்ப்பாளரின் ஆளுமையே முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்றனர். All translation is a compromise-the effect to be literal and the effort to be idiomatic" என்ற பெருங்கருத்தை [illegible] சிந்திக்கத்தக்கது. சுருக்கக் கூறின், தனது பணியைத்

இயல் இரண்டு

மொழிபெயர்ப்பு நிகரன்கள், மொழிபெயர்ப்புக் கொள்கைகள்

(Translation Equivalents and Principles)

மொழிபெயர்ப்பு என்பது இதுதான் என்று பலரும் பலவிதமாய் வரையறை செய்துள்ளனர். அவற்றுள் மூலத்துக்கு இணையான பெறும்மொழி நிகரனைக் கண்டறியும் செயல் முறையே மொழிபெயர்ப்பு என்ற ஐசடோர் பிஞ்சக் அவர்களின் வரைவிலக்கணம் இங்குக் கருதத்தக்கது. மூலத்திற்கான பெறு மொழி நிகரன்களைக் கண்டறிவதே மொழிபெயர்ப்பின் மையப் பணியாகும்.

2.1. மொழிபெயர்ப்பு நிகரன்கள் (Translation Equivalents)

மூலத்தின் பொருளைப் பெறும்மொழியில் தரும் விதத் தில்மூலத்தின் உருபன்கள், சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆசியவற்றைப் பதிலீடு (substitute) செய்யக்கூடிய பெறும்மொழிக் கூறுகளை மொழிபெயர்ப்பு நிகரன்கள் என்கிறோம். மொழி பெயர்ப்பு நிகரன்களை முறைசார் நிகரன்கள் (Formal corespondence), ஆற்றல் மிகு நிகரன்கள் (Dynamic equivalents) என்று இருவகையாக வகைப்படுத்தலாம்.

நிகரன் (Equivalents)

முறைசார் நிகரன் (Formal Correspondents)

ஆற்றல் மிகுநிகரன் (Dynamic equivalents)

2.1.1. முறைசார் நிகரன்கள் (Formal Correspondent)

மூலமொழியின் உருபன்கள், சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் இவற்றுக்கு இணையான பெறும்மொழி வழக்குகளை முறைசார் நிகரன்கள் என்கிறோம். ஆனால் ஒரு சொல் உணர்த்துவதைப் பெறும்மொழியில் ஓர் உருபன் உணர்த்திவிடலாம். நேர் மாறாகவும் (Vice versa) இருக்கலாம். மூலமொழியில் ஒரு தொடர் உணர்த்தும் பொருளைப் பெறும்மொழிச் சொல் ஒன்று உணர்த்தி விடலாம். நேர்மாறாகவும் இருக்கலாம். மூலமொழியின் வாக்கியத்துக்குப் பெறும்மொழியின் சொல் அல்லது தொடர் பதிலியாவதும் உண்டு; நேர்மாறாகவும் நிகழும். இதனால் மூல மொழிச் சொல் ஒன்றுக்குப் பெறும்மொழியில் சொல்தான் நிகரனாக இருக்கும் என்பதில்லை. எனவே மூலமொழிக்கு இணையாக முறைசார் நிகரன்கள் கீழ்வருமாறு அமையலாம்.

மூ.மொ.உருபன்	↔	பெ.மொழி உருபன்	சொல்	தொடர்	வாக்கிபம்	
மூ.மொ.சொல்	↔	,,	,,	,,	,,	,,
மூ.மொ.தொடல்	↔	,,	,,	,,	,,	,,
மூ.மொ.வாக்கியம்	↔	,,	,,	,,	,,	,,

2.1.2. முறைசார் நிகரன்களின் இணை அமையுமாறு (Substitute for formal correspondent)

மொழி குறியீடுகளாலானது, ஒரு மொழியின் குறியீடுகள் ஒரு குறிப்பிட்ட வடிவமைவிலும் (Pattern) அமைப்பிலும் இயங்கு கின்றன. மொழிக்கு மொழி குறியீடுகள் வேறுபடுகின்றன. அச் குறியீடுகள் இயங்கும் வடிவமைவும், அமைப்பும் மொழிக்கு மொழி வேறுபடுகின்றன. மிக நெருங்கிய தொடர்புடைய மொழி களிலும் கூட குறியீடுகளிலும், குறியீடுகள் இயங்கும் வடிவமை

விலும், அமைப்பிலும் முழுமையான நிகர்மை அமையமுடியாது. இந்த வேறுபாடுகள் தாம் ஒரு மொழியைப் பிற மொழியிலிருந்து பிரித்துத் தனியாக, தனிமொழியாக வழங்கச் செய்கின்றன. எனவே ஒவ்வொரு மொழிக்கும் அதற்குரிய சிறப்புக்கூறுகள் உண்டு. இதற்கு அம்மொழி பேசும் மக்களின் வரலாறு, கலாச்சாரம், அறிவு, கலை வளர்ச்சி, அவர்களுடைய வாழிடத்தின் புவியியல் அமைப்பு, தட்பவெப்பநிலை போன்ற மொழியியல் அல்லாத காரணிகளும் காரணங்களாக அமைகின்றன. ஆகவே ஒரு மொழியின் பொருள் கூறுகள் இலக்கணக் கூறுகள் அனைத்துக்கும் இன்னொரு மொழியில் நிகரன்கள் இருக்க முடியாது. மூலமொழியின் சில கூறுகளுக்குப் பெறும் மொழியில் நிகரன்கள் இல்லாமலிருக்கலாம். சில கூறுகளுக்குப் பெறும் மொழியில் ஒன்றுக்கும் மேற்பட்ட நிகரன்கள் இருக்கலாம். ஆகவே, இரு மொழிகளுக்கிடையே முறைசார் நிகரன்களின் இணை கீழ்வருமாறு அமைகிறது.

ஒன்றுக்கு	ஒன்று
ஒன்றுக்குப்	பல
ஒன்றுக்கு	φ
பலவற்றுக்குப்	பல
பலவற்றுக்கு	ஒன்று
பலவற்றுக்கு	φ

உருபன், சொல், தொடர், வாக்கியம் ஆகிய எல்லா நிலைகளிலும் இருமொழிகளுக்கிடையே ஒன்றுக்கு ஒன்று என்று இணை (correspondence) அமைவது அரிதிலும் அரிது. அப்படி அமைந்தால் வார்த்தைக்கு வார்த்தை என்று மொழிபெயர்ப்பு மிக எளிமையாகிவிடும். பிற இணைகள் அனைத்துமே மொழிபெயர்ப்பில் சிக்கலுக்குக் களமாகிவிடுகின்றன. சில சிக்கல்களை எளிதில் மேற்கொள்ள முடிகிறது. சில மேற்கொள்வதற்கு அரிதாகிவிடுகின்றன.

ஒன்றுக்கு - φ, பலவற்றுக்கு - φ என்று இணைகள் அமையும்போது, அதாவது மூலத்தில் உள்ள உருபன் சொல் தொடர் வாக்கியத்திற்குப் பெறும் மொழியில் நிகரன் இல்லை என்றால், மொழிபெயர்ப்பில் புதுமையாக்கம் முக்கிய இடம்பெறுகிறது. அறிவியல் கண்டுபிடிப்புகளின் பெயர்கள் பலவும் இந்த வகை

யனுக்குள் (Category) அடங்கும். மொழியாளர்களுடைய வாழிடங்களின் புவியியல் அமைப்பு, தட்பவெப்பநிலை ஆகியவற்றுக் கேற்பவும், கலாச்சார நடைமுறைகளுக்கு ஏற்பவும் மொழிகளுக் கிடையே இத்தகு இணைகள் அமைவதுண்டு. எடுத்துக்காட்டாகத் தமிழில் Snow என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நிகரான சொல் இல்லை. ஆனால் எஸ்கிமோ மொழியில் பத்துக்கும் மேற்பட்ட நிகரன்கள் வழக்கில் உள்ளன. காரணம் தமிழகத்தின் தட்பவெப்ப நிலையில் Snowவுக்கு இடமில்லை. எஸ்கிமோக்களின் வாழ்வே, snowவில்தான். ஆனால் தமிழில் இல்லை என்று சொல்லி வாளா விருந்து விடமுடியாது. அனைத்துலகு சார்ந்த அறிவுப் பரிமாற்றத் தில் தமிழில் Snow ஐச் சுட்டும் சொல்லின் தேவை தவிர்க்க முடி யாததாகிறது. ஆகவே 'உறைபனி' (uraipani) என்ற சொல்லாக்கம் எழுகிறது.

2.1.3. ஆற்றல்மிகு நிகரன்கள் (dynamic equivalence)

மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் கூறுகளையும், இலக்கணக் கூறுகளையும், பெறும் மொழியின் முறைசார் நிகரன் களால் பதிலீடு செய்வது ஒருமுறை முறைசார் நிகரன்கள் பல சமயங்களில் தெளிவின்மையையும், பொருள் மயக்கத்தையும் ஏற்படுத்தி விடுவதுமுண்டு. முக்கியமாக, மூலத்தின் சிறப்பு வழக்குகள் (idioms) உருவகங்கள், உணர்வுப் பொருள் வழக்குகள் (connotations) ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போதும் மூல மொழிக்கேயுரிய தனிப்பட்ட மொழியியற் கூறுகள், கலாசாரக் கூறுகள், உரையாடல் அமைப்புகள் ஆகியவற்றை மொழிபெயர்க் கும்போதும் முழுவதும் முறைசார் நிகரன்களைப் பதிலீடு செய்ய முடியாது. அதுபோன்ற இடங்களில் மூலத்தின் பொருளுக்கு முதன்மையிடம் தந்து, அப்பொருளை ஆற்றலுடன் பெறும் மொழி வாசகரின் மனதில் பதியவைக்கக்கூடிய நிகரன்களை ஆற்றல்மிகு நிகரன்கள் என்கிறோம்.

ஆங்கிலம் (English)	தமிழ் (Tamil)
Listen to my words	என் வார்த்தைகளைக் கவனி
	மொழிபெயர்ப்பு-1
	நான் சொல்வதைக் கேள்
	மொ.பெ.2

At last he touched the point	கடைசியில் அவன் முக்கியமான செய்தியைத் தொட்டான் மொ.பெ.1
	கடைசியில் அவன் முக்கியமான செய்தியைக் கூறத் தொடங்கினான் மொ.பெ.2
Her name often appeared in press	பத்திரிகைகளில் அவள் பெயர் அடிக்கடி தோன்றியது மொ.பெ.1
	பத்திரிகைகளில் அவள் பெயர் அடிக்கடி அடிபட்டது மொ.பெ.2
He is working round the clock	அவன் கடிகாரத்தைச் சுற்றி வேலை செய்து கொண்டிருக்கிறான். மொ.பெ. 1
	அவன் இரவும் பகலும் உழைக்கிறான் மொ.பெ.2

இவற்றுள்

மொ.பெ.1 முறைசார் நிகரன்கள் (formal correspondents)
மொ.பெ.2 ஆற்றல்மிகு நிகரன்கள் (dynamic equivalents)

2.1.4. வாசகரை மையங்கொண்ட மொழிபெயர்ப்பு (Reader-centre translation)

மூலமொழிச் செய்திக்கு மிக நெருங்கிய இயல்பான நிகரனைப் பெறும் மொழியில் ஆக்கித் தருவதே மொழிபெயர்ப்பு. இதில் பொருள் முதன்மையிடமும் நடை இரண்டாவது இடமும் பெறும். ஒரு மொழிபெயர்ப்பு அதன் மூலத்தின் மிக நெருங்கிய நிகரனாக (Closest equivalent)இருக்க வேண்டும். பெறும் மொழி யின் மொழியியல் கூறுகளுக்கேற்பவும் வாசகரின் கலாச்சாரச்

சூழலுக்கேற்பவும் மிகவும் இயல்பான நிகரானகவும் (natural equivalent) இருத்தல் வேண்டும். இவ்விரு தன்மைகளுமுள்ள ஒரு மொழிபெயர்ப்பை ஆற்றல்மிகு நிகர்மை (dynamic equivalent) உள்ள மொழிபெயர்ப்பு என்லாம்.

2.1.5. எதற்கு முதலிடம்?
(Which should be given first preference)

வடிவம் (pattern), நடை (style) ஆகியவற்றுக்கும் பொருளுக்கும் இடையே மொழிபெயர்ப்பில் எதற்கு முக்கியத்துவம் தருவது என்று மொழிபெயர்ப்பாளன் தடுமாறுகின்ற இடங்கள் உண்டு. செய்திக்கு முக்கியத்துவம் தருவதா? அல்லது வடிவத்திற்கு முக்கியத்துவம் தருவதா? பொருளுக்கு முக்கியத்துவம் தருவதா? அல்லது நடைமுறைக்கு முக்கியத்துவம் தருவதா? ஆற்றல்மிகு நிகர்மைக்கு முக்கியத்துவம் தருவதா? அல்லது முறைசார் நிகர்மைக்கு முக்கியத்துவம் தருவதா? என்ற வினாக்கள் எழும். இப்படிப்பட்ட சமயங்களில் ஒரு மொழிபெயர்ப்பாளன் எதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பது பற்றிய ஒரு முதன்மை நிரல் (order of priority)வைத்துக் கொள்வது நல்லது என்பார் நைடா. அவர் தரும் முதன்மை நிரல் வருமாறு:

அ. சூழல் சார்ந்த மொழிபெயர்ப்பு சொல்லுக்குச் சொல் மொழிபெயர்ப்பதைக் (Word to word translation) காட்டிலும் சிறந்தது.

ஆ. ஆற்றல்மிகு நிகர்மை (dynamic equivalence) முறைசார் நிகர்மை (formal correspondence)யைக் காட்டிலும் முக்கியமானது.

இ. வாசகனுக்குப் பழக்கமான சொற்களும் தொடர்களும் மரபுவழிப்பட்ட (traditional) சொற்கள், தொடர்களை விடப் பொருத்தமானவை.

ஈ. புனைகதை நாடகம் போன்றவற்றில் இடம் பெறும் உரையாடல்களை மொழிபெயர்ப்பதில் இலக்கியமொழி வழக்கைக் காட்டிலும் பேச்சுமொழி வழக்கே பொருத்தமானது.

2.1.6. சூழல்சார்ந்த மொழிபெயர்ப்பு
(Translation in our circumstances)

ஒவ்வொரு மொழியும் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள மொழிக்குறியீடுகளைக் கொண்டு எண்ணற்ற அனுபவங்களை வெளிப்படுத்துகின்றது. ஒரு மொழி ஓர் அனுபவத்தை வெளியிடக்கையாளும் மொழிக் குறியீடுகள் பிறிதொரு மொழி அதே அனுபவத்தை வெளியிடக்கையாளும் மொழிக் குறியீடுகளினின்றும் வேறுபட்டவை. இக்காரணங்களாலேயே சூழல் சார்ந்த மொழிபெயர்ப்பு தேவையாகிறது.

எ.டு.

பச்(சை)சக்குழந்தை	pachai kulanthai
பச்(சை)சப்பிள்ளை	pachai pillai
பச்(சை)சத்தண்ணீர்	pachai thannir
பச்(சை)ச வளையல்	pachai pudavai
பச்(சை)ச வயல்	pachai valayal
பச்(சை)சப்பேச்சு	pachai pechu
பச்(சை)ச மரம்	pachai maram
பச்(சை)சயைப் பார்க்க முடியல	pachai paarkka mudiyale
பச்(சை)சச் சட்டை	pachai chattai
பச்(சை)ச மண்ணு	pachai mannu
பச்(சை)ச விளக்கு	pachai vilakku
பச்(சை)சத் துணி	pachai thuni
பச்(சை)சக் கயிறு	pachai kayaru
பச்(சை)சப்பட்டாணி	pachai pattani
பச்(சை)ச இலை	pachai ilai
பச்(சை)ச எழுதுகோல்	pachai aluthukool
பச்(சை)ச விறகு	pachai viragu
பச்(சை)சக் குடம்	pachai kutam
பச்(சை)சத் தமிழன்	pachai thamilan
பச்(சை)சக் குதிரை	pachai Kuthirai
பச்(சை)சப் பாம்பு	pachai paampu
பச்(சை)சக் கொடி	pachai koti
பச்(சை)சக் கடலை	pachai katalai
பச்(சை)சக்காய்	pachai kaai

பச்(சை)ச அரிசி	pachai arichi
பச்(சை)ச மிளகாய்	pachai milakayi
பச்(சை)ச வெங்காயம்	pachai venkayam

என்ற தமிழ்த் தொடர்கள் ஒவ்வொன்றிலும் பச்சை என்ற சொல் வேறு வேறு பொருளைக் குறிக்கிறது. ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்போது இவற்றை முறையே,

Very young child	*மிகவும் இளமையான குழந்தை* (mikavum ilamaiyaana kulanthai)	
Cold water	*குளிர்ந்த தண்ணீர்* (Kulirntha thannir)	
Fertile green field	*வளமான பச்சை வெளி* (valamana pachai veli)	
	அவதூறான வார்த்தைகள் (கெட்ட வார்த்தை) avathuraana vaarthaikal (gatta vaarthai)	
growing tree	*மரம் வளர்ந்து கொண்டிருக்கிறது.* maram valarnthu gontirukkirathu	
green saree	*பச்சைச் சேலை*	pachai chealai
green pen	*பச்சைப் பேனா*	pachai pena
green cloth	*பச்சைத் துணி*	pachai thuni

can' see any crop என்று சூழலறிந்து மொழிபெயர்ப்பது அவசிய மாகிறது.

2.1.7. ஆற்றல்மிகு நிகர்மை (dynamic equivalence)

மொழிபெயர்ப்பில் ஆற்றல்மிகு நிகர்மை என்ற கருத்துப் படிவத்தைப் புரிந்து கொள்வதற்கு ஒரு வாசகன் மொழி பெயர்ப்பை எந்த அளவுக்குப் புரிந்து கொண்டான் என்பதை அறிதல் வேண்டும். ஒரு மொழிபெயர்ப்பு செம்மையானது என் பதை எப்படிக்கணிப்பது? மொழிபெயர்ப்பில் இடம் பெற்றுள்ள சொற்களும் இலக்கண அமைப்புகளும் மூலமொழியில் அமைந் திருப்பதற்கு இணையாக இருக்கின்றனவா என்பதை ஆராய்ந்து அதற்கேற்ப மொழிபெயர்ப்பு செம்மையானது என்று கணிப்பது ஒருமுறை. இது பழைய முறை. ஆனால் மொழிபெயர்ப்பில் மூல

மொழி வாசகன், பெறும்மொழி வாசகன் ஆகிய இருவரும் முக்கிய இடம்பெறுகின்றனர். இவர்களை அடிப்படையாகக் கொண்டு மொழிபெயர்ப்பு செப்பமானதா என்று கணிப்பது புதிய முறை. இவ்விரண்டு முறைகளையும் கீழ்க்காணும் படங்கள் மூலம் விளக்கலாம்.

பழைய முறை (Old method)



மூலமொழி
Source Language (S.L.)

பெறுமொழி
Target Language (T.L.)

இப்படத்திலுள்ள சதுரங்கள் மூலமொழியினையும் செவ்வகங்கள் பெறும் மொழியினையும் குறிக்கும். S என்பது மூல மொழியில் M_1 என்ற செய்தியைத் தரும் ஆசிரியனைக் குறிக்கும். இந்தச் செய்தியை R என்னும் மூலமொழி வாசகன் படித்துச் சில அனுபவங்களைப் பெறுகிறான். மூலச்செய்தி M_1 ஐப் பெறுபவனாகவும் அதைப் பெறும்மொழியில் தருபவனாகவும் ஒரே சமயத்தில் செயற்படுகிறவன் RS என்னும் மொழிபெயர்ப்பாளன். அவன் செய்யும் மொழிபெயர்ப்பு M_2 மொழிபெயர்க்கப்பட்ட இந்தச் செய்தியைப் பெறுமொழி வாசகன் படித்துச் சில அனுபவங்களைப் பெறுகிறான். இம்மொழிபெயர்ப்பைச் சரிபார்க்கும் மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளனும் RS மொழிபெயர்ப்பாளனைப் போலவே மூலமொழி, பெறுமொழி இரண்டிலும் தேர்ச்சி பெற்றவன். அவன் மொழிபெயர்ப்பினைச் சரிபார்க்கும் போது M_1 M_2 என்ற இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து இவ்விரண்டிற்கும் வடிவத்திலும் பொருளிலும் ஒருமைப்பாடு இருக்கிறதா என்று கணித்துத் தீர்ப்புக் கூறுகிறான்.

இம்முறையில் ஒரு குறை உள்ளது. மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளன் M_1 M_2 ஆகிய இரண்டிலும் புலமை பெற்றிருப்பதால் M_1 ஐப் பற்றி அறிந்த நிலையிலேயே M_2 ஐக் கணிக்கின்றான். மூலமொழி வாசகன் R_1ஐப் பற்றியோ, பெறும்மொழி வாசகன் R_2 ஐப் பற்றியோ, இவர்கள் இருவரும் கொடுக்கப்பட்ட செய்தியைப் படித்துப் பெற்ற அனுபவங்கள் பற்றியோ அவன் கவலைப்படுவதில்லை.

புதிய முறை (New method)



மூலமொழி
Source Language (S.L.)

பெறுமொழி
Target Language (T.L.)

இப்படத்தில் S என்னும் மூலமொழி ஆசிரியன் தருகின்ற M_1 என்னும் செய்தி R_1 என்ற சராசரி மூலமொழி வாசகனுக்கே. இந்த R_1 ஓர் ஒரு மொழியாளன் (monolingual) M_1 என்ற மூலம் ஒரு மொழியாளனாகிய மூலமொழி வாசகனுக்காக எழுதப்பட்டதே தவிர மொழிபெயர்ப்பு மதிப்பீட்டாளனாகிய இருமொழியாளனுக்காக அன்று. அதுபோலவே R_2 போன்ற ஒரு மொழியாளர்களாகிய வாசகருக்காகச் செய்யப்பட்டதே M_2 என்ற மொழிபெயர்ப்பு. எனவே M_1 ஐப்படித்து R_1 பெற்ற அனுபவங்களை M_2 ஐப்படித்து R_2 பெற்ற அனுபவங்களை ஒப்பிடுவதே மொழிபெயர்ப்பில் செம்மையைக் கணிக்கும் முறை என்பது இப்புதிய முறையின் விளக்கமாகும். இந்த ஒப்பீட்டு அடிப்படையிலேயே மொழிபெயர்ப்பின் ஆற்றல்மிகு நிகர்மை வரையறுக்கப்படுகிறது.

அதாவது மூலமொழி வாசகன் மூலத்தைப் படித்துப் பதில்வினை ஆற்றுவதைப் (respond) போல் எந்த அளவுக்குப் பெறுமொழி வாசகன் மொழிபெயர்ப்பினைப் படித்துப் பதில்வினை ஆற்று கிறானோ, அந்த அளவினதாக மொழிபெயர்ப்பின் ஆற்றல்மிகு நிகர்மை அமையும். இருவரது (மூலமொழி, பெறும்மொழி வாசகர்) கலாச்சார, வரலாற்றுப் பின்புலங்களின் வேறுபாடு காரணமாக, அவர்கள் முறையே தத்தம் மொழிகளில் படித்த செய்தியைப் புரிந்துகொண்டு பதில் வினையாற்றுவது ஒருக்காலும் முழுச்சமமாக (identical) இருக்க இயலாது. இருந்தாலும் இரு சாராரது பதில்வினையும் (responses) பெருமளவு ஒத்திருந்தால்தான் (அதாவது மொழிபெயர்ப்பு அதிக ஆற்றல்மிகு நிகர்மையுடைய தாய் இருந்தால்தான்) மொழிபெயர்ப்பின் நோக்கம் நிறைவேற முடியும்.

2.1.8.மொழிபெயர்ப்பின் முப்பணிகள்
(Three functions of Translations)

எந்த ஒரு மொழிபெயர்ப்பும் மூலத்தின் கருத்தினை இழைபிசகாமல் பெறும்மொழி வாசகனுக்கு வடித்துத் தருவதாக அமைய வேண்டும். மொழிபெயர்ப்பின் இப்பணியினைச் செய்தி தரும் பணி (informative function) என்பர். மூலத்தின் கருத்து மூல மொழி வாசகரது உள்ளத்தில் ஏற்படுத்திய உணர்வுகளை மொழி பெயர்ப்பும் தன் வாசகர் உள்ளத்தில் ஏற்படுத்த வேண்டும். அதற்கேற்ற விதமான புலப்பாடுகளை (expressions) மொழி பெயர்ப்பு பெற்றிருத்தல் வேண்டும். இதனை மொழிபெயர்ப்பின் உணர்வூட்டும் பணி(express function) என்பர். ஒரு மொழிபெயர்ப்பு கருத்தைத் தருவதாகவும், உணர்வூட்டுவதாகவும் மட்டும் இருந் தால் போதாது. கேட்போரையும் வாசகரையும் செயற்படத் தூண் டும் பணி (imperative function) என்பர். இம்முப்பணிகளும் ஒரு மொழிபெயர்ப்பைக் கூடுதல் ஆற்றல்மிகு நிகர்மை உள்ளதாக ஆக்கும்.

2.1.8.1. செய்தி தரும் பணி (Informative function)

கீழ்க்காணும் ஆங்கிலம்-தமிழ் மொழிபெயர்ப்புகளைக் காண்க.

ஆங்கிலம்	தமிழ்
I set up construction firms and often burnt my fingures	கட்டிடங்கள் கட்டித்தரும் நிறுவனம் ஒன்றை நிறுவி அடிக்கடிக் கையைச் சுட்டுக் கொண்டேன். மொ.பெ.1.
Transliteration	Kattitankal kattitarum niruvanam ontrai niruvi atikkatee suttukkontan
	கட்டிடங்கள் கட்டித்தரும் நிறுவனம் ஒன்றை நிறுவியதில் அடிக்கடி பண இழப்பு ஏற்பட்டது. மொ.பெ.2.
But into istant a bad drink during fowl weather	ஆனால் மோசமான தட்பவெப்ப நிலையில் செவனப் ஒரு மோசமான பானம் அல்ல. மொ.பெ.1.
Transliteration	aanal mosamaana tapavapa nilaiyil sevanap oru mosamana paanam alla
	ஆனால் மோசமான தட்பவெப்ப நிலையில் செவனப்பு குடிப்பதற்குப் பரவாயில்லாமல் இருக்கும். மொ.பெ.2.
Transliterion	aannal mosamaana tapavappa nilaiyil sevenap kutippatharkku paravaa illaamal irukkum

மேற்காணும் இரண்டு எடுத்துக்காட்டுகளில் இரண்டாவதாக இடம்பெறும் மொழிபெயர்ப்புகளே (மொ.பெ.2) சொல்ல

வந்த செய்தியை பொருள் மயக்கமின்றி மிகவும் எளிமையாக செய்தியைத் தரும் பணியில் சிறந்து காணப்படுகின்றன.

2.1.8.2. உணர்வினைவூட்டும் பணிகள் (Express function)

கீழ்க்காணும் ஆங்கிலம் - தமிழ் மொழிபெயர்ப்புகளைக் காண்க

ஆங்கிலம்	தமிழ்
1. That demand ban spoiled my life	அந்தத் தர்மசங்கடமான தடை ஆணை என் வ ாழ்வை அழித்து விட்டது. மொ.பெ.1. antat tarmasankatamaana thatai aanai yan valvai alittuvittathu. அந்தத் தடை ஆணை விளங்காமல் போக, அது என் வாழ்க்கையையே அழித்துவிட்டது. மொ.பெ.2. antha thataiyaannai vilankamal pooka: athu ayan valkkaiya alittuvittathu.
2. I fall upon the tree thorns of life; I bleed	வாழ்வின் முட்கள் மரம் மீது நான் விழுந்து விட்டேன். இரத்தம் கொப்பளிக்கிறது. மொ.பெ.1. Vaalvin mutkkal maram meethu naan vilundu vitten; ratham koppilikkirathu வாழ்வின் கூர்மையம்புகள் என்னைத் துளைத்துவிட்டன. என் நாளங்களி லிருந்து குருதி கொட்டுகிறது. மொ.பெ.2. vaalvin kurmaiyumpukal annait thulaithu vittana yan naanakkalirnthu kuruthi kottukirathu.

மேற்காணும் இரண்டு எடுத்துக்காட்டுகளில் மொ.பெ.2. உணர்வூட்டும் பணியில் சிறப்பது வெளிப்படை.

2.1.8.3. செயல் தூண்டும் பணி (Imperative function)

கீழ்க்காணும் ஆங்கிலம்-தமிழ் மொழிபெயர்ப்புகளைக் காண்க.

ஆங்கிலம்	தமிழ்
whatever your hand finds to do it with all your mingh	செய்யும்படி உன் கைக்கு நேரிடுகிறது எதுவோ அதை உன் முழுமையான திறமையோடு செய். மொ.பெ.1. ceiyumpati un kaikku neritukirathu athuvoo, athai yun mulumaiyaana thiramai yooTu ceyi நீ செய்யும் ஒவ்வொரு செயலையும் உன் ஆற்றலோடு செய். மொ.பெ.2.
Give thy thought no tongue	உன் சிந்தனையை நாவிடம் தராதே மொ.பெ.1. yun cinthanaiyai naavidam tharaathe நினைப்பதையெல்லாம் கொட்டி விடாதே மொ.பெ.2. ninaippathaiyallaam kottivitaathe மொ.பெ.2.

மேற்காணும் இரண்டு எடுத்துக்காட்டுகளும் செய்யத் தூண்டும் பணியில் சிறப்பாக அமைகின்றன. அதாவது சொல்லப் பட்ட அறிவுரைய்ய வாசகர்கள் பொருள் தெளிவுடன் மனதில் வாங்கிச் செயற்படுவதற்கு ஏற்றவிதமாய் எளிமையாக அமை கின்றன.

ஒரு மொழிபெயர்ப்பில் இம்முப்பணிகளையும் தனித் தனியே பிரித்து அமைக்க இயலாது. ஒரே மொழிபெயர்ப்பில்

மூன்று பணிகளும் சேர்ந்து அமைவதும் உண்டு. சிலவற்றில் ஒன்று மட்டும் அமையும். சிலவற்றில் இரண்டு அமையும். இது மூலச்செய்தியின் தன்மையைப் பொறுத்தது. கீழ்க்காணும் மொழிபெயர்ப்பைக் காண்க.

ஆங்கிலம்	தமிழ்
The College will reopen on 1st July	சூலை முதல் நாள் கல்லூரி மீண்டும் செயற்படத் தொடங்கும் Julai muthal naal kalluri mindum ceyarpatath thotankum

இந்த அறிவிப்பு வாசகத்தின் மொழிபெயர்ப்பில் செய்தி தரும் பணி ஒன்று மட்டுமே இருந்தால் போதும். உணர்ச்சிகரமான உரையாடல்களிலும், சொற்பொழிவுகளிலும், கவிதைகளிலும் உள்ள உணர்ச்சிக் கூறுகளுக்கு ஏற்றவாறு அவற்றின் மொழி பெயர்ப்புகளிலும் உணர்வூட்டும் பணி மேலோங்கியிருக்கும். சொற்பொழிவு மொழிபெயர்ப்புகளில் செயல் தூண்டும் பணியும் இருக்கும். அறக்கருத்துக்களையும் அறிவுரைகளையும் தாங்கிய வாசகங்களை மொழிபெயர்க்கும்போது, செயல்தூண்டும் பணியே சிறப்பிடம் பெறும். அறிவியல் மொழிபெயர்ப்புகளில் உணர் வூட்டும் பணிக்கு இடமே இல்லை.

2.1.8.4. வாசகரது மொழி / ஏற்பு மொழி (Receptor language)

மொழிபெயர்ப்பில் இலக்கியத்தரம் வாய்ந்த சொற்கள், இலக்கண அமைப்புகள் ஆகியவைதாம், இடம்பெற வேண்டும் என்பதில்லை. ஒரு மொழிபெயர்ப்பு சமூகத்தின் எந்தப் பிரிவின ருக்காக உருவாகிறதோ அந்த வாசகரை மனதில் வைத்து, அவர்கள் புரிந்து கொள்ளும் சொற்களையும் இலக்கண அமைப்புகளையும் தாங்கி வெளிவர வேண்டும். நீண்ட இலக்கியப் பாரம்பரியம் உள்ள மொழிகளின் வாசகரின் தேவைக்கேற்ப மூன்றுவித மொழி பெயர்ப்புகள் தேவைப்படும் என்பார் நைடா.

1. பண்டைய இலக்கியப் புலமையுடையோரும் சுவைக்கும் வண்ணம் இலக்கிய மொழிநடையில் பெயர்த்தல்.

2. தற்கால இலக்கியத்தில் பயிற்சியுள்ள இன்றைய நடுத்தட்டு மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் மொழி பெயர்த்தல்.

3. பாமர மக்களும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிய பேச்சு மொழியில் பெயர்த்தல்.

இலக்கியப் பாரம்பரியமற்ற மொழிகளில் சாதாரண மக்களின் பேச்சுமொழியே மொழிபெயர்ப்பில் இடம்பெறுகிறது.

2.1.8.5. நிலையான நிகரன்கள் (Fixed Equivalents)

முறைசார் நிகரன்கள் அல்லது ஆற்றல்மிகு நிகரன்கள் இவற்றுள் நிலையான நிகரன்களாக அமைந்துவிடுவது உண்டு. மூலத்தின் கருத்துப் படிவம் வாக்கியம், தொடர், சொல் ஆகியவற்றுக்கு நிகரன்கள் இவைதாம் என்று பெறும்மொழியில் நிலைபெற்றுவிடும் நிகரன்களே நிலையான நிகரன்கள் ஆகும். இவை கருத்துக்களை மிகத் துல்லியமாகப் புலப்படுத்தும் நிகரன்கள், பெறும் மொழியில் பொதுவழக்காக நிலைபெற்றவை. ஒரு மொழியில் கருத்து, வாக்கியம் ஆகிய நிலைகளைக் காட்டிலும், சொல், தொடல்நிலைகளில் இவை மிகுதியாகக் காணப்படுகின்றன.

சான்றாக:

சொல்நிலையில்	***ஆங்கிலம்***	***தமிழ்***
(Word level)	***(English)***	***(Tamil)***
pukalitam	asylum	புகலிடம்
kukkiramam	hamlet	குக்கிராமம்
varkothumai	barley	வாற்கோதுமை
nampamutiyatha	incredible	நம்பமுடியாத
thavirkkamutiyatha	unavoidable	தவிர்க்க முடியாத
mutaimutichu	bag and babbage	மூட்டை முடிச்சு

தொடர்நிலையில் (Syntax level)

rathamum chathaiyuma	flesh and blood	ரத்தமும் சதையுமா
kannamuchi	hide and seek	கண்ணாமூச்சி
mulaimutukku	Nook and corner	மூலைமுடுக்கு

ontrukkum uthavatha	good for nothing	ஒன்றுக்கும் உதவாத
sutri valaithu	taking round the bush	சுற்றி வளைத்து

வாக்கிய நிலையில் (Sentence level)

aluthalum pillai avelthaan pera vantum	Every bird must hatch its own eggs	அழுதாலும் பிள்ளை அவள் தான் பெற வேண்டும்
verunkai muzhalam pootuma?	buy no barley	வெறுங்கை முழம் போடுமா?

மொழிபெயர்ப்புத் துறையில் நிலையான நிகரன்கள் மேலும் மேலும் அதிகரிப்பது அவசியமாகிறது. ஒரு மொழி பெயர்ப்பாளன் இத்தகு நிகரன்களை அறிந்திருத்தல் அவசிய மாகும். இவை பொருள் புலப்பாட்டுக்கு உதவுவது மட்டுமின்றி மொழிபெயர்ப்புப் பணியையும் எளிமையாக்குகின்றன.

2.2.0. மொழிபெயர்ப்பு நிகரன், மொழிபெயர்ப்புக் கொள்கைகள் (Translation Equivalent and Principles)

ஒரு மொழியில் கூறப்பட்டுள்ள செய்தியை மற்றொரு மொழிக்குப் பெயர்த்தளிப்பது மொழிபெயர்ப்பு ஆகும். செய்தியைத் தரும் மொழி 'மூலமொழி' (Source Language) என்றும் செய்தியைப் பெறும் மொழி 'பெறும்மொழி' (Receptor language) அல்லது 'இலக்குமொழி' (Target Language) என்றும் அழைக்கப்பெறும். மூலமொழியில் காணப்படும் ஒருசொல் அல்லது கருத்துக்கு நிகரான சொல் அல்லது கருத்தினை மொழிபெயர்ப்பிலும் அமைத்தல் வேண்டும். அவ்வாறு அமையப்பெறும் பெறுமொழிச்சொல் மூலமொழிச் சொல்லுக்குரிய இயல்பான நெருங்கிய நிகரனாக (Natural closest Equivalent) அமையும். இந்நிகரனின் பொருத்தப் பாட்டினை (Suitability) அல்லது நிகர்மையை ஆராய்வது 'நிகரன் கொள்கை' (Theory of Equivalence) எனப்படும்.

நிகரன் கொள்கையை மொழியியல், இலக்கியம், குறியியல் எனப் பல்வேறு துறையைச் சார்ந்த அறிஞர்கள் உருவாக்கியுள்ளனர். மொழிபெயர்ப்புத் திறனாய்வு தொடங்கிய நாள்முதல்

நிகரன் பற்றிய சிந்தனையும் தொடங்கிவிட்டது. மூலமொழி வாசகருக்கும் மொழிபெயர்ப்பு வாசகருக்கும் நிகரன் பற்றிய சிந்தனை எழுவதில்லை. இருமொழிப் புலமை நிரம்பிய திறனாய்வாளர்களே நிகரன் ஆய்வில் பல்வேறு கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

2.2.1. நிகரன் கொள்கைகள் (Principles of Equivalent)

தியோடர் சேவரி, ஜே.சி. காட்ஃபோர்டு, யூன் நைடா, ஆண்ட்டன்போப்போவிக், நியூபெர்ட் மற்றும் லோத்ஃபூர் சையதி போன்றோர் நிகரன் கொள்கைகளைப் பற்றி விளக்கியுள்ளனர். அவை வருமாறு:

1. மாய நிகரன் (Illusory Equivalent)
2. பாட நிகரன் (Textial Equivalent)
3. இயக்க நிகரன் (Dynamic Eqiovalent)
4. மொழியியல் நிகரன் (Linguistic Equivalent)
5. நடையியல் நிகரன் (Stylistic Equivalent)
6. சொற்படிவ நிகரன் (Paradigmatic Equivalent)
7. பொருள் நிகரன் (Semantic Equivalent)
8. பயன்வழியியல் நிகரன்(Pragmatic Equivalent)
9. தொடர் நிகரன் (Syntactic Equivalent)
10. தொடர்பியல் நிகரன் (Communicative Equivalent)

சேவரி, மொழிபெயர்ப்பை ஒரு கலையாகக் கருதுவதனால் மூலநூற் கருத்துக்கு மொழிபெயர்ப்பில் நிகரன் அமைப்பது பற்றிய சிக்கலை உணர்ந்தவராக இருக்கிறார். காட்ஃபோர்டு ஒரு மொழியியல் அறிஞர். இவர் வாக்கியத்தை மொழிபெயர்ப்பின் அலகாகக் கொண்டு பாட நிகரன் பற்றி விளக்குகிறார். நைடா திருமறை மொழிபெயர்ப்புக்கு உதவும் நோக்குடைய ஆங்கில மொழியியலாளர். இவர் எல்லாச் சொல்லுக்கும் கருத்துக்கும் நிகரன் காண்பது இயலும் என்ற கொள்கை உடையவர். மேலும் இவர் நிகரன் ஏற்படுத்த வேண்டிய விளைவு பற்றியும் விரிவாகக் கூறுகிறார். நியூபெர்ட் குறியியல் அணுகுமுறையில் மொழிபெயர்ப்பில் நிகரன்களை வகைப்படுத்தியுள்ளார்.

2.2.1.1. மாயத் தொடர்/ மாய நிகரன் (Illusory Correspondence / Equivalent)

மூலமொழியாசிரியர் கையாண்டுள்ள சொல்லுக்கு நிகரான ஒரு மிகச் சரியான சொல்லினைத் தேர்ந்தெடுக்கும் மொழிபெயர்ப்பாசிரியர், அப்பெறுமொழிச் சொல் மூலமொழிக் கருத்தைப் புலப்படுத்துவதாகக் கருதிக் கொள்கிறார். உண்மையிலேயே அவ்வாறாக அச்சொல் பொருளை உணர்த்தாவிட்டாலும் மொழிபெயர்ப்பாசிரியரின் மாயை அச்சொல்லை உரிய நிகரனைப் போல் கருதச் செய்து விடுகிறது.

சுருக்கமாகச் சொன்னால் மூலமொழிச்சொல்லை முறையாகப் படித்து அதற்கு (பிறமொழிச் சொல்லுக்கு) மிகச் சரியான நிகரனை உருவாக்குவதில்லை.

சான்றாக, 'பாம்பு' என்ற மூலமொழிச் சொல்லை மூல மொழியிலிருந்து பெறுமொழிக்குக் கொண்டு வரும்போது 'கம்பு', 'பல்லி' என்று பொருள் மாற்றி மொழிபெயர்ப்பு நிகரன்களை உருவாக்குவதும், அதே போல் 'கடல்' என்ற மூலமொழிச் சொல்லிலிருந்து பெறு மொழிச் சொல்லுக்கு கொண்டு வரும்போது அதனை 'வாய்க்கால்' என்று பொருள் மாற்றி மொழிபெயர்ப்பு நிகரன்களை உருவாக்குகின்றனர். முதலில் கூறப்பட்ட 'பாம்பு' என்ற சொல்லுக்கு இணையான நிகரன் 'கம்பு' என்பது தவறாக இருந்தாலும் அது உண்மையாக இருப்பதுபோல் ஒரு மாயையை உருவாக்குகிவிடுகின்றனர். அதனால் இதனை மாயநிகரன் என்று அழைக்கப்படுகிறது.

2.2.2. பாட நிகரன் (Textual Equivalent)

ஜே.சி. கார்ஃபோர்டு என்னும் மொழியியலறிஞர் நிகரன் பற்றிக் கூறுமிடத்தில் மொழிபெயர்ப்பாசிரியர் சொல்லின் பொருளுக்கு நிகரன் தேடுவதில்லை. மூலமொழியில் (அல்லது) மூலநூலில் காணப்படும் சூழலை இலக்குமொழியில் உருவாக்கித் தருகின்றார். இவர் பாட நிகரனைச் சூழல் சார்ந்த நிகரன்(Contextual equivalent) என்றும், பாடம் சார்ந்த நிகரன் (co- textual equivalent) என்றும் வகைப்படுத்துகிறார். இவ்வறிஞர் இலக்கிய மொழிபெயர்ப்புத்துறையைத் தம் ஆராய்ச்சிக் களமாகக் கொண்டு ஆராய

வில்லை. இலக்கியத்தில் ஒரு மொழியில் ஒரே பொருட்களத்தில் அமையும் சொற்கள் கூடத் தம்மிடையே குறிப்பிடத்தக்க பொருள் வேறுபாட்டைக் கொண்டிருக்கும். அவ்வாறிருக்க ஒரு மொழிப் பாடத்திற்கு நிகரான பெறுமொழிப் பாடத்தைக் கண்டறிவது என்பது அரிய முயற்சியேயாகும்.

Textual equivalent என்பது மூலமொழியிலுள்ள பாடப் பொருள் இலக்கு மொழியில் மொழி மட்டும் மாறுபட்டு இருக்கும். ஆனால், கருத்துக்கள் சிறிதும் மாறாமல் அப்படியே சிதையாமல் இருக்கும். இதனைப் பாட நிகரன் என்று அழைக்கப்படுகின்றது.

சான்றாக,

''வினை விதைத்தவன் வினை அறுப்பான்
தினை விதைத்தவன் தினை அறுப்பான்''

என்ற பாடப் பழமொழி மூலமொழியிலிருந்து இலக்கு மொழிக்கு மாறும் போது மொழி மாறுபடும். ஆனால் கருத்துக்களும் அதனை விளக்கும் முறைகளும் சிறிதளவு கூட மாறாது.

"What you show, what you reap"

2.2.3. இயக்க நிகரன் அல்லது ஆற்றல் மிகு நிகரன் (Dynamic Equivalent)

மொழிபெயர்ப்பில் மூலத்தின் பொருள் கூறுகளையும் இலக்கணக் கூறுகளையும் பெறும்மொழியின் முறைசார் நிகரன்களால் பதிலீடு செய்வது ஒரு முறை. முறைசார் நிகரன்கள் பல நேரங்களில் தெளிவின்மையையும், பொருள் மயக்கத்தையும் தருவதுண்டு. முக்கியமாக, மூலத்தின் சிறப்பு வழக்குகள்(Idioms), உருவகங்கள், உணர்வுப் பொருள் வழக்குகள் (Connotations) ஆகியவற்றை மொழிபெயர்க்கும்போதும், மூலமொழிக்கேயுரிய தனிப்பட்ட மொழியியற் கூறுகள், கலாச்சாரக் கூறுகள், உரையாடல் அமைப்புகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கும் போதும் முழுவதும் முறைசார் நிகரன்களைப் பதிலீடு செய்ய முடியாது. அதுபோன்ற இடங்களில் மூலத்தின் பொருளுக்கு முதன்மையிடம் தந்து, அப்பொருளை ஆற்றலுடன் பெறும் மொழி வாசகரின் மனதில் பதிய வைக்கக்கூடிய நிகரன்களை மொழிபெயர்ப்பில்

கையாளவேண்டும். இத்தகு நிகரன்களை இயக்க நிகரன் அல்லது ஆற்றல் மிகு நிகரன்கள் என்கிறோம்.

சான்றாக,

ஆங்கிலம்	***தமிழ்***
Listen to my words	என் வார்த்தைகளைக் கவனி மொ.பெ.1 நான் சொல்வதைக் கேள் மொ.பெ.2
At last he touched the point	கடைசியில் அவன் முக்கியமான செய்தியைத் தொட்டான் மொ.பெ.1 கடைசியில் அவன் முக்கியச் செய்தியைக் கூறத் தொடங்கினான் மொ.பெ.2

2.2.4. மொழியியல் நிகரன் (Linguistic Equivalent)

மூலமொழியில் உள்ளதை அப்படியே இலக்கு மொழிக்கு கொண்டு வருவது மொழியியல் நிகரன் எனப்படும். மொழியியல் நிகரனில் ஒரு மொழியில் உள்ளதை மற்றொரு மொழிக்கு மாற்றம் செய்யும்போது அதன் கருத்துக்கள் அனைத்தும் அப்படியே இருக்கும். ஆனால் மொழியில் (Language) எழுத்துவரி வடிவங்களில் (Language Structure) மட்டும் மாற்றம் இருக்கும்.

சொற்களின் இலக்கண அமைப்பை மாற்றாமல் மொழி பெயர்க்கும் போது இந்நிகரன் பயன்படுகிறது. சான்று: 'மீனுண் கொக்கின் தூவியன்ன', தாயின் நரைத்த கூந்தல் இருப்பதைப் புறநானூற்றுத் தொடர் ஒன்று புலப்படுத்துகிறது. இத்தொடரினுள்ள 'மீனுண் கொக்கு' Fisher heron என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ''கன்றும் உண்ணாது கலத்தினும் படா அது, நல்லான் தீம்பால் நிலத்துக் காங்கு'' என வரும் குறுந்தொகை வரிகளில் 'நல்லான் தீம்பால்' 'Good Cow's Milk' என ஏ.கே. இராமானுஜனால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

இலக்கண அமைப்பு வேறுபட்ட மொழிகளிடையே மொழியியல் நிகரன்களைப் பயன்படுத்துவது சிக்கலான பணியாகும்.

சான்றாக,

அவ்வான்னிலவு That Sky Moon Light

இம்மொழிபெயர்ப்பில் 'அ' எனும் சுட்டெழுத்து ஆங்கிலத்தில் சுட்டுப்பெயராக (Demonstrative Pronoun) இடம் பெற்றுள்ளது.

உணர்வூட்டும் (உணர்ச்சிச்) சொற்களை மொழிபெயர்ப்பதிலும் மொழியியல் நிகரன்கள் பயன்தரா. 'அளிய தாமே', 'ஒய்யோ எனின்' என்பவை மொழியியல் நிகரன்களால் மொழிபெயர்க்கப்பட முடியாதவையாகும். Alas! Alas! Lol! என்பவை ஓரளவு பயன்படக்கூடும். ஆனால் இவை மொழியியல் நிகரன்கள் ஆகாது.

மொழியியல் நிகரன்கள் பருப்பொருட்டானவற்றைக் குறிக்கும் போதும் மொழிப்பெயர்ப்பில் பயன்படும். நுட்பமாக உணர்ச்சிகளைப் புலப்படுத்தும்போதும், தன் அனுபவங்களை வெளிப்படுத்தம் போதும் இந்நிகரன்கள் அனைத்தும் சிக்கலை ஏற்படுத்திவிடும்.

சான்றாக,
I came to the university
நான் பல்கலைக்கழகத்திற்கு வந்தேன்

நைடா ஒரு சொல்லுக்குப் பொருளறியும் முயற்சியில் அச்சொல் இடம்பெறும் தொடர் நிலையிலும் (syntactic) அச்சொல்லுக்கு முன்பின் இடம்பெறும் சொற்களின் பொருளை ஒப்பிட்டும் (Semontic) காணவேண்டும் என்பார்.

சான்றாக,

'அது ஒரு நாய்', 'அவன் ஒரு நாய்' என்பனவற்றில் 'நாய்' எனும் சொல் உணர்த்தும் பொருள் வெவ்வேறாக இருப்பது

புலனாகும். எனவே சொல்லுக்குச் சொல் நிகரன் காணும் முயற்சி ஒருவேளை பயனளிப்பதாக அமையும். அல்லது இந்நிகரன் பொருளற்ற மொழிபெயர்ப்பை அளிக்கும்.

மரபுப்பொருள் (conventional meaning) உடைய சொற்களை மொழியியல் நிகரன்களால் மொழிபெயர்ப்பது தவறான முறை யாகும். ‘தொல்லைகொடு’ என்பதனை ‘மனக்கலக்கம் உண் டாக்கு’ எனக் கொண்டு மொழிபெயர்க்காமல் 'trouble in the worry (n)' என மொழிபெயர்ப்பது பெறுமொழி வாசகருக்கு மருட்சியை உண்டாக்கும். ‘தொல்லைகொடு’வில் காணப்பெறும் தொன்மப் பொருளை மொழியியல் நிகரனால் அளித்தலியலாது ஆங்கிலத் தில் இது போன்றதொரு தொன்ம நிகரனைத் (Mythical equivalent) தேர்ந்தெடுத்தால் மட்டுமே தொன்மப் பொருளை வாசகருக்கு உணர்த்த முடியும். எனவே மரபு சார்ந்த சொற்களுக்கு மொழியியல் நிகரன்கள் பயன்படாது.

2.2.5. நடையியல் நிகரன் (Stylistic Equivalent)

போப்போவிக், மூலமொழியில் நடைக்கு அல்லது செயல் பாட்டிற்கு நிகராக மொழிபெயர்ப்பிலும் நடையை அமைப் பதனை ‘நடைநிகரன்’ என்கிறார். எதுகை, மோனை, வண்ணம், இயைபு, ஒலிக்குறிப்பு, வட்டார வழக்கு, மங்கலச்சொல், புதுப் பொருள், அடை, தொடர்கட்டு, பழமொழி ஆசிரியரின் அனுபவப் பாதிப்பு போன்றவை நடைக்கூறுகளாகும். இவற்றை மொழி பெயர்க்கும்போது மூலநூலின் தன்மை மாறாமல் ஏற்புடைய நிகரனைத் தேர்ந்தெடுப்பது இன்றியமையாததாகும்.

நுவல்பொருளுக்கு ஏற்ப ஒலிகளை அமைக்கும் பாங் கினை ஒலி வண்ணம் என்பர். ஒலி நயமுடைய மூலமொழிச் சொற் களுக்கு நிகரான பெறுமொழிச் சொற்களைத் தேர்ந்தெடுத்து நடை நிகரன்களை அமைக்க உதவும். இந்நிகரன்கள் மூலமொழியின்பத் தைப் பெறுமொழி மொழிபெயர்ப்புக்கும் அளிக்கும். சான்றாக,

‘‘குறுகுறு நடந்து, சிறுகை நீட்டி
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்’’ (புறம்.188)

என்ற வரிகளின் மொழிபெயர்ப்பில் ஏ.கே. இராமானுஜன்

"Who Patter on their little feet
stretch tiny hands
scatter touch
grub with mouths and
grab with fingers"

என நடை நிகரன்களைப் பயன்படுத்தியுள்ளார். 'குறுகுறு' என்பதன் ஒலி நயத்தை 'Patter. Little' என்பனவற்றிலும், 'சிறுகை'யை Stretch tiny *(சிறு)* என்பனவற்றிலும், அடுத்த வரியில் இடம்பெறும் டகர இரட்டிப்பு ஒலியும் உம்மைநயம் -grub with grab with என்பனவற்றிலும் மொழிபெயர்ப்பாசிரியர் அமைக்க முன்வந்துள்ளார்.

ஒலிநயத்தை மையமிட்ட நடை நிகரன்கள் தாம் மொழிபெயர்ப்புக்கு அழகியல் தன்மையை அளிக்கின்றன. இம்மொழிபெயர்ப்பு வெறும் செய்தியாக மட்டுமே அமைந்திருக்கும்.

சான்றாக,

1 He passed away
இயற்கை எய்தினார்
அவர் விண்ணுலகை அடைந்தார்

2. He kicked the bucket
அவன் வாளியை உதைத்தான்

மேற்கூறிய சான்று 2-ல் கூறப்பட்டவைகள் நடையியல் நிகரன் ஆகாது. ஒரு பாட்டோ அல்லது ஒரு பாடமோ ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மாற்றும்போது மூலமொழியின் நடையைப் பெறுமொழிக்குக் கொண்டு செல்லும்போது மூல மொழி நடையைச் சிறிதும் மாற்றாமல் எழுதுவது நடையியல் நிகரன் ஆகும்.

2.2.6. தொடர் நிகரன் (Syntactic Equivalent)

குறியியல் அணுகுமுறையில் மொழிபெயர்ப்பு நிகரன்களை ஆராய்ந்த நியூபெர்ட் எனும் அறிஞர் தொடர் நிகரன், பொருள் நிகரன், பயன்வழியில் நிகரன் என்று மூன்றாக நிகரனை வகைப்படுத்துகிறார். தொடர் நிகரன்கள் சொற்பொருள்

பின்னணியை உடையன, இலக்கண அமைப்புச் சார்ந்தன, நைடா கூறுவதுபோலப் பொருள் நிரம்பிய சொல் தொகுதிகளை மொழி பெயர்ப்பின் அடிப்படை அலகுகளாக இத்தொடர் நிகரன் கொண் டிருக்கிறது.

தமிழ்மொழியின் மரபிலக்கணம் தொடர்களை வேற் றுமைத்தொடர் அன்மொழித் தொடர் எனவும், தொகைநிலைத் தொடர், தொகாநிலைத் தொடர் எனவும் பகுத்துள்ளது. இவ் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டும் தொடர்நிகரன்களை ஆராயலாம். மொழிபெயர்ப்பாசிரியர் தொடர் பிரிப்பதில் கவனமும் கருத்தும் உடையவராய் இருத்தல் வேண்டும். தொடர் பிரிப்பதில் தவறு ஏற்படுமானால் தவறான மொழிபெயர்ப்பைத் (Mistranslation) தர நேரிடும். மொழியியலாரின் அண்மையுறுப்பு ஆய்வு (Analysis of Immediate Constituent)தொடர் பிரிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

தமிழ்த் தொடர் அமைப்பில் பல அடைமொழிகளை அடுத்துப் பெயர்ச்சொல் இடம்பெறுவதில்லை. இதனால் பழந் தமிழ்ச் செய்யுள்களில் விரிவான வருணனையைக் காணவியலாது எனக் கூறும் ஜி.எல். ஹார்ட், குறிப்புப் பொருளைத் தரவல்ல இச் செய்யுள்கள் பெயரெச்ச, வினையெச்சத் தொடர்களைக் கொண் டிருப்பதன் முக்கியத்துவத்தை உணர்த்துகிறார். தொடர்கள் செய் யுள் நயத்தை விரிவாக்கும் வகையில் தமிழில் காணப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த ஒரு தொடரை மற்றொரு வகைத் தொடராக மொழிபெயர்த்தால் மூலநூலின் சுவை மறைந்து விடும். இதன்வழித் தொடர் நிகரன்களின் தேர்வும் அவற்றின் இன்றியமையாமையும் தெரியவரும்.

'யாயும் ஞாயும் யாரோ கியரோ' என்ற குறுந்தொகைப் பாடலில் இறுதியடிகளில் இடம்பெறும் உவமைத் தொடர் ஆங்கில மொழிபெயர்ப்பில் உம்மைத் தொடராக மாற்றம் பெற்றுள்ளது.

"செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே" (குறுந்.40)

என்ற வரிகளில் காணப்பெறும் உவமை 'நீர்' மட்டுமேயாகும்.

Our hearts have mingled
like red earth and pouring rain

(ஏ.கே.இராமானுஜன்)

என்ற மொழிபெயர்ப்பில் காணப்பெறும் தொடர் நிகரன் செம் புலமும் பெயல் நீருமாகிய இரண்டினையும் and என்ற இணைப்புச் சொல்லிட்டு விளக்குகிறது. மூலநூல் தொடர் செம்புலத்தில் பெய்த மழைநீரைக் குறிக்க, மொழிபெயர்ப்புத் தொடர் செம் புலத்தையும் மழைநீரையும் குறித்துள்ளது.

உவமப்பொருள் மாறுபட்டு விரிவடைந்த நிலையில் மொழிபெயர்ப்பில் தொடர் நிகரன் அமைந்திருப்பது பெறுமொழி வாசகர் மூலநூற் சுவையைப் பெறத் தடையாக நிற்கும். இச்சிக்கலுக்கான தீர்வு ஏற்புடைய, இயல்பான நெருங்கிய தொடர் நிகரனைத் தேர்வு செய்வதேயாகும். இதற்கு,

Our hearts have mingled like
pouring rain in red earth

என்று தொடர் நிகரனை அமைத்தால் பொருத்தமுற விளங்கும். இந்நிகரன் செம்புலத்தில் பெய்த மழைநீரைக் குறித்துள்ளது. இதன்கண் ஏற்பட்டுள்ள மாற்றம் மூலமொழியில் காணப்பெறும் சொல் வரிசையை மாற்றியதேயாகும். ஆங்கில மொழியின் வாக்கிய அமைப்பு SVO முறையிலும், தமிழ் மொழியின் தொடர் அமைப்பு SOV முறையிலும் இருப்பது இவண் நோக்குதற்குரியது. இதன் காரணமாகச் 'செம்புலப் பெயனீரின்' புதைநிலையமைப்பு (Deep structure), செம்புலத்தில் (S) நீர் (Water), *(மழை)* (rain) (O), பெய்தது (V) (Poured) on red earth (S) *(சிவப்பு மண், சிவப்பு பூமி)* என மாறி அமைந்துள்ளது.

2.2.7. பொருள் நிகரன் (Semantic Equivalent)

நியூ பெர்ட்டின் வகைப்பாடுகள் மூன்றனுள் பொருள் நிகரனும் ஒன்றாகும். இந்நிகரன் ஒரு சொல்லின் பொருளை மற்றொரு மொழியில் உணர்த்துகிறது. பொருள் இரு வகைப்படும்

1. பொதுப்பொருள் (Referential Meaning), *2.* குறிப்புப்பொருள் (Connotative Meaning). இவற்றை அகராதிப் பொருள், கருத்துப் பொருள் (நுண் பொருள், மரபுப்பொருள்) என்றும் வழங்குவர். மூலநூலில் ஒரு சொல் புலப்படுத்தும் பொருளை இனங்காண்பது மொழிபெயர்ப்பாசிரியரின் முதற்கடமையாகும். இதுவே இலக்கிய மொழிபெயர்ப்பின் தனித்தன்மையாகும். அறிவியல் மொழி பெயர்ப்பிலும் இயந்திர மொழிபெயர்ப்பிலும் (Machine Translation) இச்சிக்கல் ஏற்படுவது அரிது. இவ்இருவகை மொழிபெயர்ப்புகளிலும் வரையறுக்கப்பட்ட சொற்பொருள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' (குறுந்.2) எனத் தொடங்கும் குறுந்தொகைச் செய்யுள் மொழிபெயர்ப்பில் 'honey' என்னும் நிகரன் இரண்டு சூழல்களில் இடம்பெற்றுள்ளது. 'கொங்குதேர்' என்பதனை 'in search of honey' என்றும், 'பெருந் தேன்' என்பதனை 'honey' என்றும் மொழிபெயர்ப்பாசிரியர் மொழிபெயர்த்துள்ளார். தும்பி பூந்தாதுக்களைத் தோந்தெடுக் கிறது. அதன்மூலம் நல்ல தேனைப் பெறுகிறது. ஆக, தும்பியின் வாழ்க்கை 'a life in search of pollen-grains' என்று மொழிபெயர்க்கப் பட்டிருக்க வேண்டும். பெருந்தேனடைகளைக் குறிக்கிறது. தேனை அன்று, இவ்வரியில் 'பெருந்தேனு'க்குரிய பொருள் நிகரன் bee-hive என்றும் நிகரன்கள் அமைந்திருக்க வேண்டிய வரி களில் 'honey' என்னும் சொல் நிகரன் (Lexical Equivalent)அமைந் திருப்பது சொற்பொருளுணர்தலில் மொழிபெயர்ப்பாசிரியருக்கு ஏற்பட்ட சிக்கலை உணர்த்துகிறது.

2.2.8.பயன்வழி நிகரன் (Pragmatic Equivalent)

குறியியல் அணுகுமுறையில் மொழிபெயர்ப்பை ஆராய்ந்த நியூபெர்ட் நிகரன் கொள்கையில் இறுதியாகப் பயன்வழி நிகரனைக் கூறியுள்ளார். தொடர் நிகரன், பொருள் நிகரனையும், பொருள் நிகரன், பயன்வழி நிகரனையும், பயன்வழி நிகரன் மற்ற இரண்டு நிகரன்களையும் சிறப்பிக்கிறது. இத்தொடர்பினால் ஒரு நிகரன் குறிகளுக்கிடையிலான தொடர்பையும், பின்னர்க் குறி களுக்கும் கருத்துக்குமிடையிலான தொடர்பையும், இறுதியில் குறிகளுக்கிடையிலான தொடர்பு, குறிகளுக்கும் கருத்துக்குமிடை

யிலான தொடர்பு மற்றும் அவற்றைப் பயன்படுத்தவோரையும் விளக்கி நிற்கும். இதனால் மூலநூற்செய்தி, செய்தியின் உட்கிடை, வாசகர் ஆகிய மூன்று நிலைகளிலும் பயன்வழி நிகரன் செயல்படு கிறது.

பயன்வழி நிகரன் சூழலையும், கூற்று மாந்தரையும் உள்ளடக்கியது. இதனால் இந்நிகரன் நூலாசிரியரின் நோக்கத் தையும் நூலெழுதப்பெற்ற சூழலையும், மொழிபெயர்ப்பு வாசக ருக்குப் புலப்படுத்துகிறது. மொழிபெயர்ப்பு மூலநூற்பயனின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

இலக்கியப் பயன் காலத்துக்குக் காலம் மாறுபடுகிறது. சமூகத் தேவைகளுக்கேற்ப இலக்கிய வகைகளும் தோன்று கின்றன. இந்நிலையில் ஒரு நாட்டில் விடுதலைப்போர் அல்லது புரட்சி நடந்தபோது, இவை நடப்பதற்குத் தூண்டுகோலாக விளங் கிய நூல் மற்றொரு நாட்டில் அத்தகு சூழல் உருவாகும் காலத்தில் பெருமதிப்பைப் பெறும். சான்றாக, திராவிட இயக்க எழுத்தாளர் கள், பகுத்தறிவை வலியுறுத்திய சாக்ரடீஸின் தமிழ் நாடகத்தை யும், தமிழில் மனோன்மணீயத்தில் வரும் ஜீவகனின் வீர உரையும், பாரதியாரின் சத்ரபதி சிவாஜியின் சூளுரையும் தமிழில் பெரு வரவேற்பினைப் பெற்றமை, ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ் பியரின் ஒதெல்லோ, ஜுலியஸ் சீசர் போன்ற நாடகங்கள் படித்த வர்களிடம் ஆதரவு பெற்றமை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவை முழுமையான மொழிபெயர்ப்புகளாக அமையா விட்டாலும் இவற்றில் காணப்பெற்ற நிகரன்கள் பயன்வழி நிகரன்கள் ஆகும். சான்றாக,

> Cowards die many times before their death
> but a valiant never taste the death but once

என்ற ஜுலியஸ் சீசர் தனக்கு எதிராக உள்ள சூழல்களை அறிந்தபோது கூறிய வரிகளை விபுலானந்த அடிகள் தமிழில்,

> ''அஞ்சினர்க்கு சதா மரணம் அஞ்சாத நெஞ்சத்து
> ஆடவர்க்கு ஒரு மரணம்''

என மொழிபெயர்த்தார். இவ்வரிகளில் பாட நிகரன்களை(Cowards -கோழை, Valiant -வீரர்) எதிர்பார்க்க இயலாது. ஆனால் நூல் எழுந்த சூழலும், நூற்பயனும், ஒற்றுமையுடையன. ஏனெனில் ஜுலியஸ் சீசர் உரோம் நாட்டின் மக்களாட்சி முறையைப் புறக் கணித்து, தானே முடிசூட்டிக் கொள்ள விரும்புகிறார் எனக் கருதிய அவன் நண்பர்களும் அரசவையின் முக்கிய உறுப்பினர்களும் அவனை மக்கள் முன்னிலையில் கொல்லத் திட்டமிட்டனர். இச்சூழல் ஆங்கிலேய அரசு இந்தியாவில் மக்களாட்சி நிறுவத் தடையாயிருந்ததனை ஒத்துள்ளது. எனவே தான் சுதந்திரப் போராட்டக் காலத்தில் தோன்றிய இந்நூல்கள் வாசகர் மனத்தில் போராட்ட உணர்வையும் ஏற்படுத்தின. எனவே மொழிபெயர்ப்பு கள் பயன்வழி நிகரன்களைக் கொண்டுள்ளன.

சான்றாக, சங்க இலக்கிய மொழிபெயர்ப்புகளைக் கூறலாம். சங்க இலக்கியத்தைத் தற்காலச் சூழலில் படிக்கும் தமிழ் வாசகரால் கூட நூலின் காலச் சூழலை ஓரளவு மட்டுமே உணரமுடி யும். இவ்வுணர்தலுக்கு நூல் தவிர்த்த புறக்காரணிகளும் பண் பாடும் காரணமாகின்றன. எனவே மொழிபெயர்ப்பில் பயன்வழி நிகரன்களால் எதிர்பார்க்கும் விளைவைப் பெறுமொழி வாசக ரிடம் உருவாக்க முயல்வது சிக்கலான முயற்சியாகும். இவ் இலக்கியங்களுக்குப் பாடநிகரன்களும் பொருள் நிகரன்களும் ஏற்புடையனவாய் விளங்கும்.

பயன்வழி நிகரன்கள் குறிப்பிட்ட சமூகத் தேவை மற்றும் சூழலின்போது மட்டுமே மொழிபெயர்ப்பில் பயன்பெறும். மற்ற காலங்களில் அவை மொழியியல் நிகரன்களாகக் காட்சியளிக்கும்.

2.2.9.சொற்படிவ நிகரன் (Paradigmatic Equivalent)

ஒருசொல், தொடர்பாட்டு நிலையிலும் (syntagmatic) இணை நிலையிலும் (paradigmatic) பொருள் உணர்த்துகின்றது. போப்போவிக், ஒரு சொல் இணைநிலையில் பொருள்தருவதனை உணர்ந்து அதற்கேற்ற நிகரன்களை அளிப்பதனைச் சொல் நிகரனைக் காட்டிலும் உயர்வான வகையினதாகப் போற்றுகிறார்.

தொடர்பாட்டு நிலையில் இலக்கணப் பொருளைக் காணும் மொழிபெயர்ப்பாசிரியர் இரண்டாம் நிலையின் சொல்

லின் அகத்தே பொதிந்துள்ள சமூகப் பண்பாட்டுப் பின்னணியை உணர்கிறார். இப்பின்னணியில் சொற்கள் வெறும் அகராதிப் பொருளுடையனவாக அன்றிப் படிவங்களாக விளங்குகின்றன.

சொற்படிவங்கள் ஒரு சமூகத்தில் காணும் பருப்பொருள் சாராத கருத்துக்களையும் கோட்பாடுகளையும் உணர்த்துவன. இவை நிலையான மாதிரிகளாக (constructed models) மூலப் படிவங்களாகச் செயல்படுகின்றன. இவை கட்புலனாகாத மறைஞானக் கருத்துக்களைப் (mystical ideas) பெரிதும் உணர்த்துகின்றன.

அணு ஆராய்ச்சியாளர்கள் அணுவின் அமைப்பை (Atomic structure) C,H,O என்ற மூலங்களால் மாதிரிப் படிவமாக்கிப் புலப்படுத்துகின்றனர். கிறித்தவ இறையியலார் இயேசு கிறிஸ்துவை மாதிரிப் படிவமாக (அ) சொற்படிவமாகக் (Paradigm of God) காண்கின்றனர். இவ்வகையில் இலக்கியங்களிலும் பல சொற்படிவங்கள் காணப்படுகின்றன.

சங்க அகத்திணைப் பாடல்களில் 'முல்லை' எனும் மலர் கற்பினை விளக்கும் சொற்படிவம் ஆகும். முல்லை நிலத்தில் முறையான கற்பு வாழ்க்கை (குடும்பம் - Family - Kutumpam) காட்டப்படுகின்றது. தலைவன் வினைவயின் செல்ல, தலைவி அவன் வரவுக்காக ஆற்றியிருத்தலை அங்கே காணலாம். முல்லைத் திணையின் உரிப்பொருளான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் கற்பு வாழ்வின் சிறப்பினை உணர்த்தும்.

'முல்லை சான்ற கற்பு' (purity in chastity) (mullai canra karpu) (நற்.142) எனும் தொடர் முல்லை கற்பினுக்குப் படிவமாக விளங்குவதைக் குறிக்கும். இச்சொல்லை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜி.எல்.ஹார்ட் ஜே.வி. செல்லையா, என்.இரகுநாதன் போன்றோர் இதனை ஒரு படிவமாகக் கருதவில்லை. அவர்கள் ''Mullai' (mullai)' எழுத்துப் பெயர்த்தும், ஒலிபெயர்த்தும் Jasmine casmin என மொழிபெயர்த்தும் உள்ளனர். இவ்விரு நிகரன்களும் 'முல்லை' எனும் சொல்லை, தொடர்பாட்டு நிலையில் பொருளுணர்ந்து மொழிபெயர்த்து இருப்பதனை உணர்த்துகின்றன.

ஆங்கிலத்தில் தூய்மையையும் ஒழுக்கத்தையும் குறிக்கும் சொற்படிவமாக 'Lily' மலரைக் கொண்டுள்ளனர். இப்படிவம் கன்னி மரியாளைக் குறித்துள்ளது. மரியாளைக் கற்புடையவர் எனக் காட்டும் வடிவமாக Lily மலர் வழங்கி வருகின்றது. இதனை முல்லைக்குரிய சொற்படிவ நிகரனாகக் கொள்ளலாம். மேலை நாட்டில் 'இலிலி' (illi) மலரைப் போற்றியது போல முல்லையைப் போற்றினர்' எனத் தனிநாயக அடிகள் கூறுவது (தமிழ்த்தூது, ப.55) இவண் குறிப்பிடற்குரியது.

கற்பு, ஒழுக்கம், தூய்மை என்று நிலைகளில் மூலமொழியிலும் பெறுமொழியிலும் 'முல்லை'யும், Lilyயும் நிகராகப் பயன்பட்டுள்ளன. சமய வழக்குடையதாக (Lily-foot) இறைவனின் திருவடி இருப்பினும் கூடப் பெண்ணின் கற்பு வாழ்க்கைக் குரிய (மேனாட்டார் பண்பாட்டில் கன்னிமைக்குரிய) படிவமாக வழங்குகிறது. கிரேக்க மொழியில் கற்பு என்ற சொல் காணப் பெறவில்லை. மாறாகத் 'தூய்மை' என்ற சொல் 'agnes' ayres என வழங்குகிறது. இலத்தீனில் வெண்மை, தூய்மை ஆகியவற்றை உணர்த்தும் லில்லி மலர் என அழைக்கப் பெறுகிறது. இதனையே இன்று கத்தோலிக்கக் கிறிஸ்தப் பிரிவினர், அமலபுஷ்பம் (Little Flower) எனப் பெயரிடப்பட்டுள்ளனர். இவை கற்புக்குச் சான்றாக கன்னி மரியாளைக் குறிக்கின்றன. எனவே Lily என்னும் சொற்படிவ நிகரனை விலக்கி 'முல்லை'யை Jasmine என்று மொழி பெயர்ப்பது ஏற்புடையதன்று.

அல்லி மலரைக் குறிக்க 'Water Lily' என்னும் பெயர் இருப்பதனால் 'முல்லை'யை Lily என ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது ஏற்புடையதாகும். மேலும் 'முல்லை' உணர்த்தும் சமூகப் பண்பாட்டை Jasmine என்பதனைக் காட்டிலும் 'Lily' எனும் நிகரனால் தெளிவாகப் பெறுமொழி (ஆங்கிலமொழி) வாசகர்கட்கு உணர்த்த முடியும்.

சொற்படிவ நிகரன்களைத் தேர்வு செய்வது சிக்கலான பணி எனினும் இயல்பான நிகரன்கள் காணப்படும் சூழ்நிலையில் அவற்றைப் பயன்படுத்துவது நம்பகமான மொழிபெயர்ப்பை அளிக்கும்.

2.2.10. தொடர்பியல் நிகரன் (Communicative Equivalent)

ஈரானிய அறிஞர் லோத்ஃபூர் சையதி, மூலமொழிப் பாடமும் பெறுமொழிப் பாடமும் நிகரான தொடர்பியல் தகுதியைப் (Communicative) பெற்றிருக்குமாயின் அந்நிலையில் அம்மொழிபெயர்ப்பில் நிகர்மை இருப்பதனை உணரலாம் என்பார். மேலும் இவர் ஒரு நிகரன் தொடர்பியல் நிகரனுக்குரிய தகுதியைப் பெறுவதற்கு மொழிபெயர்ப்பாசிரியர் கருத்தில் கொள்ள வேண்டிய ஒன்பது நிகரனையும் விளக்குவார். அவையாவன:

அ. சொற்பொருள்	(Word meaning)
ஆ. கட்டமைப்பு	(Structure)
இ. பாட இயல்பு	(Textual character)
ஈ. வாக்கியப் பொருள்	(Sentence meaning)
உ. கூற்றுப்பொருள்	(Complex meaning)
ஊ. முன்கருத்து	(Formal notion)
எ. நடை	(Style)
ஏ. வாசகர் அறிவு	(Reader's knowledge)
ஐ. இலக்கிய விளைவு	(Influence of literature)

சையதியின் கருத்துப்படி தொடர்பியலில் (அ) ஆசிரிய வாசகர் கருத்துப் பரிமாற்றத்தில் நிகரன்களைப் பொருத்தமுற அமைப்பதற்குத் தடையாய் நிற்பவை காலமும் பண்பாடும் ஆகும். இக்கருத்தைச் சான்றுகாட்டி விளக்கலாம்.

கிறிஸ்தவத் திருமறையில் கிரேக்க மொழியில் எழுதப் பெற்ற புதிய ஏற்பாட்டில் 'அவபோதகரின் அவபக்தியான வார்த்தைகள். . . அரிபிளவையைப் போலப் படரும்' (தீமோ.2:17) என்ற வாக்கியத்தில் இடம் பெறும் 'அரிபிளவை' எனும் நிகரனுக்குரிய மூலமொழிச்சொல் (Target Word) என்பது. இதன் அகராதிப் பொருள் '' Necrosis usually with decomposition of a part of the body affect with mortification. எனவே gangrene என்பது சதையழுகலைக் குறிக்கிறது. ஆனால் பிளவை எனும் சொல்லின் பொருள் 'an invertebrate ulcer, a cancer, a carbuncle' என்பதாகும்.

மூலமொழிச் சொல் ''அவபோதகரின் அவபக்தியான வார்த்தைகள் மெல்ல மெல்ல அழிந்துபோகும் நிலையைக் குறிக்கும் உருவகமாகும். இதனை ரோமன் கத்தோலிக்கத் திரு மறையில் 'அரிபிளவை' எனவும், சீர்திருத்தக் கிருத்தவரின் திரு முறையில் 'புற்றுநோய்' (பவர் power மொழிபெயர்ப்பு) எனவும் மொழி பெயர்த்துள்ளனர். பிளவை வேறு, புற்றுநோய் வேறு, எனினும் ஒரே மூலச் சொல்லுக்கு ஒவ்வொரு காலத்திலும் வெவ் வேறு நிகரனைத் தேர்த்தெடுத்துள்ளனர். இத்தேர்வு முறையில் அடிப்படை நோக்கம் தொடர்பியல் நிகரனைத் தெரிவு செய்வ தாகும்.

மூலநூலாசிரியரின் கருத்து பெறுமொழி வாசகரைச் சென் றடைவதற்குத் தடையாய் நிற்கும் காலத்தையும் பண்பாட்டையும் கடந்து தொடர்பியல் நெறியிலான நிகரனை அவ்வக் காலத் திற்கேற்பத் தெரிவு செய்துள்ளனர். முதல் மொழிபெயர்ப்பின் போது 'பிளவை நோய்' பேரழிவை ஏற்படுத்தும் நோயாக இருந் திருக்கிறது. அடுத்த மொழிபெயர்ப்புக் காலத்தில் பிளவை, தீர்க் கக்கூடிய நோயாகவும், புற்றுநோய் மெல்ல நின்று கொல்லும் நோயாகவும், சுகமாக்க இயலாததாகவும் இருந்திருக்கிறது. எனவே 'மெல்ல மெல்ல மொத்தமும் அழிந்துபடும்' என்ற மூல நூற் கருத்தை உணர்த்த மொழிபெயர்ப்பாசிரியர் தம் காலத் திற்கேற்பத் தொடர்பியல் நிகரனைத் தெரிவு செய்துள்ளார்.

சான்றாக, திருமதி சோனியா காந்தி அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்து பேசும்போதும் அவர் பேசியதையும் முழுமை யாக மொழிபெயர்த்துக் கூறுபவர் சொல்லுவதில்லை. மாறாக அவர் பேசியதில் என்ன பொருள் உள்ளது என்பதை மட்டுமே கூறுகின்றனர். இதனைத்தான் Communicative Equivalence என்று அழைக்கிறோம்.

தொடர்பியல் நிகரன் நம்பகமான மொழிபெயர்ப்பைத் தர உதவுகிறது. மேலும் வேறுபட்ட மொழி, இன, பண்பாடுடைய பெறுமொழி வாசகரை மூலநூலின் ஆசிரியரிடம் இட்டுச் செல் கிறது.

2.3. பொருத்தமான மொழிபெயர்ப்பு நிகரன்களைத் தெரிவு செய்தலும் அவற்றின் அணுகுமுறைகளும் (The methods of selecting apt equivalents in translation)

மூலமொழிப் பொருளுடன் வடிவம் பொதுவாக நெருக்கமாக அமையும் பெறுமொழி வடிவம் நிகரன் (Equivalence) எனப்படுகிறது. மூலநூல் வெளிப்படுத்தும் அனைத்துக் கூறுகளையும் அப்படியே பெறுமொழிக்குக் கொண்டு வர முயலும் மொழிபெயர்ப்பாளர், மூலமொழிக்கு நிகரான நிகரன்களைப் பெறுமொழியில் கொண்டுவரும் செயல் மொழிபெயர்ப்பில் முக்கிய இடம் வகிக்கின்றது. நிகரன்களைப் பற்றித் தியோடர் சேவரி, ஜே.சி. இரட்ஃபோர்டு, யூஜின் நைடா, சூசன் பாஸ்னட், கோலர், கென்னி, சிதியோர்டூரி, செஸ்டர்மன் போன்ற ஆய்வாளர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளனர்.

மொழிபெயர்ப்புக் கொள்கையில் நிகரன் ஒரு மையக் கருத்தாக்கம் என்கிறார் செஸ்டர்மன். நிகரனைச் சொல், தொடர், இலக்கணம், பிரதி, பயன்பாடு என வகைப்படுத்துகிறார். மொனா பேக்கர் நுணுக்கமாக மொழிபெயர்ப்புப் பிரதிகளை ஆராய்ந்தால், நிகரன் பற்றிய கொள்கையில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனினும் மொழிபெயர்ப்பாளர்களின் திறனை வளர்ப்பதில் நிகரன் இன்று வரை முக்கியமான இடத்தைப் பெறுகின்றது.

மொழிபெயர்ப்பில் பொருத்தமான நிகரன்களைத் தேர்வு செய்து, பெறுமொழியின் தன்மைக்கேற்பப் பயன்படுத்துகின்ற மொழிபெயர்ப்பாளர் தம்முடைய செயலில் பெரிதும் வெற்றி பெறுகின்றார். மொழிபெயர்ப்பாளரின் மொழி ஆளுமை, அறிவியல் நோக்கு, பண்பாட்டுப் பின்புலம், அறிவுத்திறன், பரந்துபட்ட பொது அறிவு, சமூக ஈடுபாடு போன்ற பல்வேறு காரணிகள் நிகரன்கள் தேர்ந்தெடுப்பில் அடிப்படையாக விளங்குகின்றன.

நிகரன்களைத் தேர்ந்தெடுப்பதில் பொதுவாக மொழிபெயர்ப்பாளர்கள் பின்பற்றும் அணுகுமுறைகள் பின்வருமாறு:

அ. எழுத்துக்கு எழுத்து

ஆ. உருபனுக்கு உருபன்

இ. சொல்லுக்குச் சொல்
ஈ. மரபுத்தொடருக்கு மரபுத்தொடர்
உ. வாக்கியத்துக்கு வாக்கியம்
ஊ. கருத்தியலுக்குக் கருத்தியல்
எ. சூழலுக்குச் சூழல்

2.3.1. எழுத்துக்கு எழுத்து (Letter to letter)

மூலமொழியினை அப்படியே ஒலி பெயர்ப்புச் செய்து பெறுமொழியில் மொழிபெயர்ப்புச் செய்தல் இவ்வகையில் அடங்கும். ஒருவகையில் மூலமொழிக்குப் பதிலியாகப் பெறு மொழியில் எழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. இடங்கள், விலங்குகள், பறவைகள், கருவிகள், மனிதர்களின் பெயர்கள் போன்றனவற்றை மொழிபெயர்ப்பாளர்கள் ஒலிபெயர்ப்புச் செய்வது பெரு வழக்காக உள்ளது.

சான்றாக

Larance	-	லாரன்ஸ்
Henry	-	ஹென்றி
Everest Mountain	-	எவரெஸ்ட் மலை
American	-	அமெரிக்கன்
Tea	-	டீ
Tea/n/	-	டீச் செடி
Coffee/n/	-	காஃபி
Coffee/n/	-	காப்பிச் செடி
Lotus/n/flower	-	லோட்டஸ் மலர்
Kind of Flowering water Plant		

சில மொழிபெயர்ப்பாளர்கள் மூலமொழியிலுள்ள நூலின் தலைப்புகள், மேற்கோள்கள் போன்றவற்றையும் ஒலிபெயர்க் கின்றனர். ஆங்கில மொழியிலிருந்து தமிழ் போன்ற மொழி களுக்குப் புதிதாக அறிமுகமாகும் அறிவியல் தொழில்நுட்பத் துறைகளில் ஒலிபெயர்ப்புச் செய்வது பெரும்பாலும் வழக்கி லுள்ளது.

2.3.2. உருபனுக்கு உருபன் (Morphone to morphone)

இலக்கண ஆய்வில் மிகச் சிறிய அலகு உருபன். அது ஒரு சொல்லாகவோ அல்லது ஒரு சொல்லின் பகுதியாகவோ இருக்க லாம். உண், நூல், ஓடு போன்ற சொற்கள் உருபன்களாகும். உருபன் கள் தனித்தும், வேறு உருபன்களுடன் இயைந்தும் பொருள் வேறு பாட்டினை உணர்த்துகின்றனன.

தமிழில் உருபனுக்கு உருபன் பதிலியாவதன் மூலம் மொழிபெயர்ப்பு நடைபெறுகின்றது.

சான்றாக

riwer	-	நடத்தி - (நடத்து+இ)
attack	-	தாக்கி - (தாக்கு+இ)
retrorose	-	பின்நோக்கிச் செல்லுதல்
	-	(பின்நோக்கு+இ)
retrogression	-	ஒதுக்கித்தள்ளு, செய்யாது விடு
pretermit/vt/		
to disregard	-	ஒதுக்கித்தள்ளு - (ஒதுக்கு+இ)
pressure/n/	-	அழுத்தம், அழுத்துகிற நிலை
pressure	-	அழுத்தி-(அழுத்து+இ)
Over-all/n/	-	from one end to the other, including everything
		அனைத்தையும் உள்ளடக்கிய
overall	-	அனைத்தையும் உள் அடக்கிய
		அடக்கி-(அடக்கு+இ)
bestir(vt)	-	exert ஊக்கு
bestir	-	ஊக்கி-(ஊக்கு+இ)

எனினும் உருபனுக்கு உருபன் மொழிபெயர்ப்பதில் மொழிபெயர்ப்பாளர்கள் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். பொதுவாக ஒரு தொடரின் பொருளை அறிந்துகொள்ள உதவுட அடிப்படை அலகாக உருபனைக் கருதுவது ஏற்புடையதே. ஆங்கி லத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இரு சொற்களில் ஏற்பட்டுள்ள முரண்கள் இங்கு ஒப்புநோக்கத்தக்கன.

சான்றாக

a.Pantheism/n/ பல தெய்வங்களின் வழிபாடு
for vocabulary see, theism, a philosophical doctrine which identifies God with nature

b.under water Archaeology பழைமையைப் போற்றி வணங்குதல்
தொல்பொருள் ஆராய்ச்சி

c.The entire significance of
முக்கியத்துவம்
The entire significance

clutch/n/eggs placed for hatching by hen
அடைகாக்கும் முட்டைகள்
அடை காத்தலுக்காக வைக்கப்பட்டிருக்கும் முட்டைகள்.

மேற்குறிப்பிட்ட மொழிபெயர்ப்புகளில் உருபனுக்கு உருபனோ அல்லது சொல்லுக்குச் சொல்லோ மொழிபெயர்க் கப்படவில்லை என்பது வெளிப்படை. எனவே மொழிபெயர்ப் பாளர் நிகரன்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனத்துடன் செயல் படவேண்டும்.

2.3.3. சொல்லுக்குச் சொல் (Word to word)

மொழிபெயர்ப்பாளர்கள் மூலமொழிச் சொல்லுக்கு நிகரான பெறுமொழிச் சொல்லை மொழிபெயர்த்திடப் பெரிதும் முயலுகின்றனர். இவ்வகையான நிகரன்கள் பெரும்பாலும் நிலைத்த தன்மையுடையன. எனினும் சமூக வளர்ச்சியில் பல் வேறு காரணங்களினால் பெறுமொழியில் சொல்லுக்குச் சொல் லாகும் நிகரன்கள் மாறிக் கொண்டே இருக்க வாய்ப்புண்டு.

சான்றாக:

Telephone டெலிபோன்
முண்டக்கூவி
தொலைபே।சி

Cell Phone	செல்போன் செல்பேசி செல்லிடப்பேசி கைப்பேசி கையிடைப்பேசி கம்பியில்லாப்பேசி அலைபேசி
Computer	கம்ப்யூட்டர் கணிப்பொறி இயந்திரம் கணிப்பொறி கணிப்பான் கணினி
Xerox	ஜெராக்ஸ் நகலி ஒளிநகல் ஒளிப்படி
Oxygen	ஆக்ஸிஜன் ஆக்ஸிசன் பிராணவாயு நீர்மவாயு உயிர்வழிவாயு உயிர்வாயு உயிர்காற்று
Unit	யூனிட் உருபு அலகு
Fungi	பங்கை காளான் பூஞ்சை

எனவே, சொல்லுக்குச் சொல்லாகிடும் நிகரன்கள் தேவைப்படும்போது அவை புதிதாக மொழிபெயர்ப்பாளர்களால் உருவாக்கப்படுகின்றன.

2.3.4. மரபுத்தொடருக்கு மரபுத்தொடர் (Idiomatic to idiomatic)

மொழி என்பது மனித சமுதாயத்தைக் கூட்டமைக்கும் தன்மையுடையது. அதே நேரத்தில், அது இலக்கண, சமுதாய, பண்பாடு, மரபு வழிப்பட்ட நெறிமுறைகளைச் சார்ந்து இயங்கும் இயல்புடையது. மூலமொழிப் பிரதியில் இடம் பெற்றுள்ள தகவலை மொழிபெயர்ப்பாளர் நுணுகி ஆராய்ந்திட வேண்டும். அப்பொழுதுதான் பேசுபவரின் வயது, சமூக மரியாதை, சாதி, சமயம், பொருளாதாரக் கொள்கை, பொருளாதார நிலைப்பாடு, கல்வி நிலை போன்றவற்றின் அடிப்படையில் பெறுமொழியில் பொருத்தமாக மொழிபெயர்த்திட இயலும்.

ஒவ்வொரு மொழியிலும் அம்மொழி பேசும் மக்களின் வாழ்நிலைமைக்கேற்ப மரபுத் தொடர்கள், பழமொழிகள் நடைமுறை வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. இத்தகைய மரபுத்தொடர்களை மொழிபெயர்த்திட முயலும்போது நிகரன்கள் தேர்ந்தெடுப்பில் கவனத்துடன் செயல்படவேண்டும். பெறுமொழியில் ஏற்கனவே வழக்கிலுள்ள மரபுத் தொடர்களைத் தேர்ந்தெடுத்து மூலமொழி மரபுத் தொடருக்கேற்ப மொழிபெயர்த்திடல் ஏற்புடையதாகும்.

சான்றாக, ஒரு தோணியிலே ஒரு காலையும் மற்றொரு தோணியிலே மற்ற காலையும் வைத்த ஒருவர் பயணம் தொடங்குகிற மனக்காட்சி, இந்த மரபுரையைக் கேட்ட மாத்திரத்தில் நம்முள்ளே தோன்றுகிறதல்லவா? ஆனால் அது 'அவர் இரண்டு தோணியிலே கால் வைத்திருக்கிறார்' என்றும் நாம் உரையாடும் போது, உண்மையான கடற்பயணத்தை ஒருவர் மேற்கொள்கிறார் என்ற செய்தியை எடுத்து வைக்கும் நோக்கம் அங்கு இருப்பதில்லை. சமாளிக்க இயலாத இரண்டு அலுவல்களை ஒரே சமயத்தில் செய்யத் தொடங்கிவிட்டார்' என்பதுதான் கருத்து. அதனால்

எழும் தொல்லையையும் நினைவூட்டுவதாக 'இரண்டு தோணியிற் கால் வைத்தல்' என்னும் தொடர் அமைந்துள்ளது.

மரபுரைகள் எவ்வாறு தோன்றின? அவற்றின் அடிப் படையாய் உள்ளவை அவை. அவற்றின் பயன்பாடு என்ன என்று பரிசீலனை செய்வது இவ்விடத்திலே பொருத்தமாகும். சான்றாக:

அ. He has made up his mind - இந்த மரபுரையை அவர் தீர்மானித்து விட்டார் என்று விளக்கலாம்.

ஆ. a. Back biting- புரிமுறுக்குதல்

b. குட்டை உடைத்துவிடல் - Picking the balloon

c. tit for tat -யானைக்கும் பானைக்கும் சரி

d. All the glitters are not gold - மின்னுவதெல்லாம் பொன்னல்ல

2.3.5. வாக்கியத்துக்கு வாக்கியம் (Sentence to sentence)

மூலமொழியில் இடம்பெறும் வாக்கியத்துக்கு நிகரான வாக்கியத்தினைப் பெறுமொழியில் மொழிபெயர்த்திடப் பொது வாக மொழிபெயர்ப்பாளர் முயலுகின்றனர். இதுவே ஆற்றல் மிக்க மொழிபெயர்ப்பு என்று கருதப்படுகிறது. சுருங்கக்கூறின் வாக்கி யத்துக்கு வாக்கியம் பதிலியாதல் நிகழ்கின்றது.

ஒரு மொழியின் இயல்பான வாக்கிய அமைப்பிலிருந்து மாறியிருக்கும் வாக்கிய அமைப்பினை மொழிபெயர்த்திட முய லும் மொழிபெயர்ப்பாளர், பொருள் வேறுபாட்டினைக் கவனத் தில் கொள்ள வேண்டும். தமிழில் உள்ள 'இராமனைக் கண்டேன்' என்ற வாக்கியத்துக்கும், 'கண்டேன் இராமனை' என்ற வாக்கியத் துக்கும் இடையில் நுட்பமான வேறுபாடுகள் உள்ளன. இவ்விரு வாக்கியங்களையும் வேறு மொழிக்கு மொழிபெயர்த்திட முனை யும் மொழிபெயர்ப்பாளர், நுட்பமான வேறுபாடுகளைக் கருத்தில் கொள்ளும்போது, அது சிறந்த மொழிபெயர்ப்பாக அமையும்.

பொதுவாக மூலமொழி வாக்கியங்களைப் பெறுமொழி யில் வாக்கியத்துக்கு வாக்கியம் என்ற நிலையில் மொழிபெயர்ப் பது இயந்திரத் தன்மையுடையதாகிவிடும். சிலவேளை மொழி

பெயர்ப்பாளர் தேவை கருதி வாக்கியங்களை மாற்றியமைத்து மொழிபெயர்க்கின்றனர். இதழியல் துறையில் நாளிதழ்களில் நடைபெறும் மொழிபெயர்ப்புகளில் ஆங்கில நாளேட்டிலுள்ள செய்திக்கும், தமிழ் நாளேட்டிலுள்ள செய்திக்குமிடையில் மிகுந்த வேறுபாடு இருக்கும். நாளிதழ்கள் ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவராலும் வாசிக்கப்பட வேண்டுமென்ற நோக்கில், மிகைப்படுத்தி, குறைத்து, சுருக்கிச் செய்திகளை வெளியிடுவது வழக்கிலுள்ளது. எனவே மொழிபெயர்ப்பாளர் பெறுமொழிச் சூழலுக்கேற்ப நிகரான வாக்கியங்களை மொழிபெயர்த்தல் வேண்டப்படுகிறது.

சான்றாக:

அ. Every bird must hatch its own eggs
அழுதாலும் பிள்ளை அவள்தான் பெறவேண்டும்

ஆ. Bare words buy no barley
வெறுங்கை முழம் போடுமா?

மொழிபெயர்ப்புத் துறையில் நிலையான நிகரன்கள் மேலும் மேலும் அதிகரிப்பது அவசியமாகிறது. ஒரு மொழி பெயர்ப்பாளன் இத்தகு நிகரன்களை அறிந்திருத்தல் அவசிய மாகும். இவை பொருள் புலப்பாட்டுக்கு உதவுவது மட்டுமின்றி மொழிபெயர்ப்புப் பணியையும் எளிமையாக்குகின்றன.

2.3.6. கருத்தியலுக்குக் கருத்தியல் (Concept to concept)

மூலமொழியிலுள்ள கருத்தியலுக்குப் (concept) பெறு மொழியில் கருத்தியல் பதிலியாதல் இவ்வகையில் அடங்கும். பல வாக்கியங்கள் ஒருங்கிணைந்து ஒரு கருத்தியலைப் பயன்படுத்தும் போது, அவை பெறுமொழியில் பல வாக்கியங்கள் சேர்ந்து ஓர் அல காக மொழிபெயர்க்கப்படுதல் நடைபெறுகின்றது. புதிய துறை நூல், பெறுமொழியில் அறிமுகமாகும்போது கருத்துச் சாரத்தி னுக்கு முக்கியத்துவம் தந்து மொழிபெயர்ப்பது வழக்கமாக உள்ளது. நாளிதழ்களில் பெரும்பாலும் உலகச் செய்திகள், செய்தி நிறுவனங்கள் மூலம் ஆங்கில வடிவில் பெறப்படுகின்றன. இத் தகைய செய்திகளை மொழிபெயர்க்கும்போது நேருக்கு நேரான அணுகுமுறை பெரிதும் கையாளப்படுவதில்லை. வாசகர்களுக்கு

எளிமையாகச் செய்தியைச் சொல்ல வேண்டும் என்ற நோக்கில் செய்யப்படும் பெரும்பாலான நாளிதழ் மொழிபெயர்ப்புகளில் கருத்துகளுக்கு முன்னுரிமை தரப்படுகின்றது.

சான்றாக:

அச்சுறுத்தும் மக்கள் தொகை (தினமணி, *19.02.2000*)

ஏறத்தாழ முப்பத்து ஏழு வரிகளைக் கொண்ட 'அச்சுறுத்தும் மக்கள்தொகை' என்னும் தமிழ்த் தலையங்கச் செய்தியில் பதினேழு வரிச் செய்திகள் ஆங்கிலத் தலையங்கத்திலிருந்து எடுக்கப் பெறாத செய்தியாக அமைந்துள்ளன. மீதமுள்ள இருபது வரிச் செய்திகள் ஆங்கிலத் தலையங்கத்தில் உள்ள ஒரு சில செய்தியைக் கொண்டிருக்குமேத் தவிரச் சரியான மொழிபெயர்ப்பாக அமையாததையே காட்டுகிறது. சான்றாக,

''குழந்தை திருமணத் தடைச்சட்டத்தைக்
கண்டிப்புடன் அமல்படுத்தல்''

என்ற தமிழ்த் தலையங்கத்தில் ஒரு வரியால் மொழிபெயர்க்கப் பட்ட செய்திக்கு, ஆங்கிலத் தலையங்கத்தில்,

"There is an attempt made in the latest policy to reward women who manage to, stave off matrimony until they are 19"
(New Indian Express, Friday, Feb.18, 2000)

என்று செய்தி நீண்டிருப்பதைக் காணலாம்.

ஆங்கிலத் தலையங்கத்தில் இடம்பெற்ற செய்தியினை ஓரளவிற்குத் தமிழ்த் தலையங்கத்தில் பிரதிபலிக்கும் நிலையினையே காணமுடிகிறது. ஆங்கில நாளேட்டில்,

"In an equally adroit stop, the government use the new policy as a excuse to postpone, until the year 2026, the delimitation of constituencies by organizing that this would amount to punishing down their electoral representation"

என்னும் செய்தியினைக் கூறுவதற்குத் தமிழ்த் தலையங்கத்தில்,

''மக்கள்தொகைக் கட்டுப்பாட்டில் வெற்றிகண்ட தமிழ் நாடு, கேரளம் போன்ற மாநிலங்கள், மக்கள்தொகை குறைந்தால் அதற்கேற்ப மக்களவைத் தொகுதிகளின் எண்ணிக்கையும் குறைந்து விடுமோ என அச்சம் தெரிவித்தன. சான்றாக, தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகள் 33 ஆகக் குறையும் நிலை இருந்தது. திட்டத்தைச்சிறப்பாகச் செயல்படுத்தியதற்காக தாங்கள் தண்டிக்கப்படக் கூடாது என இம்மாநிலங்கள் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்தன. 1971ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை, 2026ஆம் ஆண்டு வரை நீடிக்கும் என்ற மத்திய அரசின் முடிவு வரவேற்கதக்கது''என்னும் இடம்பெற்ற செய்திகள் ஏறத்தாழ ஒன்றாக இருப்பினும், தமிழ்த் தலையங்கம் ஆங்கிலத் தலையங்கத்திலிருந்து சில செய்திகளைக் குறைத்துச் சொல்லப் பட்டிருப்பதைத் தெளிவாக உணரலாம். சான்றாக,

''தமிழகத்தில் உள்ள 39 மக்களவைத் தொகுதிகள் 33 ஆகக் குறையும் நிலை இருந்தது''

என்னும் செய்தி ஆங்கிலத்தில் இல்லாத செய்தியாகும்.

2.3.7. சூழலுக்குச் சூழல் (Situation to situation)

சூழலுக்குச் சூழல் பதிலியாக அமையுமாறு மொழிபெயர்த்தல் மொழிபெயர்ப்பாளரின் ஊகித்தறியும் திறனுடன் தொடர்புடையதாகும். மூலமொழியிலுள்ள சொல், சொற்றொடர், வாக்கியம், கருத்தியலுக்கு அப்பால் சில சூழல் சார்ந்த செய்திகளும் மொழிபெயர்ப்பதற்குத் தேவைப்படுவது உண்டு. மொழிக் கப்பால் அல்லது மொழிக் கிடங்கினுள் புதைந்து கிடக்கும் மொழி கடந்த தகவல்கள் மொழிபெயர்ப்பில் குறிப்பிடத்தக்க வினை யாற்றுகின்றன. எனவே மொழிபெயர்ப்பாளர் மூலமொழிச் சூழலுக்கு நிகரானதைப் பெறுமொழியிலும் கொண்டு வருதல் அவசியமானதாகும்.

சான்றாக,

a. Trunk Call
முண்டம் அழைப்பு (அ) முண்டக்கூவி
(Formal Correspondence)

Trunk Callஎன்றால் 'தொலைபேசி'(Dynamic Equivalence) இதனைச் சூழலுக்கு ஏற்றவாறு பயன்படுத்துதல் வேண்டும். அதேபோல,

b. Light House வெளிச்சம் வீடு (Formal Correspondence)
Light House கலங்கரை விளக்கம் (Dynamic equivalence)

இதனையும் சூழலுக்கு ஏற்றவாறு பயன்படுத்துதல் வேண்டும்.

ஆகவே மொழிபெயர்ப்பாளர் மூலமொழியின் சூழலுக்கு ஏற்றவாறு நிகரானதைப் பெறுமொழிக்கு கொண்டு வருதல் மிக வும் அவசியமானது ஆகும்.

2.4.நிறைவுரை (Conclusion)

மொழிபெயர்ப்பு நிகரன்களைத் திறனாய்வாளர்கள் தத்தம் கண்ணோட்டத்திற்கேற்பப் பலவாக வகைப்படுத்தி உள்ளனர். ஒரே மொழியில் கூட ஒரு சொல்லுக்கு நிகரான மற்றொரு சொல் லைக் காண்பதரிது என்ற நிலையில் இருமொழிகளுக்கிடையே நடைபெறும் செயல்முறையில் நிகரன் தேர்வில் எதிர்ப்படும் சிக் கல்கள் பலவாகும். ஆயினும், ஆர்வம் காரணமாக மொழிபெயர்ப் பில் ஈடுபட்ட மொழிபெயர்ப்பாசிரியர்கள் தத்தம் நோக்கத்திற்கும் நூலியல்பிற்கும் காலத்திற்கும் ஏற்ப நிகரன்களைத் தெரிவு செய் துள்ளனர். இவற்றுடன் வாசகர்களின் மொழியறிவும் புரிதிறனும் முக்கியப் பங்கினைப் பெறுகின்றன.

நிகரன் வகைகளும், கொள்கைகளும், சமூகச் சூழலுக்கும் திறனாய்வுப் போக்கிற்கும் ஏற்ப வளர்ச்சி பெற்றுள்ளன. மூல நூலின் ஆசிரியருக்கும் பெறுமொழி வாசகருக்குமிடையே செயல் படும் மொழிபெயர்ப்பாசிரியர் இவ்விரு அடிப்படைகளில் நிகரன்களைத் தெரிவுசெய்கின்றார். இவ்வகையில் பாடநிகரன், சொல் நிகரன் , நடை நிகரன், சொற்படிவ நிகரன் போன்ற மறு நிலையிலும் அமைகின்றன. இவ்விரு நிலைகளும் தம்முள் கலந்து வருவது (over lapping) உண்டெனினும் இப்பாகுபாடு நிகரன்களின் வேறுபட்டு இயல்புகளைப் புலப்படுத்த உதவும்.

சிறந்த மொழிபெயர்ப்பாளர் மொழிபெயர்ப்பு, வரலாறு, மொழிபெயர்ப்பு வகைகள், மொழிபெயர்ப்பு முறைகள், தகுதிகள், கடமைகள், சொல்லாக்க நெறிகள், சொற்கோவை உருவாக்குவதில் அதிகமான ஈடுபாடு, பண்பாட்டுத் தோய்வு சூழலுக்குத் தக்கவாறு மொழிபெயர்க்கின்ற அணுகுமுறை போன்ற அடிப்படை அம்சங்களை அறிந்தவராக அவசியம் இருத்தல் வேண்டும் என்று இக்கட்டுரையின் வாயிலாக வேண்டப்படுகிறது. மொழிபெயர்ப்பு என்பது மக்களிடையே வழக்கிலுள்ள ஆற்றல்மிகு, கலை என்ற நிலையில் மொழிபெயர்ப்பாளரை 'ஓவியன்' என்று குறிப்பிடுவது மிகவும் பொருத்தமானது ஆகும்.

மொழியியலாளரின் நிகரன் வகைமைகளும், சமூக நோக்காளரின் நிகரன் வகைமைகளும் மேற்காட்டிய பாகுபாட்டினுள் அடங்கும். மொழிபெயர்ப்புத் திறனாய்வு, நிகரன் கொள்கை பற்றிய ஆய்விற்கும் மேலாக வாசகரின் ஏற்புத் தன்மையையும் (acceptability) உள்ளடக்கியதாக அமைகிறது. சமூகப் பண்பாட்டுச் சூழலும் நிகரன் தேர்வுக்கு அடிப்படைக் காரணியாக அமைகிறது. இந்நிலையில் ஏற்புடைய நிகரனை இனங்காட்டுவது திறனாய்வாளரின் சமூகக் கடமையாகும். நிகரன் வகைகளும் கொள்கைகளும் விரிவடைந்திருப்பது மொழிபெயர்ப்புத் திறனாய்வாளரின் சமூகப் பொறுப்புணர்ச்சியையும் திறனாய்வுத் துறையின் வளர்ச்சியையும் புலப்படுத்துகிறது.

துணைநூற்பட்டியல் (Books reference)

1. சேதுமணி மணியன், 'மொழிபெயர்ப்பியல் கோட்பாடுகளும் உத்திகளும்', செண்பகம் வெளியீடு, பிளாட் எண் 4, மூவேந்தர் நகர், விசுவநாதபுரம், மதுரை-625 014, சூலை 1993.
2. முருகையன், 'மொழிபெயர்ப்பு நுட்பம்-ஓர் அறிமுகம்' குமரன் புத்தக இல்லம், 3 மெய்கை விநாயகர் தெரு, குமரன் காலனி, சென்னை - 600 026, மு.பதிப்பு,2002.
3. ந. முருகேசபாண்டியன், 'மொழிபெயர்ப்பியல்', உயிர் எழுத்து பதிப்பகம், 9, முதல் தளம், தீபம் வணிக வளாகம், கருமண்டபம், திருச்சி-1, மு.ப.சூன் 2008.
4. செ. இராஜேஸ்வரி, 'மொழிபெயர்ப்பியல் ஆய்வு', (கட்டுரைத்தொகுதி), செல்லையா பதிப்பகம், மதுரை, 1992.

5. Eugene A. Nida & Charles R. Taber, The Theory and Practice of Translation, UBS, Leiden, 1969.
6. Theodore Savory, The Art of Translation, Jonathan Cape & Co, London, 1980.
7. Catford, J.C., Linguistic Theory of Translation.
8. Susan Bassnett McGuire, Translation Studies, Metheun & Co., London, 1980.
9. Ramanujan, A.K. Poems of Love and War, Oxford University Press, New Delhi.
10. சண்முக வேலாயுதம், மொழிபெயர்ப்பியல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1985.

இயல் மூன்று

மொழிபெயர்ப்பின் குறைகள், நிறைகள்

(Merits and Demerits of Translation)

மொழிபெயர்ப்பில் காணப்பெறும் குறைகளை (Errors) ஜீவன் சாகர் எனுமறிஞர் நான்காக வகைப்படுத்துவார்: அவை வருமாறு: *1.* மூலநூற் கருத்தைத் தலைகீழாக மாற்றுதல் (mulanurkaruttai talaikizhaka martrutal). *2.* உள்ளன நீக்கலும் இல்லன சேர்த்தலும் (ullana niikkalum illana certtalum). *3.* கருத்தைத் திசை திருப்புதல் (karuttai tisai tirupputal) *4.* ஏற்ப மாற்றுதல் (modification) erpa marttrutal) இவை நான்கும் மொழிபெயர்ப்பில் இடம் பெறும் போதுகுறைகளாகக் கருதுவதற்கு வாய்ப்பாக அமையும் நிலைகளைத் தமிழிலக்கியச் செய்யுள் மொழிபெயர்ப்புகளிலிருந்து சான்றுகாட்டி விளக்குகிறது.

மொழிபெயர்ப்பின் நிறைகள் (Merits of Translation)

இப்பொழுது உலகம் முழுவதும் மொழிபெயர்ப்பு வேலையில் பரபரப்புடன் ஈடுபட்டிருக்கின்றது. நமது அரசாங்கமும் பல்கலைக்கழகமும் ஓரளவு ஊக்கமளித்து வருகின்றன. இந்த நாளில், தமிழ் அறிஞர்களும் கடமையை உணர்ந்து நிலையான மொழிபெயர்ப்புகளைச் செய்வார்களானால், தமிழ் இலக்கியங்களும் அறிவியல் நூல்களும் வளம்பெற்று, அவை வழியாகப் பரந்த உலகமும் நன்மை பெற வழி பிறக்கும்.

மொழிபெயர்ப்பினால் சில சமயங்களில் உலகம் பெரிய மாறுதல் அடைகின்றது. சில சீரிய எண்ணங்களும் ஆற்றல்களும் அவைகளுக்குப் பொருத்தமில்லாத மக்களிடம் தங்கி, ஆற்றல் அழிந்திருக்கின்றது. அவை அப்பண்புகளுக்கு ஏற்ற மக்களுடைய மொழியில் ஏறியவுடன், உயிர்பெற்று உலகம் முழுவதிலும் உலவு கின்றன. ஆகையால் மொழிபெயர்ப்பு என்பது மிகவும் பொறுப் பான வேலை. அதை மேற்கொள்பவர் இலக்கண இலக்கியப் பயிற்சியும், சொல்லாராய்ச்சியும், மொழிப்பயிற்சியும் எடுத்துக் கொண்ட பொருள் பற்றி ஐயம் திரிபற்ற கருத்தும், அரிய கருத்துக் களை எளிய நடையில் இனிய ஓசையுடன் வெளியிடும் ஆற்றலும் தம்மை மறந்து எடுத்துக் கொண்ட நூலின் பண்பினுள் மூழ்கும் உள்ளப் பண்பும் உடயவராக இருக்க வேண்டும்.

(நன்றி: கந்தசாமி பிள்ளை, நீ., (1961) தாமஸ் கிரேயின் இரங்கற்பா - நாட்டுப்புற இடுகாட்டில் எழுதியது (திருநெல் வேலிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு).

3.1. மூலநூற் கருத்தை தலைகீழாக மாற்றுதல்
(Invert the meaning of source language)
(mulanurkarutai talaikizhaka mattrutal)

மூலநூற் கருத்தைப் பெறுமொழியில் மொழிபெயர்க் கும்போது மூலநூலாசிரியர் கருதாத வகையில் முற்றிலும் வேறாக முரணான கருத்தை அளிப்பது ஒருவகைக் குறையாகும். இக் குறையினால் மொழிபெயர்ப்பு வாசகர் தவறான கருத்தைப் பெறு வது மட்டுமின்றி மூலநூலாசிரியர் பற்றியும் வேறுபட்ட கணிப் பைப் பெறுவார்.

சான்றாக, கவிமணியின் ‘உமார் கய்யாம்’, பாடல்களில் உலக இன்பங்களைத் துய்க்காத வாழ்க்கை வெற்று வாழ்க்கை எனக் கூறப்பட்டுள்ளது. தமிழ் வாசகர் பலரும் இந்நூல் எபிகியூ ரியத் தத்துவத்தைப் போதிப்பதாகக் கருதுகின்றனர். உலகின் துன்பங்களை மறக்கத் துணையாக அமைவது மதுக்கலசமே என்ற கருத்தில் பல பாடல்கள் மொழிபெயர்ப்பில்இடம் பெற்றுள்ளன.

''உருக்கும் பாடல் கேளாமல்
உண்ணும் மதுவும் உண்ணாமல்
பொருக்கும் மண்ணில் மண்ணாகப்
புதைந்து போனால் என் செய்வோம்''
(உ.க.பாடல் 67)

என்றும்,

''வாழ்வின் கிண்ண மது
வற்றி வறண்டு போகும் முன்னம்
பருக மதுவைத் தாரீரோ?
பாய்விட்டெழுந்து வாரீரோ?
அருமை மங்கை மாரே?

என்னும் பாடல்கள் அமைந்துள்ளது. மதுவின்பமும் மங்கையர் இன்பமும் பற்றி இம்மொழி பெயர்ப்பில் பல பாடல்கள் காணப் படுகின்றன. ஆனால், பாரசீகக் கவி மதுவைத் 'திராட்சை ரசமாக' Wine (tiraatchai racamaka)என்று குறிப்பிட்டு உள்ளார். அத்திராட்சை ரசம் இறையன்பைக் குறிக்கும் பொருளில் மூலநூலில் வழங்கி யுள்ளது. மேலும் இறையைப் பெண்ணாக உருவகித்துள்ளது. இடின் ரல் அரபி என்பவர் இவ்உருவகத்தை அளவுக்கதிகமாகக் கையாண்டதனால் தெய்வ நிந்தனைக் குற்றத்திற்கு ஆளானார் என்பதும் இவண் குறிப்பிடத்தக்கது. ஆங்கிலத்தில் The Absolute Grape என்று திராட்சை ரசம் பற்றிய செய்தி இறைவனோடு ஒப் பிட்டுணரும் வகையில் புலப்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் இப் பொருள் முற்றிலுமாக மாற்றப்பட்டுள்ளது.

''பெண்ணே கிண்ணம் நிறையம்மா
வண்ணக் கிளியே ஒரு கிண்ணம்
மதுவை ஊற்றித் தருவாயே''

எனப் பெண்ணாகவும் மதுவாகவும் இக்கருத்துக்கள் நேர் பொருளுடையனவாக உள்ளன. மூலநூலின் குறியீட்டுப் பொருள் மொழிபெயர்ப்பில் முற்றிலுமாக அல்லது தலைகீழாக மாற்றப் பட்டுள்ளது.

3.2.உள்ளன நீக்கலும் இல்லன சேர்த்தலும்

(Necessity, unnecessity deletion and addition to)

மூலநூல் பனுவலில் உள்ளவற்றை மொழிபெயர்ப்பில் நீக்கி விடுவதும் (deletion) இல்லாதவற்றைச் சேர்த்துக் கொள்வதும் குறைகளாகக் கருதப்படும். ஏனெனில் மொழிபெயர்ப்பாசிரியர் மூலநூலாசிரியரின் படைப்பினை மொழிபெயர்க்கிறாரேயன்றி புதிதாக ஒரு நூலைப் படைக்கவில்லை. மேலும் மொழி பெயர்ப் பில் காணப்பெறும் கருத்தலகுகள் மூலநூலாசிரியரின் கருத்துக் களாகவே நம்பப்படுவதனாலும் மேற்கூறிய குறை மொழி பெயர்ப்பில் இடம்பெறுதல் கூடாது. பெறுமொழிப் பண்பாடு, மரபு, பழக்க வழக்கங்கள் போன்றவற்றிற்கு முரணாகக் காணப் பெறும் மூலமொழிக் கருத்துக்களை மொழிபெயர்ப்பாசிரியர் நீக்கி விடுகிறார். இதற்கு முக்கியமான காரணம் இவை பெறு மொழி வாசகர் மனத்தில். மூலநூலாசிரியரின் கருத்திற்கு முர ணான கருத்தை உருவாக்குவதேயாகும். (ஏ.வி.சுப்பிரமணியன்)

''உள்ளூர்த் தன்மையுடைய கருத்துக்கள் இடம்
பெற்றிருந்த பல அழகிய பகுதிகளைப்
பெறுமொழியில் படிப்பவருக்கு வேடிக்கையாகத்
தோன்றுமென்பதால் நீக்க வேண்டியதாயிற்று''

என்று குறிப்பிட்டுள்ளார். இங்ஙனம் கருத்து முரண் ஏற்படும் சூழல்களில் மட்டுமின்றி வேறு காரணங்களால் மூலநூற் செய்தி களை நீக்குதல் ஏற்புடையதன்று. அடிக்குறிப்புகளின் உதவியால் பெறுமொழி வாசகருக்கு அயன்மையான முரண்பட்ட செய்தி களை விளக்குவது பயனுடையதாகும். இதன் மூலம் பெறுமொழி வாசகர் மூலமொழிப் பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வர்.

உள்ளன நீக்கல் குறையை மூன்றாக வகைப்படுத்தலாம். அவை வருமாறு:

1. கோட்பாட்டுக் கருத்துக்களை நீக்குதல்
(kotpattu karttukkalai niikkutal)

2. கலைநயக் கூறுகளை நீக்குதல்
(Kalainayak kurukalai niikkutal)
3. பண்பாட்டுத் தகவல்களை நீக்குதல்
(panpaattut takavalkalai niikkutal

3.2.1. கோட்பாட்டுக் கருத்துக்களை நீக்குதல் (Removing the concept of principles)

கோட்பாடுகள் ஒருநாட்டின், மொழியின், இனத்தின் வாழ்வியல் கொள்கை சார்ந்த விளக்கங்களாகும். இவற்றை மொழி பெயர்ப்பில் நீக்கிவிடும் போது மூலநூலாசிரியர் வாசகருக்குக் கூற விரும்பிய கருத்துக்களை மொழிபெயர்ப்பு ஆசிரியர் மறைத்து விடுகிறார். இதனால் மூலநூலாசிரியரின் நோக்கம் பெறுமொழி வாசகருக்குத் தெரிவிக்காமல் மறைக்கப்படுகிறது. கவிமணியின் ‘உமர்கய்யாம்’ (Umarkaiyam) பாடல்களில் இருந்து சான்று காட்டி இக்கருத்தை விளக்கலாம். இறையனுபவத்தில் மூழ்கியிருக்கும் பரவச நிலையைத் தனிநிலை (அ) ஏகாந்த நிலையாக உமர் கருதி யுள்ளார். இக்கருத்தை ஃபிட்ஸெரால்டு

The thoughtful soul to solitude retires

எனக் குறிப்பிட்டுள்ளார். வேறொரு பாடலிலும் இத்தனி நிலையைப் பற்றி,

"...singing in the wilderness
And wilderness is paradise enow"

எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் இங்குக் குறிப்பிட்டுள்ள ‘தனி நிலை’ ஒருவகை சமயக் கோட்பாடாகும். உலக வாழ்வில் நிறைவு பெற்றப் பின் புறவுலகினின்று பிரிந்து ஆன்மா தனிநிலை அடைவதனை wilderness என்ற சொல் குறிக்கிறது. பாரசீக, எகிப்திய, யூத சமயங்கள் இறைவனை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தால் தனியாய் நின்று ஏங்கி அழுவதனை crying in wilderness என்று குறிப்பிடுகின்றன. இக்கருத்தினைக் கவிமணி தம் மொழிபெயர்ப்பில் நீக்கிவிட்டார். தனிநிலைக் கோட்பாடு எகிப்தியப் பழஞ்சமயங்களின் கோட்பாடாக விளங்குகிறது. இதனைப் பெறுமொழி

வாசகர் அறிய இயலாதவாறு மொழிபெயர்ப்பில் இக்கருத்து நீக்கப்பட்டுள்ளது.

3.2.2. கலைநயக் கூறுகளை நீக்குதல் (Removing the Artistic components) (kalainayak kurukalai niikkutal)

செய்யுள் மொழிபெயர்ப்பில் உவமை, உருவகம், சிலேடை, சந்தம் போன்றவை நீக்கப்படுவதுண்டு. இதற்குக் காரணம், இக்கலைநயக் கூறுகளைப் பெறுமொழியில் படைத்தளிப்பதுச் சிக்கலான பணியாக உள்ளது. மேலும் அவ்வாறு படைத்தளிக்கப் பெற்றாலும் அவை மூலநூலைப் போன்ற விளைதிறன் கொண்டவையாக இருப்பதுமில்லை. கலைநயக் கூறுகள் மூலக்கருத்தினுக்கு அரண் சேர்ப்பவையாக இருக்கும் நிலைகளில் அவற்றை நீக்குவது தவறாகும்.

சான்றாக,

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

என்ற சங்கப் பாடலில்

''நீர்வழிப் படூஉம் புனைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்''

என்ற உவமை இடம்பெற்றுள்ளது. இப்பாடலை மொழிபெயர்த்த ஜி.யு.போப்,

The raft goes on as fates ordain என மேற்காணும் உவமையை மொழிபெயர்த்துள்ளனர். நீர்முறை, புணை - உயிர் என்பன நீர்வழிச் செல்லும் புணைபோல விதி வழியே உயிர் செல்லும் என்ற கருத்தினைத் தெரிவிக்கின்றன. ஆனால் மொழிபெயர்ப்பாசிரியர் 'விதி வழியே புணை செல்லும்' என்ற பொருளில் The raft goes on as fates ordain எனக் கூறியிருக்கிறார். இக்கூற்றில் மூலமொழியின் உவமையழகைக் காண இயலாது. மூலநூற் கருத்தும் புலப்படவில்லை. மூலநூலின் 'நீர்வழிப் படூஉம் புணைபோல்' என்ற உவமை மொழிபெயர்ப்பில் இடம்பெறவில்லை, உவமை கூறும் கருத்தும் தெளிவாகப் புலப்படுத்தப்படவில்லை.

3.2.3. பண்பாட்டுத் தகவலை நீக்குதல் (Removing the cultural information) (Panpaattut takavalai niikkutual)

ஒரு பாடல் (அ) பனுவல் அம்மொழி பேசும் மக்களின் பண்பாடு பற்றிய தகவல்களையும் தன்னுள் கொண்டுள்ளது. பழந்தமிழகத்தில் மக்கள் நிலம் சார்ந்த பண்பாடு உடையவராக விளங்கினர் என்பதை ஆற்றுப்படை நூல்கள் புலப்படுத்துகின்றன. முல்லை நிலப் பெண்ணொருத்தி நெய்யை விற்ற பணத்தில் பொன் வாங்கமாட்டாள். அவளுடைய நிலத்தில் செல்வமாகப் போற்றப் பெறும் எருமைக் கன்றினையே வாங்குவாள், அருணையப்பன் மொழிபெயர்ப்பில் அவள் பசும்பொன் கொள்ளாள் எனும் செய்தி விளக்கப்பட்டுள்ளது.

''நெய்விலை கூட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்''

என்ற வரிகளை

.... selling butter She buys cows and buffaloes

என்ற மொழிபெயர்ப்பில் முல்லை நிலத்தில் ''பொன்னுக்கு மதிப்பில்லை'' என்ற பண்பாட்டுத் தகவல் விலக்கப்பட்டுள்ளது.

இத்தகவல் முல்லை நிலத்தின் சமூக மதிப்புகள் ஒன்றினைப் புலப்படுத்துகிறது. இத்தகைய பண்பாட்டுத் தகவலை நீக்குவது மொழிபெயர்ப்பில் காணப்படும் முறையாகவே கருதப் பெறும்.

3.3. இல்லன சேர்த்தல் (Addition) (illana cherttal)

மூலநூலில் இல்லாத தகவல்களையும் சூழல்களையும் நிகழ்ச்சிகளையும் மொழிபெயர்ப்பாசிரியர்கள் சேர்ப்பதுண்டு. மூலநூற் கருத்துக்கு முரணான (அ) தேவையற்ற தகவல்களை மொழிபெயர்ப்பில் சேர்த்துக்கொள்வது ஒரு குறையாகும். நைடா இதனைப் பற்றிக் கூறும்போது மூலபாடம் குறித்த அளவுக்கதிகமான அறிவு காரணமாக (too much knowledge of the subject matter)

இக்குறை ஏற்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். இக்குறை பெரும் பாலும் மூலமொழியாளர் தம்மொழிப் பனுவலைப் பிறமொழி யில் மொழிபெயர்க்கும் போது ஏற்படுகிறது.

ஏ.வி. சுப்பிரமணியன் சங்கப் பாடல்கள் சிலவற்றை ஆங் கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இவற்றில் சில மேற்காணும் 'இல்லன சேர்த்தல்' (illana cherttal) முறையில் காணப்படுகின்றன.

சான்றாக: ''யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே''

என்ற பாடலை,

We shall not, my love, be ever parted
In this bower we came together
Through gods degree, on a fated day
your parents your kinsmen are total strangers
you mine; and we met as strangers too
we came together, not withstanding
And merged like these drops of rain coming down
On the loose red earth of the mountain side
making a whole, where the elements
yield up their different indentities
Grain upon grain, atom on tiny atom
So fused together they cannot be
Extricated or totn apart
Like the spirit of the earth and the spirit of
the rain drops
our souls have fused at fates bidding
And shall not, darest, be parted ever.

எனப் பதினேழு அடிகளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். இம்மொழிபெயர்ப்பில் மூலபாடலில் காணப்பெறாத செய்திகள் பல புதிதாகச் சேர்க்கப்பட்டு உள்ளன. அவை வருமாறு:

கடவுளின் ஆணையால் விதிக்கப்பட்ட நாளில்
நாம் இச் சோலையில் இணைந்தோம்
நம்மை எவரும் பிரிக்கவியலாது
மூலகங்கள் தம் தனித்தன்மையை இழந்து
ஒன்றாக இணைவது போல் இணைந்தோம்
அணுஅணுவோடும்,
நெல்மணி நெல் மணியோடும் சேர்வது
போலப் பிரிக்கவியலாத வகையில் ஒருவருக்குள்
ஒருவர் இசைவாகக் கலந்து விட்டோம்
ஊழின் அழைப்பால் நம் ஆத்மா உயிர்கள்
நிலத்தின் உயிர்ப்புடன் மழைத்துளியின் உயிர்
கலந்தது போல நாமும் கலந்து விட்டோம்
இனி நாம் பிரியமாட்டோம்

மூலபாடலில் காணப்பெறும் கருத்தலகுகள் பின்வரும் வரிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

your parents your kinsmen are total strangers
to mine; and we met as strangers too
we came together, not withstanding
And merged like these drops of rain coming down
On the loose red earth of the mountain side

இவ்வரிகள் தவிர இவற்றிற்கு முன்னும் பின்னும் இருப்பவை மூலத்தில் காணப்பெறாதவை. அவை மூலமொழி உரையாசிரியரின் விளக்கங்களையும் பொருளாதிகார உரையின் விளக்கங்களையும் கொண்டுள்ளன. கூடுதல் கருத்துக்கள் மொழிபெயர்ப்பின் புரிதிறனுக்கு உதவியாக அமையுமானால் அவற்றைத் துறைக் குறிப்புகளாக அளித்துப் பெறுமொழி வாசகருக்கு உதவலாம். அவ்வாறின்றி, மொழிபெயர்ப்பினுள் மூல நூலாசிரியரின் கருத்துப் புலப்பாட்டு வரிசையில், இவ்விளக்கங்களைச் சேர்ப்பது அறமாகாது. இம்முறை மொழிபெயர்ப்பின் நம்பகத்தன்மையைப் பெரிதும் பாதிக்கிறது.

மூலநூற் தகவலினை மொழிபெயர்க்கும்போது நிகழ்ச்சிக்கான சூழல் பின்னணியைப் பெறுமொழியில் உணர்த்துவதோடு

சிலர் தம் கருத்து விளக்கங்களையும் மொழிபெயர்ப்பில் சேர்த்து விடுவதுண்டு.

சான்றாக,

''ஆறஎன்று வாளின் தப்பார்''

என்ற புறநானூற்று அடியை மொழிபெயர்த்த ஆசிரியர்

to give the child
a warrior's death

என்ற காரணத்தையும் விளக்கியுள்ளார். இக்காரணம் மூலநூலுள் காணப்பெறாத புதிய சேர்க்கையாகும்.

மூலமொழியாளர் தம்மொழி நூலைப் பிறமொழியில் மொழிபெயர்க்கும் போது கருத்துப் பொருளை உணர்த்துவதற்கு என விளக்கமான மொழிபெயர்ப்பைத் தருவதுண்டு. சான்றாக ''யாருமில்லைத் தானே கள்வன்' (yaarumillait taana kalvan) எனத் தொடங்கும் குறுந்தொகைப் பாடலை மொழிபெயர்த்த சண்முகம் பிள்ளை, லடென் குழுவினர் இப்பாடலில் இடம் பெற்றுள்ளன. 'தானது பெயர்ப்பின்' என்ற தொடரை

if his promises are lies

என மொழிபெயர்த்துள்ளனர். Promises என்ற நிகரனுக்கான (Equivalence) மூலமொழிச் சொல் எதுவும் காணப்பெறவில்லை. பிற மொழிப்பெயர்ப்பாசிரியர்கள் இத்தொடரை

If he should lie	(ஏ.கே. இராமனுஜம்)
If he lies	(ஜி.எல். ஹார்ட்)
If he leaves me	(அண்ணாமலை, ஃப்மன்)
If he be false	(சி.ஹெச்.ஜேசுதாசன்)
If he lies	(பன்னீர்செல்வம்)

என்று மொழிபெயர்த்துள்ளனர். இவர்களில் எவரும் 'சூள்' பற்றிக் குறிப்பிடவில்லை. 'தானுள்ள சூள் பேனான், பொய்த தான்'' (கலி.

41; 19-20) என்ற கலித்தொகை வரி மொழிபெயர்ப்பு ஆசிரியரிடம் Promises என்ற கருத்தினைச் சேர்ப்பதற்கு தாக்கமாக இருந் திருக்கலாம்.

மூலநூற்பாட அறியும் உரைகளின் தாக்கமும் மேற்குறிப் பிட்ட சான்றுகளில் மூலநூலில் காணப்படாத செய்திகளைச் சேர்ப்பதற்குக்காரணங்களாக அமைவதனை இதனால் உணரலாம்.

3.4.கருத்து விலகல் (Deviation) (Karuttu vilakal)

மூலநூற் கருத்தை மொழிபெயர்க்கும் போது அதன் மையக் கருத்தினின்று விலகி அமைவதைத் திறனாய்வாளர்கள் தவறு எனக் கருதுகின்றனர். இக்கருத்து விலகலினால் மூலநூற் செய்தி மிகச்சரியாகப் பெறுமொழி வாசகரைச் சென்றடைவ தில்லை. மேலும் இக்கருத்து விலகல் மொழிபெயர்ப்பின் துல்லியத்தன்மையையும் பாதிக்கிறது.

தமிழிலக்கியம் காட்டும் குறிஞ்சித்திணையைச் சார்ந்த 'குறத்தி'யை (Kuratti) ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் போது 'Gypsy' என மொழிபெயர்க்கின்றனர். ஆங்கில மொழியில் வழங் கும் 'gypsy' ஒரு நாடோடி, ஆனால் தமிழில் குறத்திக்கென தனி நிலம் உண்டு. அவள் நாடோடியில்லை; gypsy குறத்தி இருவரின் வாழ்க்கை முறைகளும் பழக்க வழக்கங்களும் வெவ்வேறாக இருக்க gypsyயை குறத்திக்கு நிகரனாக அமைப்பது சொல்லளவில் சரியாக இருப்பது போலத் தோன்றும் எனினும் கருத்தளவில் gypsy என்னும் நிகரன் மூலநூற் கருத்தினைப் புலப்படுத்தும் நெருங்கிய நிகரனாக அமையவில்லை. தமிழிலக்கியக் கருத்தினின்று விலகி மாறுபட்ட கருத்தை மொழிபெயர்ப்பு நிகரன் புலப்படுத்துகிறது. நிலம் சார்ந்த பெயரை, இனம் சார்ந்த பெயராக மொழிபெயர்ப் பதால் இங்கே கருத்து விலகல் ஏற்பட்டுள்ளது.

3.5. ஏற்ப மாற்றுதல் (Modification) (Arppa mattrutal)

ஒரு பனுவலை மொழிபெயர்க்கும்போது சிற்சில மாற்றங் களைச் செய்து மூலமொழிச் செய்தியைப் பெறுமொழிக்கு ஏற்ப அமைப்பதனையும் ஜீவன் சாகர் மொழிபெயர்ப்புக் குறைகளுள் ஒன்றெனக் கருதுகின்றார். இம்மாற்றங்கள் குறிப்பிட்ட நோக்க

மும் பயனும் கொண்டனவாயிருக்கும். இவற்றால் மூலநூலாசிரியரின் படைப்பு நோக்கம், நுவல் பொருள் ஆகியன பெறுமொழி வாசகரைச் சென்றடையுமானால் இவை ஏற்புடையன என்றும், முரண்பட்ட கருத்தை உருவாக்குமானால் தவறானவை என்றும் திறனாய்வாளர் கருதுவர்.

கிறிஸ்துவக் காப்பியமான 'இரட்சணிய யாத்திரிகம்' ஜான் பனியனின் The Pilgrim's Progress என்பதன் மொழிபெயர்ப்பாகும். இக்காவியத்தில்பல சூழல்கள், பெயர்கள், வருணனைகள் ஆகியன பெறுமொழிக்கேற்க மாற்றியமைக்கப்பட்டுள்ளன. பெயர்களும் பெறுமொழி வழக்கிற்கேற்பச் 'சூசை' என்றும் 'மரியாள்' என்றும் மாற்றப்பட்டுள்ளன. மற்றொரு காப்பியமான தேம்பாவணியில் பிறமொழிப் பெயர்களான 'ஜான்' (John) (அருள் பெற்றவன்) என்பதனை 'கருணையன்' என்றும், ஜோசப் என்பதனை 'வளன்' என்றும் பெறுமொழி நிகரனாக வீரமாமுனிவர் மாற்றியுள்ளார். ஆனால் பெறுமொழித் தன்மைக்கேற்ப மாற்றுவதாகக் கருதி 'ருஸ்தம்' எனும் பாரசீக ஹெர்குலிஸை 'வீமன்' Veman என்றும் ஹத்தீம் தாய் எனும் வள்ளலை 'கர்ணன்' (Karnan) என்றும் மாற்றியமைப்பது இவர்களின் ஆளுமையும் இணைவையும் முரண்படப் புலப்படுத்திவிடும். இம்முறை முற்றிலுமாக மாற்றியமைப்பதே ஆகும்.

மொழிபெயர்ப்பினால் விளையும் பயன்கள் ஏராளம். அவற்றை டாக்டர் ச. சிவகாமி ஒன்பது வகையாகக் குறிப்பிட்டுக் காட்டுகிறார். அவை வருமாறு:

அ. மொழிவளம் பெறுகிறது. புதிய புதிய சொற்களும் புதிய புதிய நூல்களும் தோன்றி இவ்வளப்பத்தை உண்டாக்குகின்றன. இலக்கியத் துறையாயின் மொழிபெயர்ப்புகள் மட்டுமின்றித் தழுவல்களும், புதிய வடிவங்களாயின் அதனைப் பின்பற்றி வேறு பல மூலநூல்களும் எழுதுதல் குறிப்பிடத்தக்கது. தி. வேங்கட கிருஷ்ணய்யங்காரின் இராகவ காவியம், வடமொழி, தமிழ், இந்தி ஆகிய மொழிகளில் உள்ள இராமாயணங்களைக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டதைச் சான்றாக்கலாம்.

ஆ. இலக்கிய மொழிபெயர்ப்புகளால் ஒப்பிலக்கிய ஆய்வு சிறப்புப் பெறுகிறது.

இ. ஒரு மொழியினர் அல்லது நாட்டினர் அல்லது இனத்தவரின் பண்பாடு, நாகரிகம், பழக்க வழக்கம் போன்றவற்றை எளிதில் உணரலாம். ஒரு நாட்டின் சிறப்புக்களை (இடம், பொருள்) அறிதற்கும் ஏதுவாகிறது.

ஈ. மூலமொழியின் சிறப்பினையும், மூலநூலாசிரியர் மூலம் இவற்றின் சிறப்பினையும் தெளிவாகப் புரிந்து கொள்ள லாம். இதனால் பிறமொழி இலக்கிய அறிவு சிறப்புறுகிறது.

உ. அறிவியல், மருத்துவம் போன்றவற்றின் மொழி பெயர்ப்புகளால் அம்மொழியினர் அடைந்துள்ள முன்னேற்றத்தை உணரவும் அம்முன்னேற்றத்தினை மொழிபெயர்ப்பின் மூலம் பயன்படுத்திக் கொள்ளவும் துணைநிற்கின்றது.

ஊ. கலைகளின் மொழிபெயர்ப்பு பண்பாடு, நாகரிகம், இவற்றினை உணர்தற்கும், பண்பாட்டுக் கலப்பு நிகழ்வதற்கும் வாய்ப்பாகிறது.

எ. வரலாறு, பொருளாதாரம், புவியியல் போன்றன அந்நாட்டின் உண்மையை உணர வழியாகின்றன. வழி காட்டுத லாகவும் அமைகின்றன.

ஏ. பிற சமயம் பற்றிய அறிவிற்குச் சமய நூல்களின் மொழி பெயர்ப்புகள் உதவுகின்றன.

ஐ. எத்துறையைச் சார்ந்தவராயினும் உலகப்புகழ் பெற்ற வரையும் அவரது சாதனைகளையும் உணர்வதற்கு மொழி பெயர்ப் புகள் சிறந்த கருவியாகும்.

திராவிட மொழி இலக்கியங்கள் குறித்து ஆய்வு நடத்திய டாக்டர் ச.வே.சுப்பிரமணியன் மொழிபெயர்ப்பால் இம்மொழி களுக்கிடையே ஏற்பட்ட பயன்களை இவ்வாறு விவரிக்கிறார். 'திராவிட மொழியிலக்கியங்கள் பல காலத்திலும் பல நிலையிலும்

மொழிபெயர்ப்புக்கு ஆட்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பு பற்றிச் சிந்தித்துள்ளன. மொழிபெயர்ப்பால் வளம் பெற்றுள்ளன; மொழி பெயர்ப்பு மூலம் தம்முள் செல்வாக்குக் காட்டியுள்ளன. தம்மைப் பிற மொழியினர்க்கு அறிமுகம் செய்துள்ளன. ஆற்றலும் அழகும் புலப்படுத்தியுள்ளன. ஆக்கம் கொண்டுள்ளன. தாக்கமும் கொண் டுள்ளன. அத்துடன் இலக்கிய இயக்கங்களும், புத்திலக்கிய வகை களும் புதுவிதச் சிந்தனைகளும் உத்திப் பயன்பாடுகளும் நெறி முறைகளும் நோக்க வேறுபாடுகளும் அணுகுமுறைகளும் பார்வைக் கோணங்களும் இத்தகு பிற தாக்கங்கள் பலவும் மொழி பெயர்ப்பால் ஏற்பட்டுள்ளன.

ஆட்டோ ஜெபர்சன் என்ற மொழி நூல் அறிஞர் How to teach a foreign language என்ற தனது நூலில் மொழி பற்றிக் கூறும் கருத்து பெரிதும் சிந்திக்கத்தக்கதாக இருக்கிறது. மொழி என அவர் கூறியள்ளதை இலக்கியம் எனப் பார்த்தால் மொழிபெயர்ப்பின் பயன்பாட்டைத் தெள்ளிதில் உணரமுடியும். "Language is not an end in itself, just as little as railway track; It is way of connection between souls , a means of communication. அவர் மேலும் கூறுகிறார். "The highest purpose in the teaching of language may perhaps be said to be the access to the best thoughts and institutions of a foreign nation, its literature, culture in short, the spirit of the nation in widest sense of the word".

மொழிபெயர்ப்பை 'பயன்கலை' என்று சொல்லிப் பெருமைப்படுவார் டாக்டர் க.த. திருநாவுக்கரசு. கருத்துப் பகிர்வு, கருத்துத் தெரிவிப்பு எனும் அதனை ஒருவகைப் பயன்கலை யாகவே உலகம் போற்றுகிறது. 'கணிப்பொறி அறிவியலை' ஒரு வகைப் 'பயன்கலையாகக் கருதும் நேரம் நெருங்கிவிட்டதை அறி கின்ற பொழுது 'மொழிபெயர்ப்புக் கலையைக் பயன்கலை' எனச் சொல்வது தவறாகுமா?

ராமசாமிக்குத் தமிழ் மட்டுமே தெரியும்.

இது வேறொன்றுமில் லை . நேசனல் புக் டிரஸ்ட் இந்தியா வெளியிட்ட ஒரு விளம்பரத் தலைப்பு. பல்வேறு இந்திய மொழி இலக்கியங்களை மட்டுமே அறிந்த வாசகரால் எண்ணற்ற இந்திய

நூல்களை (மொழிபெயர்ப்பில்) படிக்க முடிகிறது என விளம்பரம் செய்திருந்தார்கள். மேலும் இலக்கியங்களுக்கிடையே ஒன்றுக் கொன்று செழுமைபெற மொழிபெயர்ப்புகள் உதவுகின்றன.

அஸ்ஸாமியரின் இன்ப துன்பங்கள் என்னென்ன? வங்காளியர் எப்படி அன்பு காட்டுகிறார்கள். குஜராத்தியர் எப்படிச் சிரிக்கிறார்கள்? தெலுங்கர்கள் எப்படிக் குடும்பம் நடத்துகிறார் கள்? மராத்தியர் என்னென்ன நம்பிக்கைகளை, சடங்குகளைக் கொண்டிருக்கிறார்கள்? என மற்றொரு விளம்பரத்தில் கேள்வி களை எழுப்பி, கீழே இவ்வாறு விடையும் தரப்பட்டிருந்தது. ஏறத் தாழ தமிழர்களைப் போலத்தான். மொழி வேறுபாடுதான்.

இதே கேள்வியை வேற்றுநாட்டு மக்களிடமும், இனத்தவ ரிடமும் கேட்டு விடைபெற விரும்பினால், அதற்கு மொழி பெயர்ப்பு நூல்கள் துணை செய்யும் என்று நம்பலாம்.

சில சமயங்களில் மொழிபெயர்க்கப்பட்டவைகள் ஒரு நாட்டின் வரலாற்றில், இலக்கியத்தில், கலாச்சாரத்தில் மிக முக்கிய மானவைகளாக மாறிப் பெரும் தாக்கத்தை விளைவித்திருக்கின் றன. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் லத்தீன் மொழியில் பெயர்க் கப்பட்ட இலியட் மற்றும் ஒடிஸி, பதினாறாம் நூற்றாண்டில் மார்டின் லூதர் ஜெர்மானிய மொழியில் பெயர்ப்புச் செய்த பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

3.6. புதுமையாக்கம் (Modernisation)

Modernisation என்ற கோட்பாடே தமிழில் 'புதுமை யாக்கம்' என்பதாகும். பதினேழாம் நூற்றாண்டுக்குப் பின் ஏற்பட்ட தொழிற்புரட்சி, சமுதாய, அரசியல் புரட்சி போன்றவற் றின் விளைவாக உலகின் பல பகுதிகளில் சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படலாயிற்று. பொருளாதார அடிப்படையிலான தொழிற் புரட்சி பல்வேறு விதமான விளைவுகளைத் தோற்றுவித்தது. இவ் விளைவுகள் சமுதாயத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் மாற்றத் தைத் தோற்றுவிக்க ஏதுவாக அமைந்தன. ஆகவே சமுதாயத்தின் ஒரு அங்கமான மொழயிலும் மாற்றங்கள் ஏற்படலாயின. அச் சமுதாயத்தின் தேவைகளை ஒட்டியும் மாற்றங்கள் தோன்ற லாயின. காலப்போக்கில் இவ்வாறு ஏற்பட்ட மாற்றங்களுள் சில

மறைந்து விட்டதையும் காண்கிறோம். இம்மாற்றங்களுள் சில தாமாகவே வந்து சேர்ந்தவை. வேறு சில மொழி பேசும் சமுதாயப் பிரிவினரால் உண்டாக்கப்பட்டவை. இன்னும் சில பிறமொழித் தொடர்பால் பிற சமுதாயத்துடனான தொடர்பால் ஏற்பட்டவை. மாற்றங்கள் எப்படித் தோன்றியிருப்பினும் அவை அனைத்துமே, அவை வந்து சேர்ந்துள்ள மொழிக்குப் புதுமையைச் சேர்த்தன என்றே சொல்ல வேண்டும். ஆகவே மொழிப் பயன்பாட்டில் புது மொழிக் கூறுகள் சில கோட்பாடுகளின் அடிப்படையில் இந்த இந்தத் துறைகளுக்கு இன்ன இன்ன மொழிக் கூறுகள் தேவை என்பது போன்று உண்டாக்கப்படவில்லை. தேவைக்கேற்ப ஏதோ ஒரு முறையில் மொழிக்கூறுகள் புதிதாக உண்டாக்கப்பட்டன. அல்லது திருத்தி அமைக்கப்பட்டு வந்தன. இதனால் ஒரு வரையறைக் குட்பட்ட தெளிவான கோட்பாடுகளின்படி மொழிக்கூறுகள் ஆக்கப்படாத சூழ்நிலையே இருந்து வந்தது. இதுபோன்ற சூழலை மாற்ற எண்ணிய நிலையில் ஏற்பட்ட கோட்பாடுதான் 'புதுமை யாக்கம்' (Modernisation) என்பதாகும்.

இன்றைய 'மொழித் திட்டமிடுதல்', ஒரு சிறப்பான இடத்தைப் பெற்று விளங்குகிறது. 'புதுமையாக்கம் எவ்வாறு செயல் படுத்தப்படுகிறது. இதனைச் செயல்படுத்த என்னென்ன கொள்கைகள், வழி முறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ந்து வரும் நாடுகளின் மொழி வளர்ச்சிக்கும், சமுதாய வளர்ச்சிக்கும் 'புதுமையாக்கம்' எந்த எந்த வகைகளிலெல்லாம் உதவியாக உள்ளது. நடைமுறையில் புதுமையாக்கம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பனவற்றைப் பற்றி இங்கு விளக்கமாகக் குறிப்பிடலாம்.

மொழியில் ஏற்படுத்தப்படும் எல்லா வகையான மாற்றங்களும் புதுமையாக்கத்தினுள் அடங்கும் என்று ஒரு சாரார் விளக்குவார். மற்றொரு சாரார் 'புதுமையாக்கம்' என்பது மொழிக் கூறுகளின் பயன்பாட்டில் தோற்றுவிக்கப்படும் விரிவாக்கம் (elaboration) என்று சொற்களஞ்சியத்தின் வளர்ச்சி என்று கூறி இதனை விளக்குவர். இவ்வாறு பல முறைகளில் இக்கோட்பாடு விளக்கப்படினும் சில அடிப்படைக் கருத்துக்களை முன்வைத்தே இக்கோட்பாடு விளக்கப்பட்டு வருவதைக் காணலாம்.

மொழியில் மாற்றங்கள் ஏற்படுவது இயல்பேயென்று முன்பு கூறினோம். செய்திப் பரிமாற்றத்தில் பங்குபெறும் போது எம்மொழியிலும் சிற்சில மாற்றங்கள் தோன்றவே செய்யும். இம்மாற்றங்கள் ஏற்பட மொழிகளுக்குள் ஏற்படும் தொடர்பும் ஒரு காரணமாகும். பொதுவாக இலக்கிய, இலக்கண வளம் நிறைந்த நீண்ட வரலாற்றினைப் பெற்றுள்ள எந்த ஒரு மொழியை எடுத்துப் பார்த்தாலும் அம்மொழி காலப்போக்கில் அடைந்துள்ள மாற்றங் கள் நன்கு தெரியவரும். இம்மாற்றங்கள் அனைத்தும் சமுதாய முன்னேற்றத்தின் வாயிலாகவும் அம்மொழி பெற்றுள்ள வளர்ச்சி யின் வாயிலாகவும், தோன்றியவை என்பதில் சிறிதும் ஐயமில்லை இன்று மிக வேகமாக வளர்ந்து வரும் அறிவியல் உலகில் புதிய படைப்புகள், கருத்துக்கள் போன்றவை சமுதாயத்தின் எல்லா நிலைகளிலும் தோன்றி வருவதை நாம் கண் கூடாகக் காண் கிறோம். இவ்வாறு ஏற்பட்டு வரும் முன்னேற்றத்தினாலும், மாற்றத்தினாலும் மொழிகளிலும் அவற்றிற்கேற்பப் புதுமையாக்க மும் தோன்றியே வருகிறது எனலாம்.

மொழிமாற்றங்களைப் பற்றிச் சொல்லும்போதும், மொழித் திட்டமிடுதலைப் பற்றிச் சொல்லும்போதும் ஒரு மொழி யில் கடன் வாங்கல் (barrowing)என்பது சில சமயங்களில் இயல் பாகவும், இன்னும் சில சமயங்களில் மொழிப் பயன்பாட்டின் இன்றியமையாமை கருதியும் ஏற்படுகிறது என்று கூறலாம். ஒரு மொழியைப் பேசுவோர் தாமாக அறிந்தோ, அறியாமலோ பிற மொழிக் கூறுகளைத் தமது மொழிப் பயன்பாட்டில் பயன்படுத்தி வருவதையும், அம்மொழிக் கூறுகள் காலப்போக்கில் அவர்தம் மொழியில் நிலைபெற்று வருவதையும் (மாற்றம் பெற்றோ, பெறாமலோ) வரலாற்று மொழியியல் (Historical Linguistics) நமக்குக் காட்டுகிறது. மொழிப் பண்பாட்டில் தன்னிறைவுபெறாத மொழிகளில் மட்டுமே இவ்வாறு மாற்றங்கள் தோன்றுகின்றன என்று சொல்வதற்கில்லை. தன்னிறைவு பெற்ற மொழிகள் என்றும், ஆற்றல் மிக்க மொழிகள் என்றும் கருதப்படும் ஆங்கிலம், பிரெஞ்சு போன்ற உலக மொழிகள் (International Languages)சிலவற்றிலும் கூட இவ்வகையான கடன் வாங்கல் போன்ற செயல்கள் காணப்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

'புதுமையாக்கம்' என்பது பிறமொழிகளின் பால் ஏற்படும் புதுமை மோகமே என்று புதுமையாக்கத்தினை விரும்பாத சிலர் கூறுவர். இருபதாம் நூற்றாண்டின் இக்காலப் பகுதியில் தோன்றியுள்ள எங்கும் புதுமை, எதிலும் புதுமை என்ற சமுதாய மனப்பாங்கின் விளைவே புதுமையாக்க மோகம் என்றும் தற்போது பேசப்படுகிறது. புதுமையாக்கத்தினைப் புதுமை மோகத்தின் விளைவு என்று கொள்வது சரியாகாது. ஏனெனில், புதுமையாக்கத்தில் பிறமொழிக் கூறுகளைப் பயன்படுத்தவதோடு, புதுமையாக்கத்தை மேற்கொள்ளும் மொழியலுள்ள சில கூறுகளைச் செம்மையாக்கி அவற்றையும் பயன்படுத்தி வருவதைச் சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் மொழித் திட்டமிடுதலின் வாயிலாக நன்கு அறிய முடிகிறது.

புதுச்சொற்கள், பிறமொழிக் கூறுகள் ஆகியவை ஒரு மொழியின் மொழிப் பயன்பாட்டில் வந்து வழங்கும் நிலை. அம்மொழி பேசும் சமுதாயத்தின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகிறது. காடுகளிலும், மலைகளிலும், அடர்ந்த பனிப்பிரதேசங்களிலும் உள்ள மற்ற சமுதாயத்தினருடன் எந்த வகையான தொடர்பும் இன்றி வாழும் சமுதாயப் பிரிவினரின் மொழி வழக்குகளில் பிறமொழிகளில் காணப்பெறாத சில மொழிக் கூறுகள் இருக்கின்றன என்பதற்காகப் புதுமை மோகத்தில் உந்தப்பட்டு அச்சொற்களை மற்ற மொழிக் கூறுகளை யாரும் தேடிச் செல்லுவதில்லை. ஆனால் இவ்வாறு தனித்தியங்கும் சமுதாயப் பிரிவினரின் மொழி வழக்குகளில் காணப்படும் சில மொழிக் கூறுகள் சமுதாயத் தேவையின் பொருட்டு மொழிப்பயன்பாட்டின் ஆற்றல் கருதியும், இயல்பான முறையிலும் பிறமொழிகளுக்கு வந்து சேரும்போது பிறமொழிகளில் பயன்படுத்தும் போது அவற்றை மொழிப் பயன்பாட்டிலிருந்து நீக்குதல் கூடாது. அவ்வாறு நீக்குதல் மொழிப் பயன்பாட்டிற்கும் ஏன் மொழி வளர்ச்சிக்கும்கூட ஊறு விளைவிப்பதாகவே அமையுமென்று உறுதியாகச் சொல்லலாம் (கருணாகரன், *1988:85-88*).

ஃபெர்குசனின் கொள்கைப்படி புதுமையாக்கத்தில் இரு உட்பிரிவுகள் உள்ளன. அவற்றில் ஒன்று, மொழியில் பயன்படுத்தப்பட்டு வரும் சொற்களஞ்சியங்களின் வளர்ச்சியை மேற்கொள்கிறது. மற்றொன்று மொழிப் பயன்பாட்டிற்கேற்பத் தேவை

யான புது அமைப்புகளையும், புதுமொழி நடைகளையும் ஏற் படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. இவ்விரண்டு உட்பிரிவு களும் மொழி வளர்ச்சிக்குத் துணைபுரிவதோடு மொழிப் பயன் பாட்டில் தன்னிறைவையும் ஆற்றலையும் பெருக்குகின்றன. *(குழந்தைசாமி,1990:120-122)*

3.7.மொழிபெயர்ப்பு உத்திகள் (Techniques of Translation)

தாகூருக்குப் பின் ஞானத்தைத் தெளிவாக விளக்கிய கீழை நாட்டுத் தத்தவ இயலாளர் கலீல் கிப்ரான் ஆவார். இவர் இலெப னான் நாட்டினர். இவருடைய தெளிந்த ஞானநூலான 'கண்ணீரும் புன்னகையும்' (tears and laughter) தமிழில் அ.மா.சகதீசன் என்பவ ரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 'பக்தியின் மொழித் தமிழ்' என்று பாராட்டுப்பெற்ற தமிழ் மொழியில் கலீல் கிப்ரானின் ஞானத் தத்துவங்களைப் பெயர்த்தளிக்கப் பல உத்தி முறைகளை மொழிபெயர்ப்பாளர் கையாண்டுள்ளனர். இவ்உத்திகள் தொடர் பியல் அணுகுமுறையைச் (Communicative approach)சார்ந்தன ஒருவர் மற்றொருவரிடம் ஒரு கருத்தைத் தெரிவிக்கும்போது அக் கருத்து தெளிவாகப் புரிவதற்குச் சில உத்திகளைக் கையாள்வது மரபு. அங்ஙனமாக அ.மா.சகதீசனும் பின்வரும் உத்திகளைக் கையாண்டுள்ளார்.

அ. அடைமொழிகள் சேர்த்தல்
(Addition of adjectival and adverbial forms)
ஆ. விளக்கிக் கூறுதல் (Explanation)
இ. திரும்பக் கூறுதல்
(Repeating the shades of meaning through another equivalent successively)

இவற்றை ஒவ்வொன்றாகச் சான்றுகளுடன் காண்போம்.

சேர்த்தலும் விலக்கலும் மொழிபெயர்ப்பில் அறனில் செய்கைகளாகக் கருதப்பெறுவன. எனினும் மூலநூல் கருத்தில் மாற்றம் ஏற்படுத்தாமல் அக்கருத்தினைப் புலப்படுத்தும் சொல் வடிவங்களில் சேர்த்தலும் விளக்கமும் கொள்வதில் தடையேது மில்லை.

3.7.1. அடைமொழிகள் சேர்த்தல்

(Addition of adjectival and adverbial forms)

பெயர்ச்சொற்களை மொழிபெயர்க்கும்போது அவற்றிற் குரிய நிகரன்கள் எளிதில் கிடைத்துவிடும் வாய்ப்பு ஏற்படு மானால், அவ்வேளை மொழிபெயர்ப்பு ஆசிரியர் மூலநூலில் கருத்தினை இம்மொழிபெயர்ப்பு நிகரன் சரியாகப் புலப்படுத்துமா என்ற ஐயுறுகிறார் (அ) தடுமாறுகிறார். இத்தடுமாற்றத்தின் விளை வாக மொழிபெயர்ப்புச் சொல்லுக்கு ஓர் அடைமொழியைச் சேர்க் கிறார். இவ் அடைமொழி மூலநூற் கருத்தினை அழுத்தமாகவும், தெளிவாகவும் புலப்படுத்த உதவுவதாகக் கருதுகிறார். மொழி பெயர்ப்பில் அடைமொழிப் பயன்பாட்டிற்கான அடிப்படைக் காரணமாக நாம் இதனைக் கொள்ளலாம். இப்பயன்பாட்டில் மூல நூல் வாசகர் பெற்ற மனஉணர்வை மொழிபெயர்ப்பு வாசகரும் பெற உதவுகிறது என்பது மொழிபெயர்ப்பாசிரியரின் நம்பிக்கை யாகும்.

3.7.2. விளக்கிக் கூறுதல் (Explanation)

மொழிபெயர்ப்பாசிரியர் தமிழ் வாசகரின் புரிதிறனை மனத்திற் கொண்டு விளக்கிக் கூறுதல் உத்தி முறையைக் கையாண்டுள்ளார். அடைமொழிப் பயன்பாட்டிற்கு அடுத்த நிலை யாக இவ்விளக்கயுரைக்கும் உத்தி முறை அமைகிறது. அடை மொழியால் மூலநூல் கருத்தைத் தெளிவாகவும் முழுமையாகவும் விளக்க இயலா நிலையில் கூடுதல் விளக்கம் அளிக்க வேண்டி யதன் கட்டாயத்தை மொழிபெயர்ப்பாசிரியர் உணர்கிறார். எனவே மூலநூற் சொல்லை விளக்கமாக மொழிபெயர்த்துள்ளார்.

சான்றாக,

I suffer I have
exhausted my life following you
(Have Mercy on me my soul)

என்ற வரிகளில் இடம் பெறும் exhausted என்ற சொல்லை

''தேய்ந்து, நைந்து அழுகும் உடலைப் பார்''
(ஆவித்துணையே கருணை காட்டு, ப.92)

என்று மொழிபெயர்த்துள்ளார். தேய்ந்து, நைந்து, அழுகும் உடல் என்ற விளக்கம் பல அடைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

'விளக்கிக் கூறுதல்' என்னும் இவ்உத்தி, மூலநூலில் காணப்படும் சொல்லையும், பொருளையும் மொழிபெயர்த்த பின்னும் அம்மொழிபெயர்ப்புக்கும் மேலாக வேறு சில சொற்களையும் அமைத்துள்ளது.

சான்றாக,

look upon me my soul (Have mercy on me, my soul)

என்பதனை, ''என் ஆத்மாவே உற்று நோக்கு யோசித்துப் பார்'' என்ற தொடர் விளக்கத் தொடராகவே அமைந்துள்ளது. மூல நூலில் இதற்குரிய சொல் காணப்பெறவில்லை.

This, my soul, is agonizing tortue (torture)
(Have mercy on me, my soul)

என்ற ஆங்கிலத் தொடரைத் தமிழில் மொழிபெயர்ப்பாசிரியர்,

ஆன்மாவே இது பொறுக்க முடியாத வேதனை
பெரும் சித்திரவதை உயிர்க் கொலை *(பக்.91)*

என விளக்கியுள்ளார். 'வேதனைப்படுத்தும் சித்திரவதை' என்பது மூலத்தின் சரியான மொழிபெயர்ப்பு. ஆனால் இத்தொடரைப் பிரித்து 'வேதனையையும் சித்திரவதையையும் தனித்தனியாக அடைகளோடு விளக்கியுள்ளார். இவையும் போதாவென்று 'உயிர்க்கொலை' என்பதனையும் சேர்த்துள்ளார். இவ்விளக்கத்தில் மொழிபெயர்ப்பாசிரியர் தம் கருத்து எதனையும் புதிதாகச் சேர்க்கவில்லை. மூலநூற் கருத்தை விளக்கமாக மொழிபெயர்த்துள்ளார்.

விளக்கமாக உரைக்கும் உத்தியைப் பயன்படுத்தும்போது அ.மா.சகதீசன் குறிப்பிடத்தக்க ஒரு வழிமுறையைப் பின்பற்றுகிறார். ஒரு பாடற் பகுதியினை மொழிபெயர்க்கும்போது அப்பகுதி உணர்த்தும் கருத்தைச் செவ்வனே புலப்படுத்த அக்கருத்தின் சாரத்தை அப்பகுதியின் முதலாவது இறுதியில் ஓரிரு வரிகளில்

எடுத்துரைக்கிறார். இத்தகைய சாரம் உரைப்பதாகாது. மாறாக அக் கருத்தினை முழுமையாகவும் தெளிவாகவும் புரிந்து கொள்ள இவ் வழிமுறை உதவுகிறது எனலாம். ஏனெனில் முதலிலோ இறுதி யிலோ அமையும் இவ்வரிகள் மூலநூலாசிரியர் கருத்துக்கு முரணா னவற்றைக் குறிக்கவில்லை. மொழிபெயர்ப்பாசிரியரின் சொந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

சான்றாக,

எனக்கு ஓய்வில்லை, ஒழிவில்லை அமைதியில்லை
கடற்கன்னிகளைச் சுற்றி நடன மாடுவேன்
அவர்கள் கடலாமத்திலிருந்து வெளிப்படுவர்

(அலை இசை, ப.103)

Many times have I danced around mermaids
As they rose from the depths ad (Song of the Wave)

இக்கவிதையின் தொடக்கப் பகுதி தமிழில் பின்வருமாறு அமைந்துள்ளது. இப்பகுதியின் மூன்றாம் வரி, முதலிரு வரிகளை யும் நான்காம் வரியையும் விளக்குகிறது.

''பலமிக்க கரைதான் என் காதலன்
நான் அவன் இனிய இதயம்
நானும் கரையும் காதலர்கள்
நாங்கள் காதலால் இணைக்கப்பட்டோம்''

(அலை இசை, ப.103)

"The strong shore is my beloved
And, I am his sweetheart
we are atlast united by love and (Song of the Love, 103)

'பூவோபூ' (Song of the love) என்ற கவிதையின் நிறைவுப் பகுதி ஆங்கிலத்தில்

This is the wisdom
which man must learn

என அமைந்துள்ளது. தமிழில் அதே பகுதி பின்வருமாறு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

''மானிடனே நான் புகட்டும் பாடம் இதோ
எப்போதும் தலைநிமிர்ந்து நில் நீ
தலை தாழ்த்தி என்றுமே கீழ்நோக்காதே''

முதல் வரியுடன் மொழிபெயர்ப்பு நிறைவு பெற்றுவிட்டது. அடுத்த இருவரிகளும் இப்பகுதிக்கு முன்னதாக அமைந்திருந்த பின்வரும் வரிகளின் விளக்கமாக, இக்கவிதையின் அடிநிலைக் கருத்தாக அமைந்துள்ளது.

''நான் பேரொளியைக் காணத்தான்
விண்ணை அண்ணாந்து நோக்குவேன்
தலை தாழ்த்திக் குனிவதே இல்லை'' (பூவே பூ, ப.72)

இம்முறையில் மொழிபெயர்ப்பாசிரியர் சில பகுதிகளை மொழி பெயர்ப்பதோடு மட்டும் அமையால் மேலும் சில விளக்கங்களை முதலிலும் இறுதியிலும் அவ்வப் பகுதிகளிலும் கூட அமைத் துள்ளார்.

3.7.3. திரும்பக் கூறுதல் (Repeating)

மக்கள் தொடர்பியலில், திரும்பத் திரும்பக் கூறுவதால் கூறுவோரின் கருத்துக் கேட்போரின் மனத்துள் ஆழப்பதியும் என்பது அனைவரும் ஏற்றுக்கொண்ட மெய்ம்மை ஆகும். நாட்டுப்புறப் பாடல்களிலும், பழந்தமிழ்த் தன்னுணர்ச்சிப் பாடல் களிலும் இவ்வுத்தி பயன்பட்டிருப்பதை அறியலாம். எம்.பௌரா வின் 'வீரநிலைப் பாடல்கள்' எனும் நூல் இதனைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளது. இவ்உத்தியை மொழிபெயர்ப்பில் அ.மா.சகதீசன் புகுத்தியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் ஒரே சொல்லுக்கு இரண்டு நிகரன்களை அடுத்தடுத்து அமைத்துள்ளார். இவ்வாறு திரும்பக் கூறுவதால் பொருள் அழுத்தம் கிடைக்க வாய்ப்புண்டு.

''காதலோ காதல்'' (Song of love)

என்ற பாடலில் திரும்பக் கூறும் உத்தி புலனாகிறது.

சான்றாக,

"I am the poet's elation
And the artist's revelation
And the musicians inspiration
Yet I revealed myself to Solomon and
He drew wisdom from my presence

என்ற வரிகளில் உள்ள தடித்த எழுத்துச் சொற்கள் தமிழில் இரண்டு நிகரன்களைப் பெற்று வந்துள்ளன. அவை வருமாறு

''நான் கவிஞர்களின் பெருமிதம் (elation)

ஓவியரின் விளம்பரம் வெளியீடு களியாட்டம் (revelation)

''சாலமனுக்கு என்னையே
உணர்த்தினேன், வெளிப்படுத்தினேன் (revelaed)

என் உருவத்தின் முன்னிலையிலே
அவன் அறிவை, ஞானத்தைப் பெற்றான் (Wisdom)

இவற்றின் முதல் நிகரன் இயல்பாகவும், ஏற்புடையதாகவும் இருந்தாலும்கூட மறுபடியும் மற்றொரு நிகரனை மொழிபெயர்ப்பு ஆசிரியர் அமைத்துள்ளார். திரும்பவரும் இரண்டாம் நிகரனில் பொருள் வேறுபாடு அதிகம் இல்லை. இவ் இரண்டாம் நிகரன் முதன் நிகரனின் நிழலாக (shades of meaning) அமைந்துள்ளது.

3.8. பிற உத்திகள் (Other techniques)

தத்துவம் பொதிந்த, இலக்கியச் செறிவுடைய கலீல் கிப்ரானின் படைப்புக்களை மொழிபெயர்த்த அ.மா. சகதீசன் மூலநூற் கருத்தை மாற்றாமலும், குறைக்காமலும் முரண்படுத்தாமலும் தம்முடைய கருத்தை ஏற்றி உரைக்காமலுமிருக்க மேற்கூறியவைதவிர வேறு சில உத்தி முறைகளையும் பயன்படுத்தியுள்ளார். அவை யாவன:

அ. எழுவாய் (அ) பயனிலை சேர்த்தல்

ஆ. தொடர்புடையவற்றைச் சேர்த்துக் கூறுதல்

சான்றாக: மலையும் மடுவும் என்றாவது இணையுமா?
(இது மூலத்தின் மொழிபெயர்ப்பு)
இவ்வரியைத் தொடர்ந்து வரும் அடுத்த வரி
மலைச்சிகரமும் சமவெளியும் சமமாகுமா?
என்பது: இவ்வரி தொடர்புடையனவற்றைச்
சேர்த்துக் கூறுவதாகும்.

இ. பேச்சுத் தமிழைப் புகுத்துதல்
சான்றாக, பலவானுக்கும் நோஞ்சானுக்கும் இடையே
இப்போராட்டம் என்று தான் முடியும்

இத்தகைய பல்வேறு உத்திகள் பயன்படுத்தப்பட்ட போதும் கூடப் பெருவாரியாகக் காலப் பயனுடையனவாக விளங்கும் மூன்று உத்தி முறைகள் மட்டுமே இதில் விளக்கப்பட்டுள்ளது.

முடிவுரை (Conclusion)

திறனாய்வாளர்கள் வகைப்படுத்திய குறைகளை இவ்வாய்வு விளக்கியிருந்தாலும் இவற்றில் சில பெறுமொழிப் பண்பாடு, மரபு, மொழிபெயர்க்கப்படும் காலச்சூழல் ஆகியவற்றிற் கேற்பத் திறனாய்வாளரால் சரியென ஏற்றுக் கொள்ளப்படுவதும் உண்டு. Life gifts என்ற தொடரை ஒரு பழங்குடி மக்களின் மொழியில் 'உயிருள்ள பரிசுகள்' என மொழிபெயர்த்தபோது பெறுமொழி வாசகர் அவர்களின் மரபுப்படி அப்பரிசுகளைக் 'கோழிக் குஞ்சுகள்' எனக் கருதினர் என்பது நைடாவின் கருத்து. இவ்வாறு தவறாகப் பொருள் கொள்ளும் சூழல் காணப்படும் நிலையில் 'மாற்றியமைத்தல்' முறையைச் சரியெனக் கொள்ள வேண்டும்.

''மண்ணொடுங் கொண்டு போனான் என்
புண்ணிய மேனி தீண்ட அஞ்சுவான்''

எனச் சீதை கம்பராமாயணத்தில் கூறும் விதமாகக் கம்பர் புதிய சூழலை ஏற்படுத்தி இராவணன் சீதையைக் குடிலொடு எடுத்துச் சென்றதாக அமைத்திருந்தார். இங்ஙனம் மூலத்தில் இல்லாத வற்றைப் புதிதாகச் சேர்த்ததற்குப் பெறுமொழிப் பண்பாடு

முக்கியக் காரணமாயிற்று. இச்சேர்க்கையால் மூலநூல் ஆசிரியரின் நோக்கம் எதுவும் மொழிபெயர்ப்பில் மாறிவிடவில்லை.

ஆனால் மூலநூற் கருத்தை முற்றிலுமாகப் பிறழ உணர வாய்ப்பளித்தாலும் கருத்து விலகலும் சரியெனக் கொள்வதற்கு இடமில்லை. இவை மூலநூலாசிரியரின் படைப்பு நோக்கத்தைச் சிதறடித்துவிடும். மொழிபெயர்ப்பின் நம்பகத் தன்மையைச் சிதைத்து விடும். எனவே இத்தவறுகள் இடம்பெறாத வகையில் ஒரு மொழிபெயர்ப்பை அமைப்பது தான் பயன் உடையதாகும்.

அடிக்குறிப்புகள் (Footnotes)

1. Catriona Picken (Ed.) The Translator's Handbook, p.96.
2. Reyold A. Nicholson, The Mystics of Islam, p.117.
3. Subramanian, A..V., The Squirrel in the Courtyard Introdution.
4. Seyyed Hossein Nasr, Sufi Essays, p.29.
5. Subramanian, A..V.op.cit.,p.32.
6. Nida, E. (Ed), The Bible Translator (Technical Papers), Vol.42, No.2A, p.14.

இயல் நான்கு

மொழி பெயர்ப்பு நிகரன்களின் சிக்கல்களும் அவற்றிற்கான காரணங்களும்

(The problems of equivalence in translation and its reasoning)

மொழிபெயர்ப்புச் சிக்கல்களையும் முறைகளையும் ஆராய்ந்த பீட்டர்ஹாட்சன் (வீழ்ந்த நிலையில்) மனிதன் இறைவனிடமிருந்து பெற்ற அன்புப் பரிசு மொழியாகும். இப்பரிசினால் தான் மனிதன் எல்லா உயிர்களிலும் மேலானவாகவும் வேறுபட்டவனாகவும் விளங்குகின்றான். 'மனித மொழியின் சிறப்புப் பணி இறைவழிபாடு' என்கிறார். இறை வழிபாட்டுக்குப் பயன்பட்ட ஒரு மொழியில் வழங்கிய இறைவணக்கச் செய்யுட்களை மற்றொரு மொழியில் பெயர்த்தளிப்பதில் பல சிக்கல்களை மொழிபெயர்ப்பாசிரியர்கள் எதிர் கொள்கின்றனர். இவண் மொழியின் பணி மாறாமலிருப்பினும் அதன் தன்மையும் மரபும் பண்பாடும் மாறியிருக்கின்றன.

மொழிபெயர்ப்புச் சிக்கல்களைத் திறனாய்வாளர்கள் பல வகைகளாகப் பகுத்துள்ளனர். மொழிபெயர்ப்பு, வரலாற்றுக் காலம், மொழிக்குடும்பம், பண்பாட்டுப் பின்னணி ஆகியவற்றுடன் தொடர்புள்ளது. ஒரே மொழிக் குடும்பத்துக்குள் செய்யப்படும் மொழிபெயர்ப்பில் சிக்கல் குறைவு என்பது பொதுவான நம்பிக்கை. ஆனால் இவ்வாறு வரையறுப்பதைக் காட்டிலும் சமய பண்பாட்டுத் தொடர்புடைய மொழிகளுக்கிடையே செய்யப்

படும் மொழிபெயர்ப்பில் சிக்கல்கள் குறைவு என வரையறுப்பது ஏற்புடையதாகும். ஏனெனில் மொழியியல் கூறுகளோடு கருத்துக் கூறுகள் (அ) நம்பிக்கை, பழக்க வழக்கங்கள் போன்றன ஒத்திருத் தலால் மொழிபெயர்ப்புச் சிக்கல் குறைவாகும் வாய்ப்புகள் உள்ளன.

பெரியபுராணம் எனப் போற்றப்பெறும் திருத்தொண்ட மாக்கதையை ஜி. வான்மீகநாதன் ஆங்கிலத்தில் உரையும் விடு நிலைப்பாவும் கலந்த மொழிபெயர்ப்பாக ஆக்கியுள்ளார். இம் மொழிபெயர்ப்பில் 'தோடுடைய செவியன்' (Totutaiya caviyam) என்ற செய்யுளின் ஆங்கில வடிவத்தைத் தமிழுடன் ஒப்பிட்டு ஆராய்வதே செல்நெறியாக அமைகிறது. மொழிபெயர்ப்பில் ஏற் பட்டுள்ள சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்களையும் இஃது ஆராய முயல்கிறது.

4.1.மூலமும் மொழிபெயர்ப்பும்
(Source language and translation)

''தோடுடைய செவியன் விடை
ஏறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி
பூசிஎன் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முன்னை நான்
பணிந்தேத்த அருள் செய்த
பீடுடைய பிரம்மபுரம் மேவிய
பெம்மான் இவனன்றே''

Behold him
with an ear having a plug of rolle palm leaf
pierced lobe
the Rider on the bull
the wearer of a pure white moon on his locks
the one smegred
with the hot ashes of the cremation ground
all over his body
the stealer of my heart
Him who is verily the Great Lord

Him who with His abode in Brahmapuram
of proud fame
bestowed grace on Brahma
seated on a multi-pelalled lotus
when he humbly adored him
on a day long go"

4.2. சிக்கல்கள் (Problems)

மேற்காணும் மொழிபெயர்ப்பில் ஏற்பட்டுள்ள சிக்கல் களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

அ. புறநிலைப் புதைநிலையமைப்பு மாற்றம்
(Changing the surface structure to deep structure)
ஆ. மொழிபெயர்ப்பு வேறுபாடு
(Difference in the Language structure)
இ. பண்பாடும் பழக்க வழக்கமும் மாறுபடுதல்
(Cultural and Habitual)
ஈ. செய்யுள் மொழியமைப்பும் செய்யுள் நயமும்
(Poetical Language)

வாக்கியத்தின் புறநிலையமைப்பை மொழிபெயர்ப்பின் புதைநிலை அமைப்பாக மாற்றுவது முதல் வகை; இரண்டாம் வகைத் தமிழ் கூட்டுநிலை (Agglutinative) மொழியாகவும், ஆங்கிலம் உள்சிதைவு (Inflexional)(ulcitaivu) மொழியாகவும் இருப் பதனால் ஏற்படும் சிக்கல்; மூன்றாம் வகை, கீழைநாட்டு மண் ணும் மரபும், மேலைநாட்டுப் பண்.பாடுகளிலிருந்தும் பழக்க வழக்கங்களிலிருந்தும் பெரும்பான்மையும் வேறுபட்டிருப்பது; நான்காம் வகை மூலமொழியான தமிழ் மொழியின் செய்யுள் மொழியை (Poetical language) (Ceyul mozhiyai) உருவாக்க இயலாததால் ஏற்படும் இடர்பாடுகள்.

தமிழ், சமஸ்கிருத மொழிகளின் செவ்வியல் இலக்கியங் களை ஒப்பிட்டு ஆராய்ந்த ஜி.எல்.ஹார்ட், தமிழ் செய்யுளைப் பற்றியும் தமிழ் மொழியைப் பற்றியும் கூறியிருப்பவை இவண் குறிப்பிடத்தக்கனவாகும். இவர் ‘குறிப்புப் பொருளைப் பயன் படுத்துவதற்கும் மேம்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சிறப்பாக

அமைந்திருப்பது தமிழ் மொழியே ஆகும் என்றும், பண்டைய இந்தோ ஆசிய மொழிகள் இவ்வாறில்லை என்றும், ஒரு தமிழ்ச் செய்யுள் ஆழங்காண முடியாத ஆறு போன்றது என்றும் கூறியுள் ளார். இக்கருத்துக்கள் தமிழிலுள்ள செய்யுள் மொழியின் செறிவை யும் தெளிவையும் புலப்படுத்துகின்றன.

4.2.1.புறநிலை புதை நிலை மாற்றம்

(Changing the Surface Structure to deep Structure)

மொழிபெயர்ப்புத் திறனாய்வாளர் நைடா மொழிபெயர்ப் பின் மூன்று செயல்முறைகளை விளக்குகிறார். அவை இலக்கணப் பகுப்பாய்வு, இடமாற்றம், மீட்டமைப்பு ஆகியன. இவற்றுள் முதல் நிலையான இலக்கணப் பகுப்பாய்வில் புறநிலை - புதை நிலை மாற்றம் இடம் பெறுகிறது. மூலமொழியின் புறநிலை வாக் கியங்களை மொழிபெயர்ப்பாசிரியர் புதைநிலை வாக்கியங்களாக மாற்ற வேண்டும். பின்னர் இரண்டாம் நிலையில் அவற்றை மொழிமாற்றம் செய்ய வேண்டும் என்பார். மூன்றாம் நிலையான மீட்டமைப்பு, பெறுமொழித் தன்மைக்கும் வாசகர்களுக்கும் ஏற்ப மொழி மாற்றம் செய்யப்பட்ட புதைநிலை வாக்கியங்களைப் புறநிலைக்கு மாற்றுகிறது.

‘தோடுடைய செவியன்’ செய்யுள் மொழிபெயர்ப்பில் ‘பீடுடைய பிரம்மபுரம் மேவிய பெம்மான்’என்ற வரி

Him Who is verily the Great Lord
Him who with His abode in Brahmapuram of Proud fame

என ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ‘பெருமை மிகுந்த பிரம்மபுரத்தின் உறைபவன் பெம்மான்’ என அமையும் இதுவே ஆங்கிலத்தில் the Great Lord's abode is the Brahmapuram என அமையும். புதை நிலையில் மேற்காணும் மூன்று சொற்களும் விரிவடைகின்றன. பெம்மான் என்பது அழுத்தமான தொனியில் (emphatic expression)

(Him who is) verily the Great Lord

என மாறியுள்ளது. மேவிய (maviya) 'abode' எனவும் 'பீடுடைய' Pitutaiya என்பது 'பெருமையுடைய' (Perumaiutaiya) என்ற பொருளில்

(Him who) with his abode (in Brahmauram) of Proud fame

எனவும் அமைந்துள்ளது. 'பிரம்மபுரம்' (Pirammapuram) ஒலி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. புதைநிலை வாக்கியங்கள் தெளி வானவையாகவும் முழுமையானவையுமாகும். எனவே வாக்கி யத்தை நிறைவாக்குவதற்காக 'Him who is' என்பவை சேர்க்கப்பட் டுள்ளன. is எனும் வினைச்சொல் இவ்வாக்கியங்களை முழுமை யடையச் செய்கின்றது.

ஆக செவ்வியல் தன்மையுடன் இலக்கிய நயத்துடன் செறிவாகவும் தெளிவாகவும் அமைந்த சொற்களை மட்டும் கொண்ட ஒரு செய்யுள் வரி ஆங்கிலத்தில் புதைநிலை வடிவத்தில் பதினேழு சொற்களைக் கொண்ட இரண்டு வாக்கியங்களாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழிபெயர்ப்புச் செயல் முறையில் நைடாவின் முதல் நிலையான இலக்கணப் பகுப்பாய் வும் (Grammatical analysis) இரண்டாம் நிலையான மொழிமாற்ற மும் (Transference) அமைந்துள்ளன. மீட்டமைப்பு நிலையில் மீண்டும் புறநிலை வடிவமாக மொழிபெயர்க்க ஆசிரியரால் இயலவில்லை.

4.2.2.மொழிபெயர்ப்பு வேறுபாடு

(Difference in the Languages Structure)

கூட்டுநிலை மொழியான தமிழில் முன்னொட்டுகள் பின் னொட்டுகள் இணையும் அமைப்பு காணப்படுகிறது. ஆனால் ஆங்கிலத்தில் இந்நிலை காணப்பெறவில்லை. Unusual uselessness போன்ற சில முன்னொட்டு, பின்னொட்டு முறைகள் காணப் பெற் றாலும் எதிர்மறை, சிறப்பு போன்ற சில பொருண்மைகளில் தவிரப் பிற எல்லா நிலைகளிலும் ஒட்டுச் சேரும் முறைகளைக் காண வியலாது. சான்றாக, 'தூவெண்மதி' என்ற தொடரின் மொழி பெயர்ப்பைக் கூறலாம். 'சிவபெருமான் தூய வெண்மையான சந்திரனைச் சூடியிருக்கிறார்'. இத்தொடர் நிலவினை விளங்கும் வருணனைத் தொடராகும். நிலவு 'மதி' எனக் குறிக்கப்பட்

டுள்ளது. அதன் தன்மைகளைத் தனித்தனிச் சொற்களால் விளக்காமல், பகுதிகள் முன்னொட்டுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. இச் சேர்க்கைக்கு இம்மொழியமைப்பு உதவுகிறது.

ஆங்கிலத்தில் தனித்தனிச் சொற்களாக 'தூ' (tu) 'வெண்' (van) ஆகிய இரண்டு அடைகளும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. தூ வெண் மதி சூடி (Tuvanmati suti) என்ற தொடர், the wearer of a pure white moon on his lock என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இம்மொழி பெயர்ப்பில் 'தூ (tu) என்பது (Pure) எனவும் 'வெண்' (van) என்பது White எனவும் அமைந்துள்ளன. 'மதி' (mati) Moon எனவும், 'சூடி'(suti) எனவும் அமைந்துள்ளன. இவற்றுடன் மொழி பெயர்ப்பாசிரியர் மதியைச் சூடியுள்ள உறுப்பு எது? என்ற வினாவிற்கும் ஆங்கிலத்தில் பதிலளித்துள்ளார். On his locks எனும் சடைமுடிகளில் மதி சூடியதனையும் இவர் விளக்கியுள்ளார். தனித்தனிச் சொற்களாகச் சேர்ந்து மூலநூற்செய்தியை மொழிபெயர்த்திருப்பதனால் மூலநூற்செறிவை மொழிபெயர்ப்பில் காண இயலவில்லை. சொற்களின் தொகுதிகள் நெகிழ்ச்சிப்போக்கு உடையனவாக உள்ளன.

4.2.3.பண்பாடும் பழக்கவழக்கங்களும்
(Cultural and Habitual Variations)

மொழியும் பண்பாடும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாமல் பிணைந்துள்ளன. கீழைப் பண்பாட்டில் காதணி ஒரு முக்கியப் பங்கினைப் பெற்றுள்ளது. மேலை நாட்டுப் பண்பாட்டில் காதணி அணியும் பழக்கம் பெரும்பான்மையும் காணப்பெறவில்லை. சைவ சமயம் இறைவனை அம்மையப்பனாகக் கொண்டு வழிபடுகிறது. ஞானசம்பந்தருக்கு இறைவன் அம்மையப்பர் உருவில் காட்சியளித்தனால் 'தோடுடைய செவி' (tootutaiya cavi) என்ற செய்தி செய்யுளில் முதற்கண் இடம் பெற்றுள்ளது. 'தோடு'(tootu) 'சுருள் தோடு' (surul tootu) என்றும் சொல்வார்கள். மிகவும் நுட்பமான பொருளையுடைய ஓங்காரத்தைத் தகர மெய்யோடு சார்த்தி, தோடு என்ற எழுத்தை முதலில் வைத்து 'தோடு' (tootu) எனத் தொடங்கினார் சம்பந்தர் என்று சேக்கிழார் கூறுகிறார்.

''எல்லையில்லா மறைமுதல் மெய்யுடன்
எடுத்த எழுதுமறை
மல்லல்நெடுந் தமிழால்இம் மாநிலத்தோர்க்
குரைசிறப்ப''

என்பது அவர் சொல்லும் விளக்கம்.

சைவ சமய அறிஞர்கள் 'தோடுடைய செவி' (tootutaiya cavi) எனக் கொண்டு ஞானசம்பந்தருக்கு உமையம்மை ஞானப் பால் ஊட்டியதனை உறுதிப்படுத்துவர். இத்தகு 'தோடுடைய செவி' (tootutaiya cavi)யை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் ஏற்படும் சிக்கல் சமயம், பண்பாடு மற்றும் பழக்க வழக்கங்களின் அடிப்படையில் ஏற்பட்டதாகும்.

தோடு (tootu) தமிழ்ப் பெண்கள் அணியும் காதணியாகும். இதனை ear ring என மொழிபெயர்ப்பது உலோகத்தினாலான காதணியைக் குறிக்கும். 'தோடு' (tootu)என்பதற்கு நிகரான சொல்லைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஏற்படும் சிக்கல் நீண்ட விளக்கத்தை அளிக்கக் காரணமாகவுள்ளது.

ஆங்கிலத்தில்,

"Plug of rolled palm leaf"

என்ற தொடர் 'தோடு' (tootu) என்பது பனையோலைச் சுருளாகும் என விளக்குகிறது. தமிழ்ப் பெண் மக்கள் காதுகளில் ஓலைச்சுருள் அணியும் மரபு 'தோடு'(tootu) என்ற சொல்லை உருவாக்கியுள்ளது. மரபியலில் தொல்காப்பியரும் 'தோடு'(tootu) இலையின் மறு பெயர் என்பதனை,

''தோடே மடலே ஓலை என்றா'
(தொல். பொருள்.652)

என்ற நூற்பாவில் விளக்கியுள்ளார்.

சமயமும் பண்பாடும் கொண்டுள்ள மரபுகளைப் புலப்ப படுத்தும் சொற்களையும் தொடர்களையும் மொழிபெயர்ப்பதில்

சிக்கல் ஏற்பட்டுள்ளது. சமயாசிரியர்கள் சைவசித்தாந்த விளக்கங்கள் அளிப்பதற்குத் தக்கச் சான்றாகத் திகழு ம் 'தோடு' (tootu) மொழிபெயர்ப்பாசிரியர் மொழிபெயர்ப்பதற்கு இடர்ப்பாடாக உள்ளது. இதனால் மொழிபெயர்ப்பாசிரியர் விளக்கமாக மொழிபெயர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இவ்விளக்கம் மூலத்திலிருக்கும் பண்பாட்டுத் தொடர்புடைய செய்தியை விரிவாகக் கூறுகிறது.

4.2.4.செய்யுள் மொழியமைப்பும் செய்யுள் நயமும் (Poetical Language)

மூலமொழியான தமிழில் செறிவுக்கேற்ற தொகை நிலை வழக்குகளுக்கு இடமுண்டு. இத்தொகைநிலைத் தொடர்கள் செய்தியைச் சுருக்கமாகக் கூறி விளங்க வைக்கின்றன. எளிமையாகவும் தெளிவாகவும் கருத்துக்களைப் புலப்படுத்த இவை உதவுகின்றன. ஆங்கிலத்தில் இவ் அமைப்பு இல்லை. 'உள்ளம் கவர் கள்வன்' எனும் தொடர் the stealer of (my) heart என மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. 'உள்ளங்கவர்' எனும் தொடர் the driver is one who drives' என்பது போல the stealer is one who steals என்ற அமைப்பில் உள்ளது. மூலத்தில் காணப்பெறும் 'கவர்' என்ற சொல்லின் ஏற்புடைய நிகரனாக steal அமையவில்லை. 'களவு' (kalavu), 'திருட்டு' (tirttu) ஆகியவற்றை 'steal' என மொழிபெயர்க்கலாம். beg borrow or steal என்ற ஆங்கில மரபுத்தொடர் ஒரு பொருள் இல்லாத போது அதனைப் பிச்சையெடு, கடன் வாங்கு (அ) திருடு என விளக்குகிறது. இம்முறையில் பிறர் பொருளைக் கள்ளத்தால் கொள்வதனை steal என மொழிபெயர்க்கலாம்.

'உள்ளத்தைக் கவர்தல்' (ullattai kavartal) என்பதில் இடம் பெறும் 'கவர்' எனும் சொல் மொழிபெயர்ப்பில் காணப்பெறவில்லை. மேலே விளக்கிய the stealer 'கள்வன்' (kalvan) என்பதன் நேரடி மொழிபெயர்ப்பு. சிவபெருமான் வெறும் கள்வனாக இருந்தால் the stealer ஏற்புடைய நிகரனாகக் கொள்ளலாம். மூலத்தின் காணப்பெறும் 'கவர் கள்வனை' (kavar kalvanai) ஆங்கிலத்தில் 'திருடன்' என மொழிபெயர்ப்பதனால் மூலத்தின் ஆழமும் செய்யுளில் பலமும் கிடைப்பதில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் தமிழில் கவிஞர் விளக்கும் செய்தியை மூன்று சொற்களும் பொருத்தமாகப் புலப்படுத்துகின்றன. இவை ஏற்றுள்ள தொகை நிலைத் தொடர் அமைப்பு தன்னையறியாமல் தன் உள்ளத்தைக்

கவர்ந்து சென்றவனைக் கள்வன் எனக் குறிக்க வாய்ப்பாக அமைந் துள்ளது. ஆங்கிலத்தில் கள்வனை மட்டுமே மொழிபெயர்க்க முடிந்தது. கவர் என்பதனை ஆசிரியர் விலக்கிவிட்டார். ஆனால் மூலநூலின் அழுத்தமும் நயமும் 'கவர்' (kavar) என்பதில் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். 'கவர் கள்வனை' (kavar kalvanai) மூலத்தின் தொனியிலும் நயத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்க இயலாமைக்கு முக்கிய காரணம், தமிழில் செய்யுள் மொழித்தன்மை ஆங்கிலத்தில் அமையாததேயாகும்.

4.2.பகவத்கீதை மொழிபெயர்ப்பு

(Translation of the Baghavath Geetha)

வடமொழியில் மகாபாரதத்தில் இடம் பெற்றதாக நம்பப் படும் 'பகவத்கீதை'யைத் தனிப்பட்ட புனித நூலாகப் போற்றும் மரபு பன்னெடுங்காலமாக இருந்து வருகிறது. இந்நூல் கண்ண பரமாத்மாவால் அருளிச் செய்யப்பட்டது என்பது மரபு வழியாக வந்த செய்தியாக எல்லோராலும் ஏற்றுக்கொண்ட ஒரு கருத்து. இது 'ஸ்ரீமத் பகவத் கீதை' என வடமொழியில் குறிப்பிடப்படுகிறது. இதனை நன்கு ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் 'கீதா' என்னும் வடசொல்லிற்குப் 'பாடப்படுவது' என்பது பொருள் என்றும், பாடப்படுவதற்காகப் பாராயணம் செய்யப்படுவதற்காக இயற்றப் பட்டதாகவும் கருதப்படுகிறது. 'இசையோடு பாடப்படும் இயல் புடையது' எனும் சொல்லினைப் 'பகவத்' எனும் அடையோடு இணைத்து நெடுங்காலமாக வழங்கி வருகின்றனர் என்பதும் கண்டறிந்த உண்மையாகும்.

பகவனால் அருளப்பட்ட திருநூல் என்பதைவிடப் புனித மான இசைப்பாடல்கலைக் கொண்ட திருநூல் என [illegible] ளிலேயே (Song celestial) பெரிதும் இந்நூல் போற்றப்பட்டு வரு கிறது. இதனால் கிருத்துவ நூற்றாண்டிற்கு மு [illegible] இந்நூல் எப்பெயரால் சுட்டப்பட்டது என்பதை அறிய இயல வில்லை. இது தமிழில் கிடைத்த 12 மொழிபெயர்ப்புகளையும், ஆங்கிலத்தில் கிடைத்த 27 மொழிபெயர்ப்புகளையும் முழுவது மாகப் படித்து, ஆராய்ச்சி செய்த பேராசிரியர் டாக்டர் க.த.திரு நாவுக்கரசு அவர்களின் கருத்தாகும்.

இதற்கு ஆதாரமாகக் காட்டுகின்ற பல்வேறு சான்றுகளில் 'குப்தர் காலத்தில் (கி.பி. 300-600) வைணவ சமயம், பாகவத சமயமாக வடஇந்தியாவில் சிறப்புலாயிற்று. அக்காலக்கட்டத் திலேயே 'பாரதம்' எனப்படும் இதிகாசத்தின் ஒரு பகுதியாக இருந்த இப்பாடல் தொகுதி, தனியாகப் பிரித்து எடுக்கப்பட்டுப் பிராமணர் அல்லாத மற்றவர் (பாகவதர்)கள் பக்தியோடு போற்றி ஓதும் மக்கள் திருமறையாகப் புதுவாழ்வு பெற்று இருக்க வேண் டும் என்பர்.

ஆராய்ச்சியில் கண்ட முடிவின்படி பாகவதர்களால் பாடப்பெற்ற 'பாகவதம்' (Pakavatham) சுருக்கமாக வடமொழியில் 'பகவத்' (Pakavat) என்பதால் 'பகவத்கீதை' எனும் தனிப்பெயரும் தனிச்சிறப்பும் பெற்றிருக்க வேண்டும் எனத் தோன்றுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாகச் 'சுருதியாகவும் (கேட்கப்படுவது) ஸ்மிருதியாகவும் (நினைக்கப்படுவது) உபநிட தமாகவும் (அருகில் இருந்து உரையாடுவது) மக்களால் போற்றப் படுகிறது. இந்நூலிற்குச் சங்கரர், இராமானுசர், மத்துவர் எனும் முப்பெரும் தத்துவஞானிகள் வடமொழியில் உரை விளக்கம் எழுதியுள்ளனர். பகவத் கீதை 18 அதிகாரங்களையும் 700 ஸ்லோ கங்களையும் உடையது.

4.2.1. மொழிபெயர்ப்பு (Translation)

பகவத் கீதைத் தமிழாக்க முயற்சியில் ஈடுபட்ட பெரியோர் களில் பெரும்பாலோர் அதன் கருத்துக்களைச் சுருக்கமாகவும், விளக்க உரையாகவும், கருத்துக்கோவையாகவும் வெளியிட்டிருக் கின்றனர்.

கி.பி.1786ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்நூலினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர். தமிழில் பாரதியார் மொழிபெயர்ப்பிற்கு முன்னர் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்பு கள் வருமாறு:-

மேற்கண்ட பதினான்கு மொழிபெயர்ப்புகளுள் இரண்டு ஸ்ரீபட்டர் அவர்களால் செய்யப்பட்டதாகும். ஆகையால் 13 மொழி பெயர்ப்பாளர்கள் இதனை மொழிபெயர்த்துள்ளனர் என்பது

வ. எண்.	ஆண்டு (அ) நூற்றாண்டு	மொழிபெயர்ப்பாளர்	நூலின் பெயர்	பதிப்பகம்
1.	பதினோராம் நூற்றாண்டு	ஆளவந்தார்	கீதார்த்த சங்கிரகம்	சென்னை, 1872
2.	பதின்மூன்றாம் நூற்றாண்டு	ஸ்ரீ பட்டர்	பகவத் கீதை (விருத்தம்)	ஸ்ரீரங்கம், 1886
3.	பதினான்காம் நூற்றாண்டு	வாதிகேசரி அழகிய மணவாள சீயர்	பகவத்கீதா வியாக்கியானம்	கும்பகோணம் 1982
4.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	நாகநாத பாண்டியர்	பகவத்கீதை	திருச்சி, 1854
5.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	பதினான்காம் நூற்றாண்டின் வித்தியாதரணியின் தமிழாக்கம் (பெயர் தெரியவில்லை)	கீதாதாத்பரியம்	சென்னை, 1873
6.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	திருவாமத்தூர் திருவேங்கடநாதர்	கீதாசாரத் தாலாட்டு	மனோன்மணி விலாச அச்சுக்கூடம் சென்னை

வ. எண்.	ஆண்டு (அ) நூற்றாண்டு	மொழிபெயர்ப்பாளர்	நூலின் பெயர்	பதிப்பகம்
7.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	கரிசாங்கால் சீனிவாசாச்சாரியார்	பகவத்கீதை தமிழ் உரையுடன்	சென்னை, 1878
8.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	ச. இராமசாமிப் பிள்ளை	கீதாசாரத் தாலாட்டு	சென்னை, 1886
9.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	புத்தூர் சவரி நாயக்கர்	கீதபோதகம்	சென்னை, 1892
10.	பத்தொன்பதாம் நூற்றாண்டு	வீரராகவாசாரியார்	கீதார்த்த சங்கிரக வியாக்கியானம்	திருச்சி, 1894
11.	இருபதாம் நூற்றாண்டு	பூவை கலியாணசுந்தர முதலியார்	பகவத் கீதை கீர்த்த பங்கம்	சென்னை, 1902
12.	இருபதாம் நூற்றாண்டு	முத்து ஐயர்	பகவத்கீதை வெண்பா	சென்னை, 1973
13.	இருபதாம் நூற்றாண்டு	—	கீதார்த்த சங்கிரக பாட்டுக்கள்	சென்னை, 1937
14.	இருபதாம் நூற்றாண்டு	முள்ளங்குடி நாராயண சுவாமிகள் (பதி.)	கீதாத்திரையம் (பட்டர் பொழி)	சென்னை, 1938

தெளிவாகிறது. பட்டியல் வரிசையிலுள்ள *10, 13* ஆகியவை கீதையின் முழு மொழிபெயர்ப்புகள் அல்ல சுருக்கங்களே (சங்கிரகம்) ஆகும். பகவத்கீதையின் மூலக் கருத்துக்களைப் பிழிந்து எடுத்துச் சாரமாகத் தமிழில் தருவனவாக இவை உள்ளன. மற்றும் இரண்டு *(6, 8)* தாலாட்டுப் பாடல் வடிவில் கீதையின் சாரத்தை எடுத்துரைப்பன. ஒன்று, பட்டரின் தமிழாக்க முயற்சிகளில் *(1,3,6,8,10,13)* கீதையின் கருத்துக்களைச் சுருக்கியும், பிழிந்தும், விளக்கியும் தமிழில் தருவனவாக உள்ளன.

மக்களின் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்துள்ள மொழிபெயர்ப்பு இல்லாத வாழ்க்கையினைக் கற்பனை செய்வது சிரமமானது. இத்தகைய மொழிபெயர்ப்பானது தொடக்கக் காலத்தில் பிறமொழியிலுள்ள வளங்களைத் தாய்மொழிக்குக் கொண்டு வரவேண்டுமென்ற மொழிபெயர்ப்பாளர்களின் அக்கறையினால் தோன்றியது. இப்படித்தான் மொழிபெயர்ப்பு வேண்டுமென்ற கோட்பாடுகள் இல்லாத நிலைதான் பன்னெடுங்காலம் நிலவியது. எனினும், சில மொழிபெயர்ப்பாளர்கள் மொழிபெயர்ப்பில் ஈடுபட்டபோது தாங்கள் எதிர்கொண்ட அனுபவங்களைப் பதிவு செய்துள்ளனர். அவை மொழிபெயர்ப்பாளர் தனது பணியில் எதிர்கொண்ட முக்கியமான சிக்கல்களையும் சவால்களையும் பதிவாக்கியுள்ளன. ஊடகங்களின் வளர்ச்சியுடன் ஆவணங்களின் பிரம்மாண்டமான வெளியீடுகளும் அதிகரித்த நிலையில் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் பல்கிப் பெருகியுள்ளன. இருவேறு மொழிகளுக்கிடையில் நடைபெறும் மொழிபெயர்ப்பில் முரண்பாடுகளைக் களைந்து, மூலமொழி நூலை அப்படியே பெறுமொழிக்குக் கொண்டு வரும் முயற்சியில் ஏற்படும் சிக்கல்களைச் சரியாக இனங்காண வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

4.3. மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் சவால்கள் (Expecting challenges to the translator)

மூலமொழி ஆசிரியருக்கு ஏற்படாத பெரும் பிரச்சினைகள் மொழிபெயர்ப்பாளருக்கு ஏற்படுகின்றன. மொழிபெயர்ப்பு சரியாகவும் துல்லியமாகவும் அமைய வேண்டுமென மொழிபெயர்ப்பாளர் முனைந்திடும் போது தோன்றும் சிக்கல்கள் அளவற்றவை, மொழிபெயர்ப்பாளர் தன்னுடைய பணியில் கவனத்

துடன் செயல்பட வேண்டிய தேவையினை மொழிபெயர்ப்புச் சிக்கல்கள் வலியுறுத்துகின்றன.

மொழிபெயர்ப்பாளர் மூல நூலினைத் தேர்ந்தெடுப்பதில் சிக்கல் தோன்றுகிறது. இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் பின்னைக் காலனித்துவ ஆதிக்கம் காரணமாக ஆங்கில நூல்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மொழிபெயர்ப்பிற்கான நூல் தேர் வில் நுண் அரசியல் ஆதிக்கம் செலுத்துகின்றது. மொழிபெயர்ப் பாளரின் அசலான தேர்வு என்பது மிகக் குறைவாக உள்ளது. அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பதிப்பகங்கள் போன்ற வற்றின் தேவை காரணமாகப் பெரும்பாலான படைப்புகள் தேர்ந் தெடுக்கப்படுகின்றன. எனினும் குறிக்கோள் நோக்கமுடைய மொழிபெயர்ப்பாளர்கள் தங்களுடைய கருத்தியலுக்குச் சார்பான நூல்களைத் தாய் மொழியில் மொழிபெயர்ப்பதில் அக்கறை கொள் கின்றனர். இத்தகைய போக்கு மொழிபெயர்ப்பாளரின் சமூக ஈடுபாட்டின் விளைவாகும்.

4.4. சுற்று மொழிபெயர்ப்பு (Round Translation)

இன்று உலகமெங்கும் பல்வேறு மொழிகளில் படைப்பு களும் ஆவணங்களும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எனினும் ஆங்கிலம், ரசியன், பிரெஞ்சு, சீனம், ஜப்பான், ஜெர்மன், ஸ்பானி போன்ற மொழிகளில் முக்கியமான ஆய்வுகள் வெளி யிடப்படுகின்றன. ஒரு தேர்ந்த மொழிபெயர்ப்பாளரால் பல மொழிகளைக் கற்று நேர்மொழிபெயர்ப்பில் இன்னொரு மொழிக் குப் பெயர்த்திடல் சிரமமானது. பொதுவாக ஒரு நூல், மூலமொழி வாசிப்பில் தரும் அனுபவத்தினையும் உணர்வினையும் இன் னொரு மொழியில் தருவதில்லை. இந்நிலையில் ஒரு மொழியி லிருந்து இன்னொரு மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட பிரதியி லிருந்து மீண்டும் ஒரு மொழிக்குப் பெயர்த்திடும் போது சிக்கல்கள் எழுகின்றன. கருத்துச் சிதைவும் பொருள் மாறுபாடும் திகழ்வதற் கான சாத்தியப்பாடுகள் அதிகம் உள்ளன. இச்சிக்கலைத் தவிர்த்திட மொழிபெயர்ப்பாளர் மூலத்திலிருந்து நேரடியாக மொழிபெயர்த் தலே சிறப்பானது என்ற கருத்து மொழியியலாளரால் வலியுறுத்தப் படுகிறது.

திருக்குறள் சுமார் முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இத்தகைய மொழிபெயர்ப்புகள் அனைத்தும் தமிழிலிருந்து நேரடியாகச் செய்யப்பட்டிருக்க வாய்ப் பில்லை. பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் தமிழ், ஆங்கிலம், வேறுமொழி என்ற ரீதியில் நடைபெற்றிருக்க வேண்டும். இச்சுற்று மொழிபெயர்ப்பில் மொழிபெயர்ப்பாளர் எவ்வளவு தான் முயன் றாலும் திருக்குறளின் பொருள் ஆழத்தினையும் கவிதைச் சிறப் பினையும் ஆங்கிலத்தின் மூலம் தன்னுடைய தாய்மொழியில் கொண்டுவருதல் இயலாது. இது மொழிபெயர்ப்பாளர் புறநிலை யில் மொழிபெயர்ப்பில் எதிர் கொள்ளும் சிக்கல்.

4.5. மொழிபெயர்ப்பு நிகரன்களில் சிக்கல்களின் பின்புலம் (The problems and its background in equivalence)

தொடக்கக் காலத்தில் மொழிபெயர்ப்பில் மூலநூலின் கருத்தினுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அதே நேரத்தில் மூல மொழியில் இடம் பெற்றிருந்த சந்தம், சிலேடை, முரண் போன்ற கவிதையியல் கூறுகளைப் பெறுமொழிக்குக் கொண்டுவரும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இன்று வடிவம், நடை ஆகியவற்றுக்குப் பெரிய அளவில் முக்கியத்துவம் இல்லை. மூலமொழியில் மூலநூல் ஏற்படுத்திய உணர்வுகளும், அனுபவங் களும் தாக்கங்களும் அப்படியே பெறுமொழி வாசகர்கள் அடைய வேண்டுமென்ற நோக்குடன் இன்றைய மொழிபெயர்ப்பாளர்கள் செயற்படுகின்றனர். எனவே மொழிபெயர்ப்பு என்பது தொழில் நுட்ப ரீதியில் இருமொழிகளுக்கிடையில் நடைபெறும் கருத்துப் பரிமாற்றம் என்ற கருத்து வலுப்படுகின்றது. இந்நிலையில் மொழி பெயர்ப்பாளர் மூலநூலுடன் தொடர்புடைய பல்வேறு கூறுகளை யும் கணக்கிலெடுக்க வேண்டிய தேவையேற்படுகிறது. மூலநூல் என்பது சமுதாயத்துடனும் தனிநபருடனும் கொண்டுள்ள உறவு களின் விளைவான பிரதி என்ற நிலையில், மொழிபெயர்ப் பாளரின் மொழி அறிவு போதாத நிலையேற்படுகிறது. சமுதாயப் பண்பாட்டு உறவுகளைச் சரியாக இனங்காணும் நிலையிலே துல்லியமான மொழிபெயர்ப்பினைச் செய்திடவியலும். மொழி என்ற தகவல் பரிமாற்றக் கருவியின் பன்முக அம்சங்களும் மொழி பெயர்ப்புச் சிக்கல்களைத் துரிதப்படுத்துகின்றன.

4.6. மொழியின் தனித்தன்மைகள் (Individuality of language)

மனிதன் தன்னுடைய நினைவுகளையும் அனுபவங்களையும் பிறரிடம் பகிர்ந்து கொள்வதில் மொழியானது முக்கியமான இடம் வகிக்கின்றது. மனிதனைச் சமுதாயத்துடனும், அவன் வாழும் நிலத்துடனும் பிணைப்பதே மொழிதான். எப்பொழுதோ நடைபெற்ற சம்பவங்களின் நினைவாக மொழி இருப்பதனால், வரலாற்றை மனிதன் மீது சுமத்துவதன் மூலம் சமுதாயத்தின் இடையறாத இயக்கத்தினைச் சாத்தியப்படுத்துகிறது. சான்றாகத் தமிழ் மொழியானது தமிழ் நிலம் என்ற புகழினை வரையறுக்கின்றது. எனவே மொழியின் வழியே விரியும் அதிகாரம் மக்களை அடையாளப்படுத்தி ஆட்சி செலுத்துகிறது. வரலாற்று அடிப்படையில் மனிதர்களுக்கும், மொழிக்குமிடையிலான உறவு பன்முகத் தன்மையுடையது.

ஒவ்வொரு மொழியும் அதற்கெனத் தனித்தன்மையினை ஏதேனும் ஒரு வகையில் பெற்றுள்ளது. அது பிறமொழிகளில் காணவியலாத அம்சமாகும். ஒரு மொழியின் தனித்தன்மையானது சொல்லாக்கம், தொடரமைப்பு, சொல்லாடலை வெளிப்படுத்தும் முறை, நாட்டார் வழக்காறுகள் போன்றவற்றில் சிறப்பாக வெளிப்படுகின்றன. எல்லா மொழிகளும் அம்மொழியைப் பேசுகின்ற மக்களின் சமுதாய அமைப்பினுக்கும் பண்பாட்டு நெறிகளுக்கும் ஏற்ற வகையில் போதுமான சொற்களைக் கொண்டுள்ளன. இந்நிலையில் சொற்களஞ்சிய அடிப்படையில் மொழிகளுக்கிடையில் ஏற்றத்தாழ்வினைக் கருதுதல் தவறானது. சங்கக் கவிதைகள் தொடங்கித் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் யாப்பு இலக்கண வளர்ச்சி, ஒப்பீட்டளவில் பிற மொழிகளில் காணப்படாத தனிச்சிறப்புடையது. எனவே தமிழ் மொழி பிற மொழிகளில் காணப்படாத தனிச்சிறப்புடையது. எனவே தமிழ் மொழி பிற மொழிகளைவிட மேன்மையானது என்று கருதுவது ஏற்புடையதல்ல.

4.7. மொழியின் தனித்தன்மைகளும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும் (The individuality of language and its translating problems)

பொதுவான தொன்மையான மொழிகளைச் சிறப்புடையனவாகக் கருதும் போக்கும் உள்ளது. ஆங்கிலம், பிரெஞ்ச் போன்ற மொழிகள் காலனியாக்கத்தின் விளைவாக இன்று அனைத்துலக மொழியாக ஏற்கப்பட்டுள்ளது. அதனால் அம் மொழிகளில் தகவல்கள் பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. இன்னொரு புறம் மிகச் சிறிய நிலப் பரப்பில் வழக்கிலிருக்கும் ஆசிய, ஆப்பிரிக்க மொழிகளும் எண்ணிக்கையில் பெருமளவில் உள்ளன. இத்தகைய மொழிகளை ஆங்கிலத்துடன் ஒப்பிட்டுத் தாழ்வாகக் கருதும் போக்கு நடைமுறையில் உள்ளது. சிறந்த மொழிபெயர்ப்பாளர் மொழிகள் குறித்த இத்தகைய கருத்துக்களைப் புறம் தள்ளிவிடவேண்டும். மூலமொழி மிகவும் வளமானது; பெறுமொழி சொல் வளமற்றது' என்று கருதுவது மொழிபெயர்ப்பில் நெறிக்கு முரணானது. பெறுமொழியின் சிறப்புகளைப் புரிந்துகொண்டு அம்மொழியின் வளத்தினுக்கேற்ப மொழிபெயர்ப்பினை மேற்கொண்டால் மொழிபெயர்ப்பு இயல்பாகவே சிறப்பு மிக்கதாகிவிடும்.

4.8. தொடரமைப்புகள் (Row setting)

மூலமொழிக்கும் பெறுமொழிக்குமிடையில் தொடரமைப்பில் வேறுபாடுகள் இருப்பது இயல்பானது. மேலும் ஒரு விதமான தொடரமைப்பினைப் பெற்றிருப்பது மூலமொழியின் தனிச்சிறப்பான தன்மையாக இருக்கலாம். இத்தகைய தொடரமைப்பு பெறுமொழியில் இல்லையே என்று மொழிபெயர்ப்பாளர் புலம்புவதற்குப் பதிலாகப் பெறுமொழியின் தொடரமைப்பினுக்கு ஏற்றவகையில் மொழிபெயர்ப்பில் ஈடுபடவேண்டும்.

எ.கா. செயப்பாட்டு வினை வாக்கியங்கள் திராவிட மொழிகளுக்குப் புதியன என்றாலும் மொழிபெயர்ப்பின் வழியே அவை அறிமுகமாயின. இந்நிலையில் தமிழ் மொழி செயப்பாட்டு

வினை வாக்கியங்களை ஏற்றுக் கொண்டது. கன்னட மொழியில் மிகக் குறைந்த அளவிலேயே செயப்பாட்டு வினைகள் பயன் படுத்தப்படுகின்றன. இத்தகைய சூழலில் பெறுமொழியின் மீது புதிய தொடரமைப்புகளைத் திணிப்பதற்க மொழிபெயர்ப்பாளர் முயலக்கூடாது. அதற்குப் பதிலாக, அவ்வமைப்பு முறையினை மாற்றியமைத்துப் பெறுமொழியின் தொடரமைப்பு முறைக் கேற்பத் தொடரமைப்புகளை உருவாக்கிட வேண்டும். தொடர மைப்புச்சிக்கலை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் மொழிபெயர்ப் பாளரால் சிறந்த மொழிபெயர்ப்பு ஆக்கங்களைத் தரவியலும்.

4.9. பண்பாட்டு இடைவெளிகள் (Cultural space)

மூலமொழி பேசும் மக்களுடன் இயைந்து போன பழக்க வழக்கங்கள் பெறுமொழி பேசும் மக்களுக்கு முற்றிலும் அந்நிய மாக இருக்கலாம். இத்தகைய பண்பாட்டு இடைவெளிகள் மொழி பெயர்ப்பில் சிக்கலை ஏற்படுத்துகின்றன. தமிழில் 'சங்கு ஊதிட் டாங்க' (sanku uthittanntaka)என்று சொன்னால் 'யாரோ இறந்து விட்டார்' என்று பொருள். இதே தொடரினை நேர்ப்பொருளில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் குழப்பம்தான் மிஞ்சும். மொழி பெயர்ப்பில் மூலத்திலிருந்து முற்றிலும் விலகி வேறு பொரு ளினைத் தரும்.

யூதர்கள் கோபம் மிகுந்திடும் போது தாங்கள் உடுத்தியிருக் கும் ஆடையைக் கிழித்துக் கொள்வது வழக்கம். இதைக் குறிக்க The high Priest rent his garment என்று குறியீட்டுச் சொல்லாகச் சொல் வதும் எழுதுவதும் அவர்களிடையே நடை முறையில் உள்ளது. இவ்வழக்கத்தினை அறியாத பிறமொழியினர் நிச்சயம் குழம்பிக் கொள்ள வாய்ப்புண்டு. ஒரு வேளை அவனுக்கு மனப்பிறழ்வு ஏற்பட்டிருக்கும். அதனால் தான் ஆடையைக் கிழிக்கிறான் என்று கருத இடமுண்டு. இத்தகைய பண்பாட்டு வேறுபாடுகள் ஒவ் வொரு மொழியிலும் நூற்றுக்கணக்கில் உண்டு. மொழிபெயர்ப் பாளர் பண்பாட்டு இடைவெளிகளில் ஏற்படும் சிக்கல்களைக் கவ னத்தில் கொள்ளும்போது சரியான மொழிபெயர்ப்பினைத் தர முடியும்.

4.10. தனிநபர் உறவுமுறைச் சிக்கல்கள் (Problems of individuality in reletionship)

மொழியானது, குறிப்பிட்ட மொழி பேசும் மக்களிடையே நிலவும் உறவுமுறை (அ) தொடர்பினை வெளிப்படுத்துகிறது. இருவர் உரையாடும் உரையாடல் மூலம் அவ்விருவரும் எந்தப் பின்புலத்திலிருந்து வந்தவர்கள் என்பதனைப் புரிந்து கொள்ள வியலும்.

வயது, வருமானம், சாதி, மதம் போன்றனவற்றுடன் உற்பத்தி உறவு முறைகளும் 'நீ-நீங்கள்' என்று முன்னிலை இடப் பெயர் வழங்குவதனைத் தீர்மானிக்கன்றன. ஆண்டான்-அடிமை, பண்ணையார்-பண்ணைக்காரன், முதலாளி-தொழிலாளி போன்ற உற்பத்தியுடன் தொடர்புடையவர்களிடமும் நீ - நீங்கள் என்ற பேதம் வலுவாக நிலவுகிறது. ஆங்கிலத்தைப் பொறுத்தவரையில் யாரை வேண்டுமானாலும் You என்ற சொல்லின் மூலம் அமைக் கலாம். தமிழில் You என்ற சொல்லை மொழிபெயர்க்கும் போது மூலநூலின் பின்புலத்தைச் சரியாக புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியமாகும்.

4.11.குடும்ப உறவு பெயர்ச் சிக்கல்கள் (Problems of family names)

குடும்பம் என்ற கருத்தியல் நாடுகள் தோறும் வெவ்வேறு வடிவங்களில் செயற்படுகின்றது. சில மொழிகளில் குடும்ப உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட உறவுப் பெயர் கள் இருக்கும். சில மொழிகளில் ஒப்பீட்டளவில் உறவுப் பெயர் கள் மிகக் குறைவாக இருக்கும். இத்தகைய மொழிகளுக்கிடையில் மொழிபெயர்ப்பு செய்திடும் மொழிபெயர்ப்பாளர் பண்பாட்டு ரீதியில் புதிய சிக்கல்களை எதிர்கொள்கின்றனர்.

ஆங்கிலத்தில் உள்ள sister என்ற சொல் தமிழில் சகோதரி என்று குறிப்பிடப்படுகிறது. எனினும் அக்கா, தங்கை என்று வயது அடிப்படையில் தனித்தனி உறவுமுறைப் பெயரில் அழைப்பது ஆங்கில மரபினுக்குப் பொருந்தி வரவில்லை.

Aunt என்ற ஆங்கிலச் சொல் தமிழில் அத்தை, பெரியம்மா, சித்தி ஆகிய மூவரையும் குறிக்கும். அது போல Uncle என்ற ஆங்கிலச் சொல் தமிழில் மாமா, சித்தப்பா, பெரியப்பா ஆகிய மூவரையும் குறிக்கும். எனவே இத்தகைய சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்கும் போது சூழலை அறிந்து பயன்படுத்த வேண்டும். ஆனால் சிலவேளை மூலநூலில் அண்ணனா? தம்பியா? என்று வேறுபாட்டினைக் கண்டறிய முடியாத போது மொழி பெயர்ப்பாளர் சிக்கலுக்குள்ளாகிறார். பொதுவாக உறவுமுறைச் சொற்கள் மொழிபெயர்ப்பில் ஆங்கிலம் தமிழ் மொழிபெயர்ப் புடன் ஒப்பிட, தமிழ் ஆங்கிலம் மொழிபெயர்ப்புச் சிக்கல் இல்லாதது.

சில மொழிகளில் உறவுமுறைப் பெயர்களில் சிறப்புச் சொற்கள் இன்னும் கிளைவிட்டு இடம் பெறுகின்றன. அகுவாருணா என்ற மொழியில் ஓர் ஆண் மகனின் சகோதரனுக்கு ஒரு பெயர் (Yatsus), ஓர் பெண்மகளின் சகோதரிக்கு ஒரு பெயர் (Rais). ஆணின் சகோதரிக்கும் பெண்ணின் சகோதரனுக்கும் ஒரு பெயர் (Ugab) என்று குறிப்பிடுவது வழக்கிலுள்ளது.

தமிழிலும், ஆங்கிலத்திலும் பெற்ற பிள்ளைகளைக் குறிக்கும் மகன், மகள், Son, Daughter போன்ற உறவுமுறைச் சொற்களைப் பெற்ற பிள்ளைகள் இல்லாதவரையும் அன்புடன் அழைக்கப் பயன்படுத்தும் வழக்கு உள்ளது.

எ.கா. மகனே, மன அமைதி கொள்.
மகளே, உனக்குச் சமாதானம் கிடைப்பதாக
Son, Go in peace
Daughter, be of comfort

ஆனால் சில மொழிகளில் உறவுமுறைச் சொற்களைப் பெற்ற பிள்ளைகளைக் குறிக்க மட்டுமே பயன்படுத்த முடியும். இத்தகைய மொழிகளுக்கு மொழிபெயர்க்கும்போது மொழி பெயர்ப்பாளர் உறவுமுறைப் பெயர்களைக் கையாளுவதில் சிக்கலை எதிர் கொள்கின்றார்.

4.12. மரியாதை வழக்குகள் (Terms of Respectory)

சமூக அடுக்கில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பிறப்பின் அடிப்படையிலும் பொருளியல் அடிப்படையிலும் பேதம் பார்க்கும் மக்களிடையே மரியாதை வழங்கும் சொற்கள் முக்கியமானவை. சமநிலையில் (Status) இருப்போரிடையே ஒரு வழக்கும் கீழ்நிலையில் இருப்போரிடம் இன்னொரு வழக்கும் என்று இருவேறு வழக்குகளைப் பின்பற்றுவது சில மொழிகளில் கறாராக உள்ளது. தொல்காப்பியம் ''ஈ, தா, கொடு'' என்ற மூன்று சொற்களை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதனைச் சமூக மரியாதையின் அடிப்படையில் விளக்கியுள்ளது. இன்றையத் தமிழில் நீ, நீங்கள், தாங்கள், அவர், அவர்கள், அவள், அது போன்ற சொற்கள் ஆணையோ, பெண்ணையோ குறிக்க வழங்கினாலும் அச்சொற்களின் பயன்பாட்டில் சமூக மரியாதை பொதிந்துள்ளது. ஆங்கிலத்திலிருந்து You, she, he போன்ற சொற்களைத் தமிழாக்கும்போது மொழிபெயர்ப்பாளர் சிக்கல்களை எதிர்கொள்கின்றார். ஆங்கிலத்தில் என்ன சூழலில் இத்தகைய சொற்களைப் பயன்படுத்துகின்றனர் என்பதனைக் கண்டறிந்து அதற்கு இணையானச் சொற்களைத் தமிழில் பயன்படுத்தும் போது மொழிபெயர்ப்பு செம்மையடையும்.

ஆங்கிலத்தில் சிறுவன் வந்தான் என்பதனைக் குறிக்க He came என்பர். அது போல நாட்டின் குடியரசுத் தலைவர் என்பதனைக் குறிக்கவும் He came என்பதனைப் பயன்படுத்துகின்றார். இத்தகைய சொற்களை மொழிபெயர்க்கும் போது அவன் வந்தான் அவர் வந்தார் என்று சூழல் அறிந்து பயன்படுத்தவேண்டியது மொழிபெயர்ப்பாளரின் கடமையாகும். சிறுவன் வந்தார் குடியரசுத் தலைவர் வந்தான் என்று மொழிபெயர்ப்பது சமூக மரியாதையை மீறிய நிலையில் தமிழ்ச் சொற்றொடர் அமைப்பில் கேலிக்கு இடம் தருவதாகிவிடும்.

சில பண்டைய பிரதிகளை இன்றைய மொழியில் மொழிபெயர்க்கும் போது மொழிபெயர்ப்பாளர் மூலமொழியிலிருந்து மரியாதை வழக்கினைப் பின்பற்ற வேண்டிய நிலையேற்படுகின்றது. இயேசு வாழ்ந்த காலத்தில் அவர் மத குருக்களாலும் மன்னராலும் உயர் வழக்குச் சொற்களால் அழைத்திருக்க வேண்டும். ஆனால் இன்று உலகமெங்கும் வாழும் கோடிக்கணக்கான

மக்களின் கடவுளாக இயேசு உயர்நிலை அடைந்து விட்டார். எனவே இன்று விவிலியம் மொழிபெயர்க்கப்படும் பல மொழிகளில் இயேசுவைக் குறிக்கும் இடங்களில் உயர்வழக்குச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. இல்லையெனின் அம்மொழிபெயர்ப்பு பெறுமொழி மக்களிடையே முரண்பாட்டினைத் தோற்றுவிப்பதுடன் புறக்கணிப்பதற்கு உள்ளாக நேரிடும்.

4.13. மொழிபெயர்ப்பு மொழியியல் நிகரன்களில் சிக்கல்கள் (The problems of translating linguistic equivalence)

மொழியானது காலந்தோறும் வடிவம் மற்றும் பொருள் கொள்ளும் நிலையில் மாறிக் கொண்டேயிருக்கின்றது. இலக்கண நூல்கள், ஒரு கால கட்டத்தில் வழங்கப்படும் மொழியிலிருந்து தொகுக்கப்பட்ட இலக்கண விதிகளின் தொகுப்பு எனினும், அவை எல்லாக் காலத்துக்கும் பொருந்துவதில்லை. மேலும் அந்த இலக்கண விதிகள் தொகுக்கப்பட்ட காலகட்டத்திலேயே இலக்கண ஆசிரியரின் தேர்வு காரணமாக வேறுபட்ட சூழல்களில் வாழ்ந்திடும் விளிம்பு நிலை மக்கள் பேசும் மொழிக்கூறுகள் பொது விதிக்குள் வராதிருக்க வாய்ப்புள்ளது. மொழியின் இத்தகைய முடிவற்ற தன்மையானது, மொழிபெயர்ப்பில் சிக்கல்களை உருவாக்கிடும் அடித்தளமாக அமைகின்றது. ஒரு மொழியின் பொருள் உணர்த்தும் தன்மையில் இடம், காலம், சூழல், வரலாற்றுப் பின்புலம், பண்பாட்டுப் பின்புலம், நிகழ்த்துநர், கேட்போர் போன்ற புறக்காரணிகள் பெரிய அளவில் ஆதிக்கம் செலுத்துகின்றன. அறிவியல், தொழில் நுட்ப மொழிபெயர்ப்புகளில் கூட வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் தாக்கம் உள்ளன. எனினும் மொழியில் செயற்படும் கூறுகள் மொழியியல் அடிப்படையில் மொழிபெயர்ப்பில் சிக்கல்களை ஏற்படுத்தகின்றன. சிறந்த மொழிபெயர்ப்பாளர் மூலமொழி, பெறுமொழி ஆகிய இரு மொழிகளும் செயல்படும் விதம் பற்றிய அறிவுடன் மொழிபெயர்ப்பில் ஈடுபடும் போது சிறப்பாகச் செயற்பட முடியும்.

4.13.1. வாக்கிய அமைப்பு முறை (Sentence structure method)

ஒவ்வொரு மொழிக்கும் அம்மொழிக்கே உரிய வாக்கிய அமைப்பு முறை உள்ளது. மொழிபெயர்ப்பாளர் இத்தகைய

மொழிகளுக்கிடையில் மொழிபெயர்ப்பில் ஈடுபடும் போது வாக்கிய அமைப்பானது சிக்கலை ஏற்படுத்துகின்றது. தமிழ் வாக்கிய u,n,H,a,c,O,E,(S) செயப்படு பொருள்(O), பயனிலை (V) என்ற வரிசை முறையும், ஆங்கில வாக்கிய அமைப்பில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்ற முறையும் பின்பற்றப்படு கின்றன. இந்நிலையில் மொழிபெயர்ப்பாளர் பொருத்தமான முறையில் இடமாற்றம் செய்ய வேண்டியுள்ளது.

எ.கா. Sneka read a book
சிநேகா புத்தகத்தைப் படித்தாள்
Cinaka puttakathai patittaal

4.13.2. சொற்பொருள் வேற்றுமை (Objective case)

சில பெயர்ச்சொற்கள் ஒருமையில் ஒரு பொருளும், பன்மையில் வேறுபொருளும் தரும் வகையில் ஆங்கிலத்தில் உள்ளன. இத்தகைய சொற்களை மொழிபெயர்க்கும்போது மொழி பெயர்ப்பாளர் கவனத்துடன் செயல்படவேண்டும். இல்லாவிடில் கருத்துப்பிழை ஏற்பட வழியேற்படும்.

எ.கா Force ஆற்றல் (aatral) Forces படை (patai)
Iron இரும்பு (irumpu) Iron விலங்கு (Vilanku)

இவ்வழக்குத் தமிழில் இல்லை.

சில பெயர்ச்சொற்கள் ஆங்கிலத்தில் பன்மையில் வழங்கப்படுகின்றன. அச்சொற்கள் தமிழ் மொழிபெயர்ப்பில் ஒருமையில் பெயர்க்கப்படுகின்றன.

எ.கா. Scissors கத்திரிக்கோல் (kattarikkool)
Troussers காற்சட்டை (Kaarcattai)

செய்வினை - செயப்பாட்டு வினை

ஆங்கில மொழியில் செயப்பாட்டு வினை வழக்கு அதிகம். தமிழில் அவை வருமெனினும் தமிழ் மரபினுக்கேற்பச் செய்வினை வழக்குகளாக மாற்றுவதே சிறப்பானது.

எ.கா. Kavitha was asked many questions by the teacher
கவிதா ஆசிரியரால் பல கேள்விகள் கேட்கப்பட்டாள்
ஆசிரியர் கவிதாவிடம் பல கேள்விகள் கேட்டார்

இம்மொழிபெயர்ப்புகளில் இரண்டாவதாக இடம் பெற்றுள்ளது பொருத்தமாக உள்ளது.

4.13.3. சார்புப் பிரதிப்பெயர்கள் (Relative pronoun)

ஆங்கிலத்தில் Who, Whom, Whose போன்ற சார்புப் பிரதிப் பெயர்களின் பயன்பாடு பெரிய அளவில் வழக்கிலுள்ளது. அவற்றைப் பயன்படுத்தி நீண்ட வாக்கியங்கள் ஆங்கிலத்தில் கட்டமைக்கப்படுகின்றன. இத்தகைய வாக்கிய அமைப்பு தமிழில் இல்லை. இந்நிலையில் மொழிபெயர்ப்பாளர் ஆங்கில வாக்கியத்தினுக்கு ஏற்பப் பொருத்தமான தமிழ் வாக்கியத்தினை அமைத்துக் கருத்தைப் புலப்படுத்திட வேண்டும்.

எ.கா. This is a house which was built by my mother
இந்த வீடானது என் தாயாரினால் கட்டப்பட்டது
intha veetaanatu ean tayaarinal kattappattatu
என் தாயார் கட்டிய வீடு
an taayaar kattiya veetu

மேற்குறித்த இவ்விரு மொழிபெயர்ப்புகளும் இலக்கண அடிப்படையில் சரியானவைதான். எனினும் தமிழ் மரபினுக்கேற்ற வகையில் ஒப்பிட்டு ஆராய்ந்தால் 'என் தாயார் கட்டிய வீடு' என்ற வாக்கியம்தான் ஏற்புடையது.

4.13.4. வினைகள் (Verbs)

காலவினைகள், தன்வினை - பிறவினை போன்றவற்றைப் பயன்படுத்துவதில் மொழிபெயர்ப்பாளர் சிக்கல்களை எதிர் கொள்கின்றார். வினைகளைக் கையாளும் போது தமிழ் மொழியமைப்பினுக்கேற்ப மொழிபெயர்ப்பாளர் செயற்படவேண்டியது அவசியமாகும்.

4.13.5.உம்மை வழக்கு (Realitye case)

தமிழில் இத்தனை என்று அளவு வரையறுக்கப்பட்ட முதல், சினைச் சொற்களுக்கு உம்மை தந்து வழங்க வேண்டும்.

எ.கா. மூன்று பேரும் moontru perum
காதுகள் இரண்டும் kaathukal irantum

இவை ஆங்கில மொழிபெயர்ப்பில் அம்மொழிக்கெனத் தனிப்பட்ட சொல் பெற்றுவரும். அவை,

All the three
Both the Ears

ஏற்கனவே மக்களிடம் வழக்கிலிருக்கும் மெய்மையைப் (Fact) பற்றிக் குறிப்பிடும் போதும் உம்மைச் சேர்த்துக் குறிப்பிடுவது தமிழ் வழக்கு.

எ.கா. கதிரவன் ஒரு போதும் மேற்கில் உதிப்பதில்லை.

இவ்வாக்கியம் ஆங்கிலத்தில் The sun never rises in the west என்று வரும்.

4.13.6. ஒப்பீடு (Comparision)

இருவேறு சம்பவங்களை ஒப்பிடவும், பொருள்களின் தன்மைகளை ஒப்பிடவும், தமிழில் போல, காட்டிலும், ஏ, போன்ற வடிவங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆங்கிலத்தில் er, est போன்ற கட்டுருபன்களும் as than, more, much, most போன்ற சொற்களும் பயன்படுத்தப்படுகின்றன. மொழிபெயர்ப்பாளர் இத்தகைய ஒப்பீட்டு வாக்கியங்களை மொழிபெயர்க்கும் போது மொழியின் மரபினுக்கேற்ற சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

எ.கா.

(i) என் ஆசிரியரைப் போல என் நண்பனும் நல்லவன்
My friend is as good as my teacher

(ii) பிச்சை எடுப்பதைக் காட்டிலும் பட்டினி கிடப்பது போல
It is better to starve than beg
pichai atupatai kattilum pattini kitapatu mal

(iii) திருக்குறள் மிகவும் பயனுள்ள புத்தகம்
Tirukkural is the most valuable book

4.13.7.உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

தமிழில் 'நாம்' என்பது எதிரில் உள்ளவரையும் சேர்த்துப் பன்மையில் குறிக்கும் சொல். 'நாங்கள்' என்பது எதிரில் உள்ள வரை உளப்படுத்தாத தன்மைப் பன்மைச் சொல், நாம், நாங்கள் ஆகிய இரு சொற்களையும் குறிக்க ஆங்கிலத்தில் We என்ற சொல் மட்டும் உள்ளது. எனவே We என ஆங்கிலச் சொல்லைத் தமிழாக் கும்போது, சூழல் அறிந்து நாம் என்றோ நாங்கள் என்றோ பதிலீடு செய்ய வேண்டும்.

4.13.8. இணை வழுவமைதி

(Collocation) (Inai valuvamaiti)

சொற்கள் இணைந்து வந்து பொருள் தருவதில் மொழிகள் தோறும் வேறுபாடுகள் உள்ளன. சில இணைகள் பெருவழக்காக வருகின்றன. சில இணைகள் மிக அருகிலேயே வழங்குகின்றன. சில இணைகள் ஒன்றிணைவதே இல்லை. பொதுவாகச் சொற்கள் சில சொற்களுடன் மிகுதியும் சேர்ந்துவரும் வழக்கினைச் சொற் களின் இணைவமைதி என்று குறிப்பர். தாய்மொழியில் பேசும் போதும் எழுதும் போதும் சொற்களின் பொருத்தமான இணை களைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துவது மிக எளிதான செய லாகும். ஆனால் தாய்மொழி அல்லாத வேற்றுமொழியில் பொருத்தமான இணையைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் தேவை. எனவே மொழிபெயர்ப்பாளர் இணையைத் தேர்வு செய்வதில் பிசகினால் மொழிபெயர்ப்பு தவறான பொருளினைத் தருவதாகி விடும்.

தமிழில் குட்டி, குஞ்சு, பிஞ்சு என்ற சொற்கள் இளையவை என்ற பொருளில் வரும். எனினும் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். சான்றாக,

கோழிக் குஞ்சு	Koozhikk kunsu
மாங்காய்ப் பிஞ்சு	Maangaai pinsu
குருவிக் குஞ்சு	Kuruvikunsu
மிளகாய்ப் பிஞ்சு	milakaai pinsu
வெள்ளரிக்காய்ப் பிஞ்சு	vellarikkai pinsu
பூனைக் குட்டி	poonai kutti
சிங்கக் குட்டி	singa kutti
யானைக் குட்டி	yanai kutti
பன்றிக் குட்டி	pantri kutti
கத்தரிக்காய்ப் பிஞ்சு	katharikkaai pinsu

மேற்குறிப்பிட்ட தொடர்புகளை கோழிக் குட்டி, யானை குஞ்சு என்று வழங்குவது வழுவாகிவிடும். எனவே ஆங்கிலத்தி லிருந்து தமிழாக்கும் போது இணைச்சொல் தேர்ந்தெடுப்பில் மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் சிக்கலைத் தவிர்த்திடத் தமிழ் மொழியின் மரபினை அறிந்திருப்பது அவசியமாகும்.

ஆங்கிலத்தில்

Head of the table
Foot of the tree

என்பவை வழக்கு

ஆனால்

Head of the tree
Foot of the table

என்பவை வழக்கல்ல.

பொதுவாக மொழியின் வரம்பினுக்குள் எந்தப் பெயர் எந்த வினையைக் கொண்டு முடிய வேண்டும் என்ற வரன்முறை உண்டு. சில இடங்களில் அம்முறை மீறப்படுவதும் உண்டு.

சட்டையைப் பிடுங்கினான் cattaiyai pitunkinaan

கண்ணாடியைப் பிடுங்கினான் போன்ற இணைகள் பொருத்தமாகவும், ஏற்புடையவையாகவும் உள்ளன. ஆனால், மிளகாய், கீரையைப் பிடுங்கினான். கடலைப் பிடுங்கினான்,

மலையைப் பிடுங்கினான் போன்ற இணைகள் வழுவாக உள்ளன. எனவே மொழிபெயர்ப்பாளர் பிடுங்கினான் (pitunkinaan) என்ற இணையை எல்லா வினை களுக்கும் பொருத்துவது பிழையாகி விடும். அதே நேரத்தில் 'வாயைப் பிடுங்கினான்' (Vaaiyai pitunkinaan) என்பது ஒருவரிடம் பேச்சுக் கொடுத்து அவர் அறியா மல் தகவலை அவரிடமிருந்து பெறுவது என்ற பொருளைத் தரு கின்றது. எனவே இது சிறப்பு வழக்காகிறது.

மொழிபெயர்ப்பாளர் மூலமொழி, பெறுமொழியிலுள்ள இணைவழுவமைதிகள் பற்றித் துல்லியமாக அறிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் இணைகள் பொருத்தமற்று நகைப்பிற்கு இடம் தரும் வகையில் பெறுமொழியில் வெளிப்பட வாய்ப்பு உண்டாகும்.

4.13.8. வடிவம் ஏற்படுத்தும் சிக்கல்கள் (Problems of figures)

வரி வடிவத்தை ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு ஒலிபெயர்ப்பு வடிவில் மொழிபெயர்க்கும் போது பல்வேறு சிக்கல்கள் தோன்றுகின்றன. பொதுவாக இடங்கள், பெயர்கள், அறிவியல் கருவிகள் போன்றவற்றை மூலமொழிச் சொல்லின் ஒலியமைப்பில் பெறுமொழியின் ஒலி மரபுகளைக் கருத்தில் கொண்டு மொழிபெயர்ப்பதுதான் ஏற்புடையது. தொல் காப்பியர் வடமொழி என்று அழைக்கப்படும் சமஸ்கிருத மொழிச் சொற்களைத் தமிழாக்கும்போது,

> "வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
> எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே"

என்ற விதியினை முன்வைக்கின்றார். ஆனால் காலப்போக்கில் தொல்காப்பியரின் விதியானது மீறப்பட்டு விட்டது. இது குறித்துத் தமிழறிஞர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் குறிக்க ஸ, ஜ, ஹ, ஷ, ஸ்ரீ போன்ற கிரந்த எழுத்துக்களைப் பயன்படுத்துவது பொது வழக்காகி விட்டது. இது குறித்துத் தமிழறிஞர்களிடையே வாதப் பிரதிவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

4.14.1. ஒலிபெயர்ப்பின் வகைகள் (Types of phonetic)

தமிழ் இலக்கண நூல்கள் குறிப்பிடும் 'தற்சமயம்', 'தற்பவம்' ஆகியவற்றை இன்றைய மொழியியலாளர் 'தன்ஒலி ஆக்கம்' (tan voli aakkam), 'ஒப்பொலியாக்கம்' (oppoliyaakkam) என்று குறிப்பிடுகின்றனர்.

4.12.2. தன் ஒலி ஆக்கம்
(Phonemic creativity) (tan voli aakkam)

மூலமொழிக்கும் பெறுமொழிக்கும் பொதுவாக உள்ள ஒலிகளைக் கொண்டு சொற்களைப் பெயர்த்து எழுதுதல் தன் ஒலி ஆக்கம் எனப்படுகின்றது.

எ.கா.	Cell	செல்
	Ameba	அமீகா
	Radar	ரேடர்
	Radio	ரேடியோ
	Plasma	பிளாஸ்மா

4.14.3. ஒப்பொலியாக்கம்
(Phonemic Version) (oppoliyaakkam)

மூலமொழியிலுள்ள சொற்களைப் பெறுமொழியின் இயல்புக்கேற்பத் திருத்தியும் மாற்றியும் அமைத்து எழுதுதல் ஒப்பொலியாக்கம் எனப்படுகின்றது.

எ.கா.	Shakespeare	ஷேக்ஸ்பியர்
	Focus	ஃபோகஸ்
	Flask	பிளாஸ்கு

4.14.4. ஒலிபெயர்க்க வேண்டாத சொற்கள்
(Untransable phonemic words)

மொழிபெயர்ப்பாளர் பொதுவாக மூலமொழிச் சொல்லுக்கு நிகரானன பெறுமொழிச் சொல்லை உருவாக்கிடுதல் மொழிபெயர்ப்பு ஆக்கத்தில் பெரிதும் விரும்பப்படுகிறது.

எனினும் எல்லாச் சொற்களையும் மொழிபெயர்க்கத் தேவையில்லாத நிலையும் உள்ளது. எனவே எத்தகைய சொற்களை மொழிபெயர்க்காமல் அப்படியே ஒலி வடிவில் பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து மொழிபெயர்ப்பாளர் நிச்சயம் அறிந்திருக்க வேண்டும். அறிவியல் உலகில் உலகமெங்கும் பொதுவாகப் பயன்படுத்தும் வகையில் ஏற்படுத்தப்பட்ட குறியீடுகளால் உருவான சொற்களை அப்படியே அதே வடிவில் பயன்படுத்த வேண்டும்.

4.14.5. குறியீடுகள் (Symbols)

அறிவியல், தொழில் நுட்பத் துறையில் ஏராளமான குறியீடுகளைப் பயன்படுத்துகின்றன. கணிதத்தில் Square root என்பதற்கு என்ற குறியீடும் integration என்பதற்கு S என்ற குறியீடும் வழக்கிலுள்ளன. மேலும் கிரேக்க எழுத்துக்களான α, β போன்றனவும் அறிவியலாளரால் வழங்கப்படுகின்றன. Velocityஎன்பதற்கு V என்ற எழுத்தும் Acceleration due to gravity என்பதற்கு g என்ற எழுத்தும் வழக்கிலுள்ளன. இவை போன்ற குறியீடுகளை அப்படியே ஒலிபெயர்க்காமல் பயன்படுத்த வேண்டும்.

4.14.6. ஒலிபெயர்க்க வேண்டிய சொற்கள் (Transable phonemic words)

அறிவியலில் பயன்படுத்தப்படும் அளவைகள் முதலெழுத்துக்கள் நிலை பெற்றுவிட்ட பெயர்ச்சொற்கள் போன்றவற்றை மொழிபெயர்க்கும் போது ஒலிவடிவில் தருவது ஏற்புடையது.

4.14.7. அளவைகள் (Measuring)

அறிவியல் உலகமானது, அளவைகளுடன் நெருங்கிய தொடர்புடையது. பல அளவைகள் அவற்றைக் கண்டறிந்த அறிவியலாளர் பெயருடன் தொடர்புடையனவாகக் குறிப்பிடப்படுகின்றன.

ஆம்பியர் (Ampere), ஓம் (Ohm) என்று மின்துறையில் பயன்படும் அளவைகளை ஒலிவடிவில் பெயர்ப்பதே பொருத்தமானது.

பாரன்ஹீட், செல்சியஸ், கெல்வின் போன்ற அளவைகளையும் ஒலிவடிவில் தமிழாக்குவதே ஏற்புடையது.

4.14.8. முதலெழுத்துக்கள் (Capital letters)

அறிவியலில் சில சொற்கள், அப்பொருட்பெயரின் முதலெழுத்துக்களின் ஆனவை, அவற்றை மொழிபெயர்ப்பது தேவையற்றது. எனவே ஒலி வடிவில் பெயர்க்க வேண்டும்.

எ.கா. ராடர் Radar - Radop Detecting and Ranging
லேச Laser - Light Amilification by Stimulating Emission of Radiation

4.14.9. நிலைபெற்றுவிட்ட பெயர்ச்சொற்கள் (Standardised nouns)

மொழிபெயர்ப்பில் சொல்லாக்கம் முக்கியம் இடம் பெறுகின்றது. எனினும் மக்களிடம் பல்லாண்டுகளாக வழக்கிலிருந்து நிலைபெற்றுவிட்ட பெயர்ச்சொற்களுக்குச் சிரமப்பட்டுப் புதிய சொற்களை உருவாக்குதல் தேவையற்றது. ஏற்கனவே வழக்கிலிருக்கும் பிறமொழிச் சொல்வினை ஒலிபெயர்ப்பு வடிவில் பயன்படுத்துவதே ஏற்புடையது.

எ.கா.

சன்னல், மேசை, சிமிண்டு, பெட்ரோல், பெயிண்ட், பிரஸ், ஸ்விட், பேக், மிசின், ஃபேன், கிரைண்டர், சைக்கிள்

4.15. தமிழர் சூழலில் மொழிபெயர்ப்பு நிகரனின் இன்றையத் தேவை (Importance of equivalence among)

இலட்சிய நிலை எட்டப்படுகிறதோ இல்லையோ மொழிபெயர்ப்பின் பங்களிப்பில்லாமல் இன்று எந்த ஒரு மனிதக் கூட்டமும் வாழ முடியாது. இயல்பான பன்மொழிச் சூழல்களில் மட்டுமின்றி, புலப் பெயர்வினாலும் பிற எழுத்துக்களாலும் உலகெங்கும் பரந்து சென்று வருவதினால் நேரும் பன்மொழிச் சூழல்களிலும் தோய்ந்து வாழ வேண்டிய தேவைகள் வர வர அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. தொழில்களின் பொருட்டும் கல்வியின்

பொருட்டும் பிறமொழியாளர் மத்தியில் பழக வேண்டியோராய் நாம் உள்ளோம். இதற்கிடையில் நம்மவர் வாழ்க்கையிலே தமிழ் மொழியின் இடம் பற்றியும் , ஆட்சியுரிமை பற்றியும் கேள்விகள் பல சொந்த மண்ணிலே கூட எழுப்பப்படுகின்றன. ஏன் 'தமிழ் நாடு' என்று பெயர் சூட்டிக் கொண்டுள்ள சென்னை மாநிலத்தே கூடத் தமிழ் புறக்கணிக்கப்படுகின்றது. மிகச்சிறு வயது தொடக் கமே தமிழ்க் குழந்தைகள் தமிழைத் துறந்தவிடுமாறு தூண்டப் படுகிறார்கள். நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். தமிழர் தமிழினை எவ்வளவு இழந்து விடுகிறார்களோ அவ்வளவுக்கு அவர்தம் செல்வம், செல்வாக்கு, வாழ்க்கைத்தரம், அதிகார மேன்மை அனைத்தும் உயர்வடையும் என்ற மாயை கட்டி எழுப்பப்படு கிறது. தமிழர் தமது சொந்த வரலாறு முழுவதையுமே தூக்கிவீசி விட்டால், சோலியே இருக்காது என்னும் எண்ணம் மேலும் வளர்க் கப்படுகிறது. ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளவர்களின் கொள்கை முழக்கங்கள் எப்படி எப்படியெல்லாம் இருந்த போதிலும், தமிழர் பண்பாட்டின் விழுமியக் கூறுகள் உட்பட, நம் முழுச்சொத்து முழு வதையுமே மதிப்பிறக்கம் செய்து, சமூகம் முழுவதையுமே கையா லாகாத பிறவிகளின் கும்பலாக்கும் திசையிலே நாம் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு காலத்திலே தாய்மொழி மூலமான கல்வியினை ஆர்வ வேகத்துடன் முழுமூச்சாக முன்னெடுத்த இலங்கையிலே இன்று சிங்கள வழிக் கல்வியும் தமிழ் வழிக் கல்வியும் புறக்கணிக்கப்படு கின்றன. காலனி ஆதிக்க காலத்தில் இருந்தது போல, உயர்கல்வி முழுவதையுமே மீண்டும் ஆங்கிலேய மயமாக்கும் பின்னடிப்பு முயற்சிகள் வளர்ந்து வருகின்றன. மேற்கு நாட்டு மருத்துவக் கல்வியினையே தமிழ் மூலம் ஊட்ட முடியும் என்று துணிந்து முயன்ற அமெரிக்க அறிஞர் முனைவர் சாம்யுவெல் ஃவிஸ்க் (Dr. Samuel Fist Gren) அவர்கள், யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையில் கி.பி.*1848*ஆம் ஆண்டிலேயே தமிழ் மூல மருத்துவக் கல்வியினைத் தொடங்கி நடத்திக் காட்டினார். இதைப் பலர் மறந்திருக்கலாம். இலங்கைப் பல்கலைக்கழகத்து மூதவையிலே (Senate) தாய்மொழி மூலமான உயர்கல்வியின் சாத்தியப் பாட்டையும் அவசியப் பாட்டையும் வற்புறுத்தி, வலியுறுத்தி வாதாடியவர்கள் யார்? அணு விஞ்ஞானியாகிய பேராசிரியர் ஆ.வ.மயில்வாகனம், மருத் துவப் பீடாதிபதியாகவிருந்த பேராசிரியர் அ.சின்னத்தம்பி, கணித

மேதை பேராசிரியர் சி.ஜே. எலி யேசர் ஆகிய பெரியோர்கள்தான் என்பதும் நினைவுகூரத்தக்கது. அக்காலத்துச் சிங்களப் பேராசிரியர் கள் பலர் உட்பட, துறைசார் அறிஞர் பலரின் எதிர்ப்புகளுக்கெல் லாம் பதில் வாதங்களை முன் வைத்து, தாய்மொழி வாயிலான உயர்கல்விக்கு வித்திட்டுத் தொடங்கி வைத்தார்கள் இந்தப் பெரிய வர்கள். இதனைத் தொடர்ந்து இலங்கைப் பல்கலைக்கழகமும், பின்னர், அப்பல் கலைக்கழகத்தின் வளாகங்களும் தாய்மொழி வழி உயர்கல்வியை எடுத்தமை வரலாறு. இதற்கு உதவியாக, இலங்கை அரசும் மொழித்திணைக்களத்தின் வெளியீட்டுப் பிரிவும், பின்னர்க் கல்வி வெளியீட்டுத் திணைக்களமும் ஏராள மான உயர்கல்வி நூல்களை மொழிபெயர்த்தும் இயற்றுவித்தும் வெளியிட்டு, தாய்மொழி வழி உயர்கல்வியினை நிலைநாட்டிய தும் வரலாறுதான்.

இவற்றை ஒத்த பணிகள் சென்னை மாநிலத்திலும் நடந் தேறி உள்ளன. அங்கும், அநேகமாக, ஆட்சிப் பொறுப்பெற்ற அரசு கள் யாவும் தமிழ் வழி உயர்கல்விக்குப் பக்கத்துணையாய் நின்று உரம் சேர்த்துள்ளன. எனினும் அண்மைக்காலப் போக்குகள், தமிழ் வழி உயர்கல்வியின் எதிர் காலம் பற்றி நல்ல சகுனங்களைக் காட்டுவனவாய் இல்லை.

4.16. முடிவுரை (Conclusion)

இவற்றால் முழுமையான மொழிபெயர்ப்பு என்னும் நிலையில் *(2,4,5,6,9,12,14)* வகையான பகவத்கீதை மொழி பெயர்ப்புகள் பாதிக்காது முன்னர்த் தமிழில் தோன்றியுள்ளன என்று புலனாகிறது. இவை யாவும் செய்யுள் வடிவில் அமைந் தவையே. *(2,4,5,7,9,11,12,)*யாகும். பாவிளக்கங்களாலும், இம் மொழிபெயர்ப்புகள் இயற்றப்பட்டுள்ளன. எனவே சுப்பிரமணிய பாரதியாரின் பகவத்கீதைத் தமிழாக்கம் தமிழில் தோன்றுவதற்கு முன்பு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இருந்த கீதையின் தமிழாக் கம் அனைத்தும் செய்யுள் வடிவில் புலவர்களுக்கும் கற்றோருக்கு மட்டும் புரியும் வகையில் இயற்றப்பட்டனவாக இருந்தன.

தற்பொழுது 'National Translation Mission' என்ற அமைப்பினை உருவாக்கி இதற்கு மத்திய அரசு நூறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் தொடக்கமாக தமிழ்ப் பல்கலைக்

கழகத்தில் Caring for the என்ற அறிவியல் பாடநூல் 1976ல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியான நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இந்த நாளில் தமிழ் அறிஞர்களும் கடமையை உணர்ந்து நிலையான மொழிபெயர்ப்புகளைச் செய்வார்களானால் தமிழ் இலக்கியங்களும், அறிவியல் நூல்களும், பிற நூல்களும் வளம்பெற்றுத் தமிழ் மக்களும் அவர் வழியாகப் பரந்த உலகமும் நன்மை பெற வழி பிறக்கும்.

அ. செய்யுள் மொழிபெயர்ப்பில் மொழியியல் சிக்கல்களும் பண்பாட்டுச் சிக்கல்களும் ஏற்படுகின்றன. மொழியியல் சிக்கல்கள் செய்யுளின் புறவடிவத்தைப் புதைநிலை வடிவமாக மாற்றியமைக்கின்றன. இதனால் மொழிபெயர்ப்பில் உரைநடைத் தன்மை மிகுந்து விடுகிறது.

ஆ. மொழிபெயர்ப்பில் இடம் பெறும் இரு மொழிகளும் வெவ்வேறு இயல்பினவாயின் மூலத்தின் வடிவத்தையும் நயத்தையும் மொழிபெயர்ப்பில் செய்வதியலாது.

இ. பண்பாடும் சமயமும் வேறுபட்டவையாயிருக்கும் சூழலில் முற்றிலும் புதிய (அ) அயன்மைச் செய்தியொன்றினை மொழிபெயர்க்கும்போது மொழிபெயர்ப்பில் விளக்க நடை இடம் பெறுகின்றது. இந்நடை செறிவையும் சுவையையும் பாதிக்கிறது.

ஈ. இலக்கண அமைப்பும் புலப்பாட்டுத் திறனும் செய்யுள் மொழியைச் சிறப்படையச் செய்கின்றன. இவற்றில் ஏற்படும் சிக்கல்கள் தவிர்க்க முடியாதவையாகும்.

அடிக்குறிப்புகள் (Foot notes)

1. Peter Hobson, Philosophy, Literature and Fine Arts, p.71
2. Chandrasekar Patil, Literary Translation, p.170
3. Peter Hobson, p.77
4. G.L. Hart, The Poems of Ancient Tamil, p.27
5. Ibid., p.27
6. Eugene Nida, Language, Structure and Translation, p.88.

முடிவுரை

(Conclusion)

மொழிபெயர்ப்பின் வரலாறு என்பதில் மொழிபெயர்ப்பின் வகைகளில் (அ), மொழியாக்கம், (ஆ) பொதுமக்கள் ஆர்வ மொழிபெயர்ப்பு, (இ) தழுவல், மொழிபெயர்ப்பாளர்களின் தகுதிகள், பெயர்ப்புக்காக நடத்தப்படும் பயிற்சிகள் போன்றவையும் இயல் ஒன்றிலும்,

மொழிபெயர்ப்பு நிகரன்கள், மொழிபெயர்ப்புக் கொள்கைகள், மொழிபெயர்ப்பு நிகரன்களும் அதன் வகைகளும், வாசகரை மையங்கொண்ட மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பில் எதற்கு முதலிடம் அளித்தல் வேண்டும். சூழல் சார்ந்த மொழி பெயர்ப்பு, ஆற்றல்மிகு நிகர்மை, மொழிபெயர்ப்பின் முப்பணிகள், வாசகரது மொழி, நிலையான நிகரன்கள், நிகரன்களின் கொள்கைகளும் அவற்றின் வகைகளும் மற்றும் மொழிபெயர்ப்பில் பொருத்தமான நிகரன்களை தேர்வு செய்தலும் அவற்றின் அணுகுமுறைகளும் இயல் இரண்டிலும்,

மொழிபெயர்ப்பின் குறைகள், நிறைகள் அவற்றின் மூலக் கருத்தை மாற்றுதல், உள்ளன நீக்கலும் இல்லன சேர்த்தலும், கோட்பாட்டுக் கருத்துக்களை நீக்குதல், கலைநயக் கூறுகளை நீக்குதல், பண்பாட்டுத் தகவலை நீக்குதல், இல்லன சேர்த்தல், கருத்து விலகல், ஏற்ப மாற்றுதல், புதுமையாக்கம் மற்றும் அவற்றில் (அ) அடைமொழிகள் சேர்த்தல், (ஆ) விளக்கி கூறுதல், (இ) திரும்பக் கூறுதல், பிற உத்திகள் மற்றும் முடிவுரை என்பன இயல் மூன்றிலும்,

மொழிபெயர்ப்பு நிகரன்களின் சிக்கல்களும் அவற்றிற் கான காரணங்களும், மூலமும் மொழிபெயர்ப்பும் அவற்றின் சிக்கல்கள் (அ) புறநிலைப் புதைநிலை மாற்றம், (ஆ) மொழி பெயர்ப்பு வேறுபாடு (இ) பண்பாடும் பழக்க வழக்கங்களும், (ஈ) செய்யுள் மொழியமைப்பும் செய்யுள் நயமும் மற்றும் பகவத் கீதை மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பு, மொழிபெயர்ப்பாளர் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் சுற்று மொழிபெயர்ப்பு, மொழி பெயர்ப்பு நிகரன்களில் சிக்கல்களின் பின்புலம், மொழியின் தனித் தன்மைகள், மொழியின் தனித்தன்மைகளும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களும், தொடரமைப்புகள், பண்பாட்டு இடைவெளிகள், தனிநபர் உறவுமுறைச் சிக்கல்கள், குடும்ப உறவு பெயர்ச் சிக்கல் கள், மரியாதை வழக்குகள், மொழிபெயர்ப்பு மொழியியல் நிகரன் களில் சிக்கல்கள், வாக்கிய அமைப்பு முறை, சொற்பொருள் வேற் றுமை, சார்புப் பிரதிப் பெயர்கள் மற்றும் வினைகள், உம்மை வழக்கு, ஒப்பீடு, உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, இணை வழுவமைதி, ஒலிபெயர்ப்பின் வகைகள்.

அ. தன் ஒலி ஆக்கம், ஆ.ஒப்பொலியாக்கம், இ. ஒலி பெயர்க்க வேண்டாத சொற்கள், ஈ. குறியீடுகள், உ. ஒலிபெயர்க்க வேண்டிய சொற்கள், ஊ. அளவைகள், எ. முதலெழுத்துக்கள், ஏ. நிலை பெற்றுவிட்ட பெயர்ச்சொற்கள், தமிழர் சூழலில் மொழி பெயர்ப்பு நிகரனின் இன்றைய தேவை, முடிவுரை, போன்றவை இயல் நான்கிலும் கூறப்படுகின்றன. இறுதியாக முடிவுரையில்,

0.1. மொழிபெயர்ப்பின் வரலாறு அவற்றின் தோற்ற நிலைகள், வளர்ச்சிகள், 20ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வளர்ச்சிப் பாதையில் செல்கின்றன.

0.2. மொழிபெயர்ப்பு நிகரன்களின் மொத்தம் பத்து (10) வகைகளும் அவற்றின் கொள்கைகளையும் ஆராயப் பட்டதில் மொழிபெயர்ப்பாளர்களும், திறனாய் வாளர்களும் தத்தம் கண்ணோட்டத்திற்கேற்பப் பல வாக வகைப்படுத்தி உள்ளனர். இவ்வகையில் பாட நிகரன், சொல்நிகரன், மொழியியல் நிகரன் போன் றன ஒரு நிலையிலும், இயக்க நிகரன், நடைநிகரன் சொற்படிவ நிகரன் போன்றவை மறுநிலையிலும்

அமைகின்றன. இவ்விரு நிலைகளில் தம்முள் கலந்து வருவது உண்டெனினும் இப்பாகுபாடு நிகரன்களின் வேறுபாட்டு இயல்புகளைப் புலப்படுத்த உதவும். இந்நிலையில் ஏற்புடைய நிகரனை இனங்காட்டுவது திறனாய்வாளரின் சமூகக் கடமையாகும். நிகரன் வகைகளும் கொள்கைகளும் விரிவடைந்திருப்பது மொழிபெயர்ப்புத் திறனாய்வாளரின் சமூகப் பொறுப்புணர்ச்சியையும் திறனாய்வுத் துறையின் வளர்ச்சியையும் புலப்படுத்துகிறது.

0.3. மொழிபெயர்ப்பின் மூலநூற் கருத்தை முற்றிலுமாகப் பிறழ உணர வாய்ப்பளித்தலும் கருத்து விலகலும் சரியெனக் கொள்வதற்கு இடமில்லை. இவை மூலநூலாசிரியரின் படைப்பு நோக்கத்தைச் சிதறடித்து விடும். மொழிபெயர்ப்பின் நம்பகத் தன்மையைச் சிதைத்துவிடும். எனவே இத்தவறுகள் இடம் பெறாத வகையில் ஒரு மொழிபெயர்ப்பை அமைப்பதுதான் பயன் உடையதாகும் என்பதை மொழிபெயர்ப்பின் குறைகள் நிறைகள் என்னும் பகுதி உணர்த்துகின்றது.

0.4. செய்யுள் மொழிபெயர்ப்பில் மொழியியல் சிக்கல்களும், பண்பாட்டுச் சிக்கல்களும் ஏற்படுகின்றன. மொழியியல் சிக்கல்கள் செய்யுளின் புறவடிவத்தைப் புதைநிலை வடிவமாக மாற்றியமைக்கின்றன. இதனால் மொழிபெயர்ப்பில் உரைநடைத் தன்மை மிகுந்து விடுகிறது.

0.4.1. மொழிபெயர்ப்பில் இடம்பெறும் இரு மொழிகளும் வெவ்வேறு இயல்பினவாயின் மூலத்தின் வடிவத்தையும் நயத்தையும் மொழிபெயர்ப்பில் செய்வதியலாது.

0.4.2. பண்பாடும் சமயமும் வேறுபட்டவையாயிருக்கும் சூழலில் முற்றிலும் புதிய (அ) அயன்மைச் செய்தியொன்றினை மொழிபெயர்க்கும்போது மொழி

பெயர்ப்பில் விளக்க நடை இடம்பெறுகிறது. இந் நடை செறிவையும் சுவையினையும் கடுமையாக பாதிக்கிறது.

0.4.3. இலக்கண அமைப்பும் புலப்பாட்டுத் திறனும் செய்யுள்மொழியைச்சிறப்படையச்செய்கின்றன. இவற்றில் ஏற்படும் சிக்கல்கள் தவிர்க்க முடியாதவையாகும்.

துணைநூற் பட்டியல்

(Bibliography)

அகத்தியலிங்கம், ச.	*1984*	**பதினாறாவது கருத்தரங்க ஆய்வுக்கோவை, தொகுதி-2.** இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.
அகத்தியலிங்கம் மற்றும் புஷ்பவல்லி	*1977*	**மொழியியல் - 2 வாழ்வும் வரலாறும்,** அனைத்திந்தியத் தமிழ்ப் பொறியாளர் கழகம், அண்ணாமலை நகர், வேலன் அச்சகம், சிதம்பரம்.
இராஜேஸ்வரி, செ.	*1992*	**மொழிபெயர்ப்பியல் ஆய்வு,** செல்லையா பதிப்பகம், மதுரை.
கருணாகரன், கி.	*1975*	**சமுதாய மொழியியல்,** அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.

----------------- 1977 மொழித் திட்டமிடுதல்,
அனைத்திந்தியத் தமிழ்ப்
பொறியியல் கழகம்,
அண்ணாமலை நகர்.

----------------- 1981 மொழிவளர்ச்சி,
மணிவாசகர் நூலகம்,
சிதம்பரம்.

கருணாகரன், கி, மற்றும் ஜெயா.வ. 1985 மொழியியல்,
கவிதா பதிப்பகம்,
சென்னை.

சண்முகவேலாயுதம், சு. 1985 மொழிபெயர்ப்பியல்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

சிவசண்முகம், சி. மற்றும் தயாளன், வே. 1994 மொழிபெயர்ப்பியல்
அன்னம் அகரம்,
சிவகங்கை.

சீனிவாசவர்மா, கோ. 1940 இருமொழியம்
அனைத்திந்தியத் தமிழ்
மொழியியற் கழகம்,
அண்ணாமலை நகர்.

சேதுமணி மணியன் 1990 மொழிபெயர்ப்பியல்
(கோட்பாடுகளும் உத்திகளும்)
செண்பகம் வெளியீடு,
மதுரை.

ஜெயா.வ. 1989 பாரதி மொழிநடை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர்.

ஜான்சாமுவேல், ஜி.	*1982*	**திராவிட மொழிகளின் ஒப்பாய்வு - ஓர் அறிமுகம்** மாதவி பப்ளிகேஷன்ஸ், சென்னை.
நீதிவாணன், ஜெ.	*1978*	**நடையியல்** சர்வோதய இலக்கியப் பண்ணை மதுரை.
பட்டாபிராமன், கா.	*1989*	**மொழிபெயர்ப்புக்கலை** வசந்தசெல்வி பதிப்பகம் தருமபுரி.
முருகன், இரா.சு.	*2000*	**மொழிபெயர்ப்பு நோக்கில் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டுத் தலையங்கமும், தினமணி நாளேட்டுத் தலையங்கமும்,** எம்.ஃபில்., பட்ட ஆய்வேடு, மொழியியல் துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
முருகேசபாண்டியன், ந.	*2008*	**மொழிபெயர்ப்பியல்** உயிர் எழுத்து பதிப்பகம், கருமண்டபம், திருச்சி.
வளர்மதி, மு.	*1987*	**மொழிபெயர்ப்புக்கலை** திருமகள் நிலையம் சென்னை.